இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 147 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 09 சனிக்கிழமை 22.04.2017

## சிறுநீரைக் குடித்து தமிழக விவசாயிகள் இன்று போராட்டம்

சென்னை, ஏப். 22
இந்திய விவசாய அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதையடுத்து தமிழக விவசாயிகள் சிறுநீரைக் குடித்து இன்று போராட்டத்தில் ஈடுபடுவர் என்று அறிவிக்கப்பட்டது.
தேசிய, தனியார்மற்றும்கூட்டுறவு வங்கிகளில் >> 23

## காணிகளை விடுவித்தால் நல்லிணக்கம் உருவாகும்

கூட்டமைப்பினரிடம் கூறினார் யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி

யாழ்ப்பாணம், ஏப். 22
நல்லிணக்கம் உருவாகவேண்டும் என்றால், மக்களின் காணிகளை அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பது முக்கியமானது.
இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் >> 24

# யாழ். குடாநாட்டு காணி விடுவிப்பில் இராணுவம் நழுவல்

மாவட்டச் செயலகத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் உறுதியான முடிவேதும் இல்லை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22
யாழ்ப்பாணக் குடாநாட்டில் படையினர் ஆக்கிரமித்து வைத்துள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் இராணுவம் உறுதியான முடிவு எதனையும் வழங்காமல் நழுவல்போக்கைக் கடைப்பிடித்தது.
இதனால் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற இராணுவத்தினருடனான உயர் மட்டப் பேச்சு உறுதியான முடிவுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் முடிவடைந்தது.
மாற்று அரச காணி வழங்கினால் தாம் பிடித்து வைத்துள்ள தனியார் நிலங்களை விடுவித்து, வழங்கப்படும் அரச காணிக்குத் தமது முகாம்களை இடமாற்றுவோம் என்றும், அரச >> 24

## மைத்திரியின் வர்த்தமானிக்கு வலுக்கிறது கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 22
அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் வர்த்தமானி அறிவித்தல் மனித உரிமை மீறலாக உள்ளது என்று நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பு குறிப்பிட்டுள்ளது.
ஜே.வி.பியும் வர்த்தமானியைக் கண்டித்துள்ளது.
நுகர்வோர் உரிமைக >> 24

## பலாலியை விடுவிக்க உயர்மட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், ஏப். 22
பலாலி வானூர்தி நிலையம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 4 ஆயிரம் ஏக்கர் காணிகள் தொடர் >> 24

## தனியார் காணி விடுவிப்பு மைத்திரி எழுத்தில் உறுதியாம்

யாழ்ப்பாணம், ஏப். 22
தனியார் காணிகள் விடுவிக்கப்படும் என்ற எழுத்துமூலமான உறுதியை, அரச தலைவருக்கான தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப்பட்ட >> 24

## கொழும்பு வெசாக் கொண்டாட்டத்தில் நேபாளத் தலைவரும்

கொழும்பு, ஏப். 22
கொழும்பில் நடக்கவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் கொண்டாட்ட ஆரம்ப நிகழ்வில் இந்தியத்தலைமை அமைச்சரும் இறுதிநாள் நிகழ்வில் நேபாள அரச தலைவரும் கலந்துகொள்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.
ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் தின நிகழ்வு அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது. நேபாள அரச தலைவர் வெசாக் இறுதிநாள் நிகழ்வில் மட்டும் கலந்துகொள்வார் என்று கூறப்பட்டது. (த-4)



## வட்டுவாகலில் இருந்து கடற்படையை அகற்று

முல்லைத்தீவு நகர் ஊடாக நேற்றுப் பேரணி அரச தலைவருக்கும் மனு அனுப்பிவைப்பு

முல்லைத்தீவு, ஏப். 22
தமது காணிகளை விரைவில் விடுவிக்குமாறு கோரி வட்டுவாகல் காணி உரிமையாளர்கள் அரச தலைவருக்குநேற்றுமனுஅனுப்பி வைத்தனர்.
14 நாள்களுக்குள் காணி விடுவிப்புக் குறித்து நல்ல செய்தி கிடைக்க >> 24

## 27 ஆம் திகதி வவுனியாவிலும் முழு அடைப்பு

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலை வலியுறுத்தி

வவுனியா, ஏப். 22
கிளிநொச்சியில் மட்டுமன்றி வவுனியாவிலும்எதிர்வரும்27ஆம் திகதி முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.
வர்த்தகர் சங்கம், பொது அமைப்புக்கள், தனியார் நிறு >> 23

## புதிய அரசமைப்பு மிக அவசியமானது

மகிந்த அணியின் பங்காளி வலியுறுத்தல்

கொழும்பு, ஏப். 22
நிறைவேற்று அரச தலைவர் முறைமை ஒழிப்பு, புதிய தேர்தல் முறைமை, அதிகாரப்பகிர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவது அவசியம் என்று, மகிந்த அணியின் பங்காளிக் கட்சியான >> 24

## மயிலிட்டித்துறைப் பகுதி வெகுவிரைவில் விடுவிப்பு

இருவேறு கூட்டங்களில் நேற்று உறுதி

யாழ்ப்பாணம், ஏப். 22
மயிலிட்டித்துறைமுகம் உள்ளடங்கலாக அந்தப் பிரதேசத்தை பாதுகாப்புத் தரப்பினர் வெகு விரைவில் விடுவிப்பார்கள் என்று நேற்று நடைபெற்ற இருவேறு கூட்டங்களில் உறுதியளிக்கப் >> 23

## மயங்கி விழுந்த கர்ப்பிணி சாவு

இறப்புக்கான காரணத்தை அறிய உடலம் அனுராதபுரத்துக்கு

கிளிநொச்சி, ஏப். 22
மயங்கி விழுந்த கர்ப்பிணியை வைத்தியசாலையில் சேர்த்தபோது அவர் உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.
இறப்புக்கான காரணத்தை அறிய அவரது உட >> 24



## மீதொட்டமுல்ல இடர்; பாதிக்கப்பட்டோருக்கு அரசு பல சலுகைகள்

கொழும்பு, ஏப். 22
"மீதொட்டமுல்ல இடரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் உடனடியாகக் கட்டிக் கொடுக்கப்படுவதுடன், வீட்டுத் தளபாடங்களை வாங்குவதற்கு அவர்களுக்கு 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்படும்.
குப்பை மேடு சரிவு ஏற்படும் அபாயமுள்ள இடங்களிலிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு மாதாந்தம் >> 24

## தொழில் தேடித் திருமலை சென்ற சிறுவன் உடலமாக வந்த பரிதாபம்

முல்லைத்தீவு பாலி நகரில் பெரும் துயரம்

யாழ்ப்பாணம்,ஏப். 22
போரினால் தந்தையை இழந்து குடும்ப வறுமையால் தொழில் தேடி திருகோணமலைக்குச் சென்ற 16 வயதுச் சிறுவன் சடலமாக வீடு வந்து சேர்ந்தான்.
கட்டடமொன்றின் 3 ஆம் மாடியிலிருந்து தவறி விழுந்து படுகாயமடைந்திருந்த நிலையில் >> 23

## துன்னாலையில் நேற்றிரவு பதற்றம்

## இரு கும்பல்களுக்கு இடையே கைகலப்பு

வடமராட்சி, ஏப். 22
வடமராட்சி, துன்னாலையில் இரு கும்பல்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலால் அங்கு நேற்று மாலை பெரும் பதற்றம் ஏற்பட்டது. 2 கும்பல்க >> 23



## அம்பனில் மணல் அகழ்வதா? இறுதி முடிவு திங்களன்றுதான்

யாழ்ப்பாணம், ஏப். 22
அம்பனில் மணல் அகழ்வதா? இல்லையா? என்பது தொடர்பில் நாளை மறுதினம் திங்கட் கிழமையே இறுதி முடிவு எடுக்கப்படும் என்று மாவட்டச் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். அந்தப் பகுதி மக்களுடன் >> 23

# பெரும்போக விதைநெல் கொள்வனவு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

இந்த ஆண்டின் பெரும்போக நெற்செய்கைக்கான விதை நெல்லை கொள்வனவு செய்யும் பணியை மாவட்ட விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்துள்ளது.

5 ஆயிரம் புசல் விதை நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் திட்டமிட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடம் இருந்தே இந்த விதை நெல் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது என்று சங்கத்தின் பொதுமுகாமையாளர் ரவிமயூரன் தெரிவித்தார்.

இதுவரை 2 ஆயிரம் புசல் விதை நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்தும் விவசாயிகளிடம் விதை நெல் கொள்வனவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டில் போதிய மழை வீழ்ச்சி இன்மையால் பெரும்போக நெற்செய்கை பாதிக்கப்பட்டது.

இதனால் போதிய விளைச்சலை விவசாயிகள் பெற்றுக் கொள்ளவில்லை. பெரும்பாலான விவசாயிகள் நெற்செய்கையையும் கைவிட்டிருந்தனர்.

இவ்வாறான நிலையில் இந்த ஆண்டு பெரும்போகச் செய்கைக்கு விதை நெல் தட்டுப்பாடும் ஏற்படலாம் என்று சுட்டிக் காட்டப்பட்டது. (த-17)

# கிராம அலுவலரை தாக்கியதாக நேற்று 16 வயதுச் சிறுவன் பொலிஸாரால் கைது

*தென்மராட்சிக் கிராம அலுவலர்கள் நடத்திய போராட்டத்தை அடுத்து*

தென்மராட்சி ஏப். 22

கிராம அலுவலரைத் தாக்கியதுடன் அவரின் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான அலைபேசியை உடைத்து நொறுக்கினார் என்ற குற்றச்சாட்டில் 16 வயதுச் சிறுவனைக் கைது செய்துள்ளனர் கொடிகாமம் பொலிஸார்.

இந்தச் சிறுவன் நேற்றுச் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை அச்சுவேலி சான்று பெற்ற பாடசாலையில் சேர்த்து எதிர்வரும் மூன்றாம் திகதி அடையாள அணிவகுப்புக்காக நீதிமன்றில் முற்படுத்துமாறு நீதிமன்றப் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மூன்று தினங்களாக வீடு ஒன்றில் இரவு பகலாகப் பாடல்கள் ஒலிபரப்பப்படுவதால் இடையூறு ஏற்படுவதாக அல்லாரைப் பகுதி மக்கள் அங்கு சென்றிருந்த தமது கிராம அலுவலரிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முறையிட்டனர்.

குறித்த வீட்டுக்குச் சென்ற கிராம அலுவலர் வீட்டுக்காரரை அழைத்து பாடல் ஒபிபரப்புவதை நிறுத்துமாறு கூறினார். வீட்டுக்காரர் பாடல் ஒலிபரப்புவதை நிறுத்தியுள்ளார். இதனையடுத்து அங்கு நின்ற மூவர் வீட்டுக்காரர் முன்னிலையில் கிராம அலுவலரை மோசமாகத் தாக்கியதுடன் அவரிடமிருந்த 35 அயிரம் ரூபா பெறுமதியான அலைபேசியையும் பறித்து உடைத்துள்ளனர்.

இது குறித்துக் கிராம அலுவலர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் பி.ப.3.15 மணிக்கு முறைப்பாடு செய்துள்ளார். இரவு 7.45 மணிக்கே பொலிசார் சம்பவ இடத்துக்குக் கிராம அலுவலரையும் அழைத்துக் கொண்டு சென்றுள்ளனர். அவ்வேளை அங்கு எவரும் இருக்கவில்லை. பாடல் ஒலிபரப்பப்பட்ட வீடும் பூட்டியிருந்ததால் அவர்கள் பொலிஸ் நிலையத்துக்குத் திரும்பியுள்ளனர்.

மறுநாள் இது தொடர்பாகப் பிரதேச செயலரிடம் முறையிட்ட கிராம அலுவலர், சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

கிராம அலுவலரைத் தாக்கியவர்களைப் பொலிஸார் கடந்த புதன்கிழமை வரை கைது செய்யாமையால் விசனமடைந்த தென்மராட்சிப் பிரதேச கிராம அலுவலர்கள், பொலிஸாரின் நடவடிக்கையைக் கண்டித்துப் பிரதேச செயலகம் முன்பாக ஒரு மணி நேரப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதில் பிரதேச செயலக அலுவலர்களும் பங்கேற்றனர்.

கடமை நேரத்தில் தமக்குப் பாதுகாப்பு இல்லையெனப் பிரிவு அலுவலகங்களுக்குக் கடமைக்குச் செல்ல மறுத்த கிராம அலுவலர்கள், கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலகத்தில் ஒப்பமிட்டுவிட்டு வெளியே நின்றிருந்தனர். நேற்றும் அவ்வாறே செய்தனர். கிராம அலுவலரைத் தாக்கியவர்களைக் கைது செய்வதில் பொலிஸார் அக்கறை காட்டாமையால் எதிர்வரும் திங்கட்கிழமை வரை கடமைக்காகத் தமது பிரிவு அலுவலகங்களுக்குச் செல்வதில்லையெனவும், திங்கட்கிழமைக்குள் தாக்குதல் நடத்திய நால்வரையும் நீதிமன்றில் முற்படுத்தாவிடின் மறுஅறிவித்தல் வரை போராட்டத்தில் இறங்கவுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இந்நிலையில் இந்தக் குற்றச்சாட்டில் கச்சாய் வடக்கைச் சேர்ந்த 16 வயதுச் சிறுவனைக் கைது செய்துள்ள பொலிஸார் நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# நெல் வயல்களில் குழாய்க் கிணறு அமைப்போர் மீது சட்ட நடவடிக்கை

## உர மானியம், நீர்ப்பங்கு நிறுத்தப்படும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 22

கிளிநொச்சியில் வயல்களில் குழாய்க் கிணறு அமைத்து விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மானிய உரம் மற்றும் நீர்ப்பங்குகளை உடனடியாக நிறுத்துமாறு மாவட்டச் செயலர் சு.அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்றைய கூட்டத்தில் பல தீர்மானங்களும் எட்டப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலத்தடி நீரைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. அதிலும் குறிப்பாக விவசாயிகள் அதிக கவனம் எடுக்கவேண்டும். கிணற்று நீரில் மரக்கறிச் செய்கையில் ஈடுபடலாமே அன்றி விவசாயம் மேற்கொள்ள முடியாது.

தற்போது மாவட்டத்தில் பல விவசாயிகள் கிணற்று நீர் மூலம் விவசாயம் மேற்கொள்வது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அவை உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இதன்படி வயல் பகுதிகளில் தோண்டப்பட்ட கிணறுகள் மற்றும் குழாய்க் கிணறுகள் உடனடியாக மூடப்படாது விவசாய நடவடிக்கை தொடர்ந்தால் நீர் மாசடைவதோடு அயலில் உள்ள கிணறுகளிலும் நீர் வற்றும் அபாயமே உள்ளது.

இதனால் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் கிணற்று நீரின் மூலம் விவசாயம் மேற்கொள்வது தடை செய்யப்படுவதுடன் அவ்வாறான விவசாயிகளின் மானிய உரம் மற்றும் நீர்ப்பங்குகளும் உடன் நிறுத்தப்படும்.

எனவே உடனடியாக விவசாயிகள் இதனை நிறுத்தவேண்டும். தவறும் பட்சத்தில் குறித்த இரு தடை நடவடிக்கையும் இடம்பெறுவதோடு சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

கடந்த காலபோக நெற்செய்கைக்காகப் பலராலும் தோண்டப்பட்ட கிணறுகளில் சில மூடப்பட்டபோதும் இன்னும்பலகிணறுகள் மூடப்படவில்லை. அந்தக் கிணறுகளும் உடனடியாக மூடப்படவேண்டும்.

2017 ஆம் ஆண்டு சிறுபோகம் மேற்கொள்ளத் தீர்மானித்த பகுதியில் அத்துமீறிய பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்களின் பெயர்கள் நீர் வரி இடாப்பில் இருந்து நீக்கப்படும் போன்ற தீர்மானங்கள் எட்டப்பட்டன. (த-101)

# அரசுக்கு எதிராக விரைவில் வழக்கு

*ஜே.வி.பி தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 22

மீதொட்டமுல்ல இடருக்கு அரசு பொறுப்புக் கூறவேண்டும் என்று கோரி அரசுக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தெரிவித்தது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சியின் தலைமையக் காரியாலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் சுனில் வடகல இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குற்றவியல் சட்டம் 298 இன் அடிப்படையில் அரசுக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது. வழக்குத் தொடர்வது குறித்து சட்டத்தரணிகளுடன் ஆலோசித்து வருகிறோம். மீதொட்டமுல்ல இடர் ஓர் இயற்கை இடரல்ல. அது ஓர் கொலை.

குப்பைமேட்டின் அபாயம் குறித்து ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், அதனை நகரசபை நிர்வாகமும் அரசியல்வாதிகளும், இடர்முகாமைத்துவஅமைச்சும் உதாசீனம் செய்துள்ளது - என்றார்.

இதேவேளை, போர் தொடர்பில் அதிக கவனம் செலுத்தியமையினாலேயே மீதொட்டமுல்ல குப்பைமேட்டை அப்புறப்படுத்தமுடியாது போனதாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

ஆட்சிக் காலத்தின் இறுதியில் அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்ட போதிலும், அதனை நடைமுறைப் படுத்த முடியாது போனதாக அவர் குறிப்பிட்டார்.

அநுராதபுரம் சிறிமகா விகாரையில் நேற்றுமுன்தினம் வழிபாடுகளில ஈடுபட்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு மகிந்த இவ்வாறு தெரிவித்தார். (த-4)

*இந்துக் குருமார்களின் பரிந்துரையையடுத்து*

# மல்லாகம் ஆலயத் திருவிழாவை நடத்துவதில் இரு தரப்பும் இணக்கம்

மல்லாகம், ஏப். 22

பன்னாட்டு இந்துமதக் குருமார் பீடத்தைச் சேர்ந்த குருமார்களின் பரிந்துரையை ஏற்று மல்லாகம் காளிகாதேவி அம்மன் ஆலயத் திருவிழாவை முன்னர் தீர்மானித்த திகதியிலிருந்து 4 தினங்கள் தாமதமாக ஆரம்பிப்பதற்கு நிர்வாக சபையினர் சம்மதம் தெரிவித்தனர். இதனையடுத்து அந்தப் பகுதி மக்களால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட வழக்கு இரு தரப்பு இணக்கத்துடன் முடிவுக்கு வந்தது.

மல்லாகம் மத்தியில் உள்ள பழம்பதி முருகன் ஆலயம், காளிகாதேவி அம்மன் ஆலயம் ஆகிய இரண்டு ஆலயங்களிலும் ஒரே காலப்பகுதியில்வருடாந்தத்திருவிழாக்களை நடத்த வேண்டும் என்று காளிகாதேவி அம்மன் ஆலய நிர்வாகத்தினர் முடிவெடுத்தனர். அந்த முடிவை ஏற்க மறுத்த ஆலய உபயகாரர் மற்றும் அந்த ஊர் மக்கள் மல்லாகம் மன்றில் ஆட்சேபனை மனுவைத் தாக்கல் செய்தனர்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றின் நீதிபதி அந்தோனிப்பிள்ளை ஜீட்சன் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விளக்கத்துக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் சட்டத்தரணி வி. திருக்குமரன், எதிர் மனுதாரர்களான ஆலய நிர்வாக சபையினர் சார்பில் சட்டத்தரணி சுகாஸ் ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர்.

நீதிமன்றின் அழைப்புக்கு அமைவாக பன்னாட்டு இந்துமதக் குருமார் பீடத்தைச் சேர்ந்த 5 குருக்கள் மன்றில் தோன்றினர். காளிகாதேவி அம்மன் ஆலய நிர்வாகத்தினர் திட்டமிட்டுள்ள கொடியேற்ற நாளை ஆகம விதிகளின் பிரகாரம் 4 நாள்கள் பின்னால் கொண்டு செல்ல முடியும் என்று இந்துக் குருமார்கள் பரிந்துரைத்தனர்.

இந்துக் குருமார்களின் பரிந்துரையை காளிகாதேவி ஆலய நிர்வாகத்தினரும் வழக்குத் தொடுனர்களும் ஏற்றுக்கொண்டனர். இரு தரப்பு இணக்கத்துடன் வழக்கு முடிவுறுத்தப்படுவதாக நீதிபதி அறிவித்தார். (வ)

# வீதியால் சென்ற பெண்ணிடம் சங்கிலி கொள்ளை

கரணவாய் விழுந்தாலடிப்பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த பெண்ணின் தங்கச்சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் கொள்ளையிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றது.

இது தொடர்பாக சங்கிலி பறிகொடுத்த பெண்ணால் நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-108)

# இடிதாங்கி திருடிய சிப்பாய்கள் உட்பட 9 பேர் மறியலில்

கொழும்பு, ஏப். 22

இடி தாங்கியை (மின்னல் கடத்தி) கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் இராணுவத்தினர் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு நாரஹென்பிட்டி சுத்தப்படுத்தும் நிலையம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த இடிதாங்கியே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

சுமார் 200 கோடி ரூபா பெறுமதியான இந்த இடிதாங்கியை கொள்ளையிட்டதாகக் கூறப்படும் இரண்டு இராணுவத்தினர், நான்கு வர்த்தகர்கள் உட்பட 9 பேரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஜெயராமன் ட்ரொஸ்கி நேற்று உத்தரவிட்டுள்ளார்.

9 சந்தேக நபர்களில் 8 பேரை எதிர்வரும் 24 ஆம் திகதி அடையாள அணிவகுப்பில் நிறுத்துமாறும் நீதிவான் பணித்துள்ளார். (த-4)

# தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் பணிப்புறக்கணிப்பு நேற்றுடன் முடிவு

## வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வழங்கிய உறுதிமொழியை அடுத்து

வவுனியா, ஏப். 22
தொடருந்துக் கடவைக் காப்பாளர்களின் பணிப்புறக்கணிப்பு வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் வாக்குறுதியையடுத்து நேற்று முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதனையடுத்து நேற்றுமுதல் அவர்கள் பணிக்குத் திரும்பியுள்ளனர் எனச் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.
இது குறித்து வடக்கு, கிழக்கு மாகாணத் தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் றொகான் ராஜ்குமார் தெரிவித்ததாவது:
வடக்கு,கிழக்குமாகாணத்தின் தற்காலிகத் தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் கடந்த 10ஆம் திகதி முதல் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு வந்தோம். கடந்த 19ஆம் திகதி வவுனியாவில் மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பேராட்டம் காரணமாக அன்றைய தினம் வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் சந்திப்பு இடம்பெற்றது. அடுத்த மாதம் வவுனியாவுக்குவருகைதரவுள்ள அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோருடன் தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் ஒரு சுமுகமான கலந்துரையாடல் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்து தருவதாகத் தென்னக்கோன் உறுதியளித்தார்.
இதனையடுத்து நேற்றுக் காலை 6 மணி தொடக்கம் போராட்டத்தைக் கைவிட்டுப் பணிக்குத்திரும்பியுள்ளோம் - என்றார். (த-4)

# அகிம்சைவாதியின் சிலையைத் திறந்து வட்டுவாகல் மக்கள் நேற்றுக் கவனவீர்ப்பு

## அடையாள உணவு ஒறுப்பிலும் ஈடுபட்டனர்

முல்லைத்தீவு, ஏப். 22
முல்லைத்தீவு நகரில் புதிதாக அமைக்கப்பட்ட மகாத்மா காந்தியின் சிலையைத்திறந்துவைத்த வட்டுவாகல் காணி உரிமையாளர்கள், ஒருநாள் அடையாள உணவு ஒறுப்பைக் கடைப்பிடித்துத் தங்கள் தொடர் அமைதிவழிப் போராட்டத்துக்கு மேலும் வலுச் சேர்த்தனர்.



வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி. சிவமோகனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து முல்லைத்தீவு நகரில் நிர்மாணிக்கப்பட்ட மகாத்மா காந்தியின் சிலை நேற்று 12 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.
வட்டுவாகல் காணியை விடுவிக்கக் கோரித் தொடர் அமைதி வழிப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் சிலையைத் திரைநீக்கம் செய்து வைத்தனர்.
தமது காணிகளை விடுவிக்கக் கோரி அரச தலைவருக்கான மனுவை மாவட்டச் செயலரிடம் வழங்குவதற்காக வட்டுவாகலில் இருந்து கால்நடையாக ஊர்வலமாக வந்த மக்கள், நகரின் மத்தியில் அமைக்கப்பட்ட மகாத்மா காந்தியின் சிலையைத்திறந்துவைத்ததுடன் அடையாள உணவு ஒறுப்பிலும் ஈடுபட்டனர். இதில் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி. சிவமோகனும் கலந்து கொண்டார்.
அங்கு வந்திருந்த மக்கள் தெரிவித்ததாவது:
நாட்டில்நல்லாட்சி மலர்ந்த பின்னர் எங்கள் காணிகள் வழங்கப்படும் என்ற நம்பிக்கையில்தான் இத்தனைநாளாக அமைதியாக இருந்தோம்.



அந்த அமைதியைக் குலைத்தது இந்த அரசு தான். வட்டுவாகல் முல்லைத்தீவின் இதயம். முல்லைத்தீவின் இதயத்தை மீட்டெடுக்க வேண்டியது எங்கள் கடமை. வட்டுவாகலின் ஒருபக்கத்தை கடற்படையும், மற்றொரு பக்கத்தை இராணுவமும் வளைத்துப் போட்டுக்கொண்டு எங்கள் வாழ்வில் மண்ணை அள்ளிக் கொட்டுகிறார்கள். இந்தச் செயலால் எத்தனை குடும்பங்கள் வாழ்வாதாரத்துக்காகச் சிரமப்படுகின்றார்கள் என்று இந்த நல்லாட்சி அரசுக்குத் தெரியுமா? என்றனர். (த-7)

# மது உற்பத்தி நிலையத்தை தடை செய்ய கோரிப் பேரணி

செங்கலடி, ஏப். 22
மட்டக்களப்பு கல்குடாப் பிரதேசத்தில் அமைக்கப்படும் எரிசாராய உற்பத்தி நிலையத்தைத் தடை செய்யுமாறு கோரி நேற்று வெள்ளிக்கிழமை ஏறாவூரில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.
அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் ஏறாவூர்க் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற கவனவீர்ப்புப் பேரணியில் சமூக அமைப்பு மற்றும் இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
வெள்ளிக்கிழமை



சிறப்புக் கூட்டுத் தொழுகையின் பின்னர் நடத்தப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தையடுத்து அரச தலைவருக்கான மனுவைச் சபையின் தலைவர் மௌலவி எம்.எஸ்.எம் நிராஸ் தலைமையிலான பிரதிநிதிகள் பிரதேச உதவிச் செயலர் எம்.ஏ.சி றமீஸாவிடம் கையளித்தனர். (த)

# கடும் வெப்பத்தினால் கால்நடைகள் பாதிப்பு

கிளிநொச்சி, ஏப் 22
கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும்கடும்வெப்பம்காரணமாகக் கால்நடைகள் பாதிக்கப்படுவதாகக் கால்நடை வளர்ப்போர் தெரிவித்துள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மை நாள்களாக கடும் வெப்பம் நிலவி வருகின்றது. இதனால் குளங்களில் நீர் மட்டம் குறைவடைந்துள்ளது. புல்வெளிகள் எல்லாம் வெப்பத்தால் கருகிவிட்டன. இதனால் கால்நடைகள் நீர் மற்றும் உணவு இல்லாமல் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன. பால் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது.
தற்போது பிறக்கும் கன்றுகள் வளர்ச்சி குறைந்த நிலையில் உள்ளன.
இதற்குக் காரணம் கடுமையான வெப்பநிலையே எனக் கால்நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர்.
கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகள் தொடர்பாக ஆராயப்பட்டபோதும் அவை குறித்து உறுதியான முடிவெதுவும் எடுக்கப்படவில்லை.
மேய்ச்சல் தரைகளுக்குப் பிரதேச ரீதியாக இடங்கள் ஒதுக்கப்பட்டபோதும் வனவளத் திணைக்களத்தின் செயற்பாடு காரணமாக அதனை நடைமுறைப்படுத்த முடியாத நிலை உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-6)

## கண்டாவளை வெல்ல ஆலை மூலம்

# 30,000 கிலோ வெல்லம் இந்த வருடம் உற்பத்தி

கிளிநொச்சி, ஏப். 22
கண்டாவளை வெல்ல உற்பத்தித் தொழிற்சாலை மூலம் இந்த வருடம் 30 ஆயிரம் கிலோ வெல்லத்தை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைமுன்னெடுக்கப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் எஸ். துரைசிங்கம் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பனை வெல்லத்தை மக்கள் அதிகளவில் கொள்வனவு செய்து வருகின்றனர். கடந்த வருடம் அதிகளவு வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டது.
தற்போது மக்கள் மத்தியில் அதிகளவில் காணப்படும் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் பனை வெல்லத்தை மக்கள் கொள்வனவு செய்கின்றனர். உள்ளூர் மக்கள் மட்டும் அல்ல வெளிநாடுகளில் வாழும் மக்களும் வெல்லத்தைக் கொள்வனவு செய்கின்றனர். இதனால் வெல்ல உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது - என்றார். (த-4)

# ஒலுமடு வித்தியாலயத்தில் விரைவில் உயர்தர வகுப்பு

## வடக்கு மாகாணக் கல்வி அதிகாரிகள் நேரில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஏப். 22
வவுனியா வடக்குக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஒலுமடு வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவை ஆரம்பிப்பது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகள் குழு நேற்று முன்தினம் நேரில் சென்று ஆராய்ந்தது.
ஒலுமடு வித்தியாலயத்தில் தற்போது க.பொ.த சாதாரண தரம் வரை மட்டுமே உள்ளது. இதனால் உயர்தரக்கல்வியைப் பெறுவதற்காக மாணவர்கள் நெடுங்கேணி அல்லது முள்ளியவளைக்கு வரவேண்டிய நிலை காணப்படுகிறது.
குறித்த பாடசாலையில் வருடாந்தம் சுமார் 20 தொடக்கம் 25 வரையான மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இதில் 15 வரையான மாணவர்கள் உயர்தரம் கற்கத் தகுதி பெறுகின்றனர். கடந்த ஆண்டு சாதாரண தரப் பரீட்சையில் 21மாணவர்கள் தோற்றினர். இதில் 14 மாணவர்கள் உயர் தரத்துக்குத் தகுதி பெற்றுள்ளனர். எனவே குறித்த பாடசாலையில் உயர் தர வகுப்பை ஆரம்பிப்பதற்கான அனுமதியை வழங்குமாறு பாடசாலைச் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.
இவை தொடர்பில் நேரில் ஆராய்ந்து இறுதி முடிவை எடுப்பதற்காக வடக்கு மாகாணக்கல்வி அமைச்சர் த.குருகுலராசா, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் நேரில் சென்று ஆராய்ந்தனர். (த-101)




# கந்தபுராணம் தமிழ்நாட்டில் தோற்றம் பெற்றாலும் அதன் கலாசாரத்தைப் பின்பற்றுவது யாழ்ப்பாணமே

## 2ஆவது உலக சைவ மாநாட்டில் தமிழகப் பேராசிரியர் புகழாரம்

யாழ்ப்பாணம், ஏப். 22

"யாழ்ப்பாண மண்ணுக்கு என்று ஒரு பெயர் உள்ளது. அதனை நாம் எப்போதும் பாதுகாக்க வேண்டும். சைவ சமயத்தவர்களின் முதன்மையான நூல்களில் ஒன்றான கந்தபுராணம் தோற்றம் பெற்றது தமிழ்நாடாக இருந்தாலும் அதன் கலாசாரத்தைப் பின்பற்றுவது யாழ்ப்பாணம்தான்"

இவ்வாறு ஆதாரசுருதி உரைஞர், சென்னைப் பல்கலைக் கழகத்தின் சைவ சிந்தாந்தத் துறைப் பேராசிரியர் எஸ்.பி.சபாரத்தினம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையினரின் இரண்டாவது உலக சைவ மாநாடு யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று ஆரம்பமானது.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டின் முதலாம் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்துகொண்டார். இந்த மாநாட்டில் சைவ சித்தாந்த மேன்மைகள் பற்றியும், இலங்கையரின் சைவ சித்தாந்தப் பங்களிப்புப் பற்றியும் 131 ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல் வெளியிடப்பட்டது.

நிகழ்வில் யாழ்ப்பாண இராமநாதன் நுண்கலைப் பீட நடனப் பிரிவு மாணவிகளால் முதன் முதலாக சிவபுராணம் ஆற்றுகை நடன நிகழ்வு இடம்பெற்றது. இது அனைவரின் பாராட்டையும் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சென்னைப் பல்கலைக் கழகத்தின் சைவ சிந்தாந்தத் துறைப் பேராசிரியர் எஸ்.பி.சபாரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ், சமயம், ஆகமம் இவற்றை நாம் பிரித்துப் பார்க்கக்கூடாது. சைவ சமயத்தின் வலிமையைக் கூறும் ஆகமம் என்பது 15 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது. அதன்படி சமயத்துக்கு ஒவ்வொரு நூல்கள் தோற்றம் பெற்றன. அதிலே குறிப்பாக கந்தபுராணம் தோன்றியது தமிழ்நாடாக இருந்தாலும் அதனை வளர்த்தது இந்த யாழ்ப்பாணமே. தொல்காப்பியத்தை பலர் பல்வேறு உரை நடைகளிலே எழுதி இருந்தார்கள். ஆனால் ஈழத்து புலவர் கணேஷ் ஐயர் எழுதிய தொல்காப்பிய உரைநடையே சிறந்தது. தமிழ் நாட்டிலே தோற்றம் பெற்ற மிக அருமையான நூல்களை அங்கே உள்ளவர்கள் பெரிதாக மதிப்பது கிடையாது. அதன் அருமை அவர்களுக்குப் புரியாது. ஆனால் இங்கே ஈழத்தில் உள்ளவர்கள் அதனை உணர்ந்து சமயம், தமிழ் என்பவற்றை வளர்க்கப் பாடுபடுகின்றார்கள்.

ஒரு நிகழ்வாக இருந்தால் தமிழ் நாட்டில் நான் பார்த்த, தெரிந்த பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் இவ்வாறு பொறுமையாக நிகழ்வுகளைகடைசிமட்டும்இருந்து பார்க்க மாட்டார்கள். ஆனால் இங்கே எல்லாம் புதுமையாக இருகின்றது. எல்லோரும் இந்த நிகழ்வின் இறுதி வரை இருந்து செவி மடுக்கின்றீர்கள் - என்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் உரையாற்றும் போது " இன்று இளவல்களுக்கு இந்து சமயம், தமிழ் பற்றித் தெரியாது. சமயம் ஒரு பாடமாக இருப்பதால் தேவாரம் பற்றி எமது மாணவர்கள் தெரிந்து கொள்கின்றார்கள். இவை இரண்டையும் நாம் பாடமாகப் படிக்காமல் எமது வாழ்க்கையாகப் பார்க்க வேண்டும். பிள்ளைகளுக்கு இதை செய்யாதே என்று பெற்றோர்கள் சொல்வது குறைவு. அவர்கள் செய்வது சரி என்று நினைத்து அப்படியே விட்டு விடுகிறார்கள். எமது தமிழையும் சமயத்தையும் நாம் வளர்க்க விழா எடுக்காமல், வேறு எந்தப் பல்கலைக்கழகம் விழா எடுக்கும். ஆகவே சமயம் போலவே தமிழுக்கும் ஒரு விழா எடுத்து எமது முன்னோர்கள் வளர்த்த தமிழையும் சமயத்தையும் வளர்க்க வேண்டும்" என்றார்.

"எமது நாட்டின் அடையாளம் ஆன சைவ சமயத்தையும் தமிழையும் வளர்க்கவும், எமது முன்னோர்கள் கொடுத்த இந்து சமயம் தமிழ் என்பவற்றை நாம் பேணிப் பாதுகாக்கவும்வேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் தமிழ், சமயம் என்பன





இல்லாமல் போய் அரும்பொருள் காட்சியகத்தில் பொருள்களைப் பார்ப்பது போல சில சுவடுகளை மாத்திரம் எமது அடுத்த தலைமுறை பார்க்க நேரிடும். சைவ சித்தாந்தம் வளர்ந்தது என்றால் அதற்கு ஈழத்தவர்களே காரணம்" என்று வாழ்த்துரை வழங்கிய தகைசார் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவித்தார்.

(வ-21-ரி)

# தமிழரின் பிரச்சினைகளுக்கு தொடர்ந்து குரல் கொடுப்பேன்

## நடிகர் சத்தியராஜ் உறுதி

"தமிழீழ மக்களின் பிரச்சினை, காவிரி நதிநீர் பிரச்சினை, விவசாயிகளின் பிரச்சினை, தமிழக மக்களின் நலன் சார்ந்த அனைத்து நியாயமான பிரச்சனைகளுக்கும் தொடர்ந்து குரல் கொடுத்து கொண்டே இருப்பேன். ஒரு தமிழனாக இருப்பதும், இறப்பதும்தான் எனக்கு பெருமை, மகிழ்ச்சி"

இவ்வாறு தென்னிந்திய நடிகர் சத்யராஜ் தெரிவித்தார்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால், காவிரி நதிநீர் பிரச்சினையின்போது, நடிகர் சத்யராஜ் பேசியபோது சில வார்த்தைகள் கர்நாடக மக்களின் மனங்களைப் புண்படுத்தின என்பதால், அவர் மன்னிப்பு கேட்கும்வரை சத்யராஜ் நடித்துள்ள பாகுபலி திரைப்படத்தின் இரண்டாம் பாகத்தை கர்நாடகத்தில் திரையிட அனுமதிக்கமாட்டோம் என்று கர்நாடக அமைப்புகள் சில கூறிவந்தன.

இந்தநிலையில், பாகுபலி திரைப் படத்தின் இரண்டாம் பாகம் விரைவில் வெளியாகவுள்ளதால், சத்யராஜ் இந்த வருத்தத்தை வெளியிட்டுள்ளார்.

"நான் கர்நாடக மக்களுக்கு எதிரானவன் அல்ல. எனது உதவியாளராக கடந்த 35 ஆண்டுகளாக பணியாற்றும் சேகரின் தாய்மொழி கன்னடம். ஒரு நடிகனாக இருப்பதைவிட, இறப்பதைவிட, எந்தவிதமான மூட நம்பிக்கையும் இல்லாத ஒரு தமிழனாக இருப்பதும், இறப்பதும்தான் எனக்கு பெருமை, மகிழ்ச்சி"

பாகுபலி இரண்டாம் பாகம் திரைப்படத்தில் சிறியதொரு பகுதியில்தான் நடித்துள்ளேன். என்னால் பல ஆயிரம் பேரின் உழைப்பும், பணமும் விரயமாவதை விரும்பவில்லை. இந்தத் திரைப்படத்தை வாங்கியுள்ள கர்நாடக வழங்குநர்களும், திரையரங்கு உரிமையாளர்களும் பாதிக்கப்படாமல் பாதுகாக்கத்தான் இந்த முடிவை எடுத்துள்ளேன்.

ஆனால், தமிழீழ மக்களின் பிரச்சினை, காவிரி நதிநீர் பிரச்சினை, தமிழக மக்களின் நலன் சார்ந்த அனைத்து நியாயமான பிரச்சினைகளுக்கும் தொடர்ந்து குரல் கொடுத்து கொண்டே இருப்பேன்.

இவ்வாறு உறுதிபட தெரிவிப்பதால், எதிர்காலத்தில் சத்யராஜை வைத்து படம் எடுத்தால் பிரச்சினைகள் வரும் என்று எண்ணும் தயாரிப்பாளர்கள், என்னை தங்களின் படங்களில் ஒப்பந்தம் செய்ய வேண்டாம்" என்று நடிகர் சத்யராஜ் தெரிவித்தார். (வ-5)

# அரச தலைவராவதற்கு விரும்பமாட்டார் பசில்

## மகிந்த அணி கூறுகிறது

கொழும்பு, ஏப். 22

அரச தலைவராகும் கனவில் பசில் ராஜபக்ச இல்லை. அடுத்த அரச தலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்ச போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டால் பசில் உடனே நாட்டைவிட்டு வெளியேறிவிடுவார் என்று மகிந்த அணியின் புத்தள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிசாந்த தெரிவித்துள்ளார்.

>> 24

# புத்தளத்துக்குச் செல்லும் கொழும்புக் குப்பைகள்

கொழும்பு, ஏப். 22

கொழும்பில் உள்ள குப்பைகள் அனைத்தையும் புத்தளத்துக்குக் கொண்டு செல்வதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

மீதொட்டமுல்ல குப்பை

>> 23

# புங்குடுதீவு வீட்டுத் திட்டத்தின் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பம்

புங்குடுதீவு, ஏப். 22

தீவகம், புங்குடுதீவில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுத் திட்டத்தில் 25 குடும்பங்களுக்கான வீடுகளை அமைக்கும் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பமாகும் என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்ட பணிப்பாளர் எம்.ரவீந்திரன் தெரிவித்தார்.

"தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுத் திட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான வீடமைப்புப் பணிகள் பல்வேறு பிரதேசங்களில் தற்போது நடைபெற்று வருகின்றன. புங்குடுதீவு பிரதேசத்தில் 25 குடும்பங்கள் வீட்டுத் திட்டத்துக்கு தெரிவானார்கள். அவர்களுக்கு அரச காணியை வழங்குவதற்கான உரிய ஆவணங்களை வேலணைப் பிரதேச செயலகம் தற்பொழுது வழங்கியுள்ளது.

பயனாளிகளுக்கு தலா 5 லட்சம் ரூபா வழங்கப்படும். ஒப்பந்தக்காரர்களை அணுகி வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கான உதவிகளை வழங்குவதற்கு புங்குடுதீவிலுள்ள மேற்பார்வையாளர்களுடன் சமூக ஆர்வலர்களையும் உள்ளடக்கிய குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் உதவி மூலம் கட்டடப் பொருள்களை நியாமான முறையில் தரமாக கொள்வனவு செய்து கட்டட வேலைகளை மேற்கொள்ள முடியும்" என்று வீடமைப்பு அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்ட பணிப் பாளர் மேலும் தெரிவித்தார். (வ-ரி)

# ஓவியக் கண்காட்சி இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், ஏப்.22

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓவியக் கலைஞர்களின் ஓவியங்கள் காட்சிப்படுத்தல் இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை யாழ்ப்பாணம், திருநெல் வேலி, 'திண்ணை' விருந்தி னர் விடுதியில் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-21)

# இடர் பாதித்தோரில் 30 குடும்பங்களுக்கு வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 22

மீதொட்டமுல்ல இடரில் பாதிக்கப்பட்டவர்களில் 30 குடும்பங்களுக்கு நேற்று வீடுகள் வழங்கப்பட்டன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வீடுகளைக் கையளித்தார்.

இந்த நிகழ்வு இடர் முகாமைத்துவ அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இது தொடர்பில் அரச

>> 24

# கணித, விஞ்ஞான ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பிக்க மே 5 வரை கால நீடிப்பு

## வடக்கு கல்விச் செயலர் அறிவிப்பு

"வடக்கு மாகாணத்தில் நிலவும் கணித , விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகளிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. எனினும் அதன் விண்ணப்ப கால எல்லையை நீடிக்குமாறு பட்டதாரிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக எதிர்வரும் 5ஆம் திகதி வரை அவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது" இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

"வடக்கு மாகாணத்தில் நிலவும் கணித , விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கோரலில் 456 விண்ணப்பங்கள் கிடைத்தன. அவற்றில் 162 பட்டதாரிகள் இரு பாடங்களுக்கும் விண்ணப்பித்திருந்தனர். இதனால் 294 பட்டதாரிகள் மட்டுமே மொத்தம் 456 விண்ணப்பங்களையும் முன்வைத்தனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இந்த நிலையில் வேலைதேடும் பட்டதாரிகள் சார்பில் கணித, விஞ்ஞான பாடங்களுக்கான பட்டதாரிகள் வடக்கு மர்காணத்தில் மேலும் பலர் உள்ளனர் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. எனவே அவர்கள் விண்ணப்பிப்பதற்கு சிறிது கால நீடிப்பு வழங்குமாறும் ஆளுநர் ஊடாகப் பட்டதாரிகள் கோரிக்கை முன்வைத்தனர். தற்போது கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கான பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதி வரையில் கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது" என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (வ-101)


### விற்பனைக்கு

கலப்பற்ற ஊர்க்கோழிக்குஞ்சுகள் - ரூ.65/=
கிரிராஜா ஊர்க்கோழிக்குஞ்சுகள் (முட்டை இடுபவை) -ரூ-1200/=
நியூ பேனாட் (New Bernards) புறொயிலர் குஞ்சுகள்,முட்டைக்குஞ்சுகள்சிவப்பு/வெள்ளை
முற்பதிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.
076 6300799



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவக ஆசிரியர்
திரு.அ.ஸ்ரீரஞ்சன் BA (ஸ்ரீ மாஸ்டர்)
அவர்கள் க.பொ.த (சா/த - 2016) பரீட்சையில் கல்வி கற்ற நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களைச் சித்தியடையச் செய்தமைக்காக பாராட்டுத் தெரிவிப்பதுடன் அவரது பணிகள் மென் மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.
கல்வி கற்ற மாணவர்கள்



### சிவன் ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்
076 585 9977 , 077 835 7307
துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்
மெய்யன்பர்களே !
இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது. வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.
100% உத்தரவாதம்
இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)
யாழ்ப்பாணம்.
நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

### விற்பனைக்குண்டு

புதிய இந்தியன் சாறிகள்
விற்பனைக்குண்டு.
FB: Pleats
077 196 6773

### வான் விற்பனைக்கு

டொல்பின் வான் விற்பனைக்கு
59 xxxx
077 844 6089

### தேவை

Shuttering வேலை. Carpenters பார்பெண்டர்கள். மேசன்மார் மற்றும் உழைப்பாளிகள் கொழும்புக்கு தேவைப்படுகிறது.
077 863 2183/ 077 343 1269

### வீட்டுப்பணிப்பெண் தேவை

சுன்னாகத்தில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி நின்று சகல வேலைகளும் செய்யக்கூடிய 40-60 வயதுக்கு உட்பட்ட பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித்தீர்க்கலாம்.
077 877 2380

### மணமகள் தேவை

- 89 இல் பிறந்த 8 இல் சூரியன் செவ்வாய் 103 பாவமுடைய தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் பட்டதாரி மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 88 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 7 பாவமுடைய B.Sc , இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 17½ பாவமுடைய இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 85 இல் பிறந்த 12 இல் சூரியனும் செவ்வாயும் 14 பாவமுடைய பிரானஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 89 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 21¼ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு லண்டனில் மணமகள் தேவை.
- 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 26¾ பாவமுடைய நோர்வே பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 13¾ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த ம்ணமகள் தேவை.
- 87 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 9½ பாவமுடைய அவுஸ்ரேலியா பிரஜா உரிமை பெற்ற Phd இஞ்சினியர் மணமகனுக்கு இஞ்சினியர் அல்லது எக்கவுண்டன் மணமகள் தேவை.
- 83 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 25 பாவமுடைய பெல்ஜியம் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

தொடர்பு:
கமலக்கண்ணன் திருமண சேவை
இல. 62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி.
T.P: 077 607 0862

### தேவை

நெல்லியடியில் இயங்கும் பேக்கரிக்கு Soft drinks,Faluda போன்றன தயாரிக்கக்கூடிய ஆள்கள் தேவை.
077 078 0552/ 075 786 3668



### நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.
இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
வி.ஜெயந்தி
T.P: 077 9733 183
021 227 1468

### வாடகைக்கு

நல்லூர் வைமன் வீதியில் ஆறு அறைகள் (இணைந்த குளியல் அறைகள்) கராஜ், இரண்டு கோல் உள்ள மாடி வீட்டுப் பகுதி வாடகைக்கு உண்டு. அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.
021 373 7036, 077 694 0340

### பணியாளர்கள் தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கிவரும் எமது New Sun Ceramic (pvt)Ltd நிறுவனமானது புதிய கிளையினை கிளிநொச்சி நகரில் ஆரம்பிக்கவுள்ளது. எனவே நிறுவனத்தில் பணியாற்ற தகுதியான ஆண் / பெண் இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கிளிநொச்சி நகருக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
கிளிநொச்சி பழைய வைத்தியசாலைக்கு முன்பாக
021 228 3872, 071 792 3721

### வீடு விற்பனைக்கு

பழையபூங்கா, கொய்யாத்தோட்டம், புதுவீதி, இல 33 இல் அமைந்துள்ள 3அறைளுடன் கூடிய நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள வீடு விற்பனைக்குண்டு.
077 983 3397/ 021 224 1374

# சிறிநதியா நகை மாளிகை

36 வருடங்களுக்கு மேல் நம்பிக்கைமிக்க கைராசியான நிறுவனம்





ஐஸ்வர்யத் திருவிழா அக்ஷய திருதியை
28.04.2017, 29.04.2017
வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை
காலை 7.00 - இரவு 9.00 மணிவரை



சித்திரை மாதம் சுக்ல பட்ச திருதியை அக்ஷய திருதியை நாளாகக் கொண்டாடுவது யாவரும் அறிந்த ஒன்று. அக்ஷய திருதியை அன்று நாம் செய்யும் எந்த காரியமும் வளர்ந்து கொண்டேயிருக்கும், பெருகிக்கொண்டேயிருக்கும் என்பது திண்ணம். இத்தகைய சிறப்புமிக்க அக்ஷய திருதியை தினத்தன்று எமது வாழ்வின் தேவைகளின் ஒன்றாக விளங்கும் தங்கத்தை தங்களின் வசதிக்கேற்ப பெரியதோ, சிறியதோ வாங்கி என்றும் வற்றாத செல்வத்துடன் வளமுடன் வாழ தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

முன்கூட்டியே ஓடர் செய்து முற்பணம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெறுவதன்மூலம் அன்றைய காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு:
➡ https://www.facebook.com/SREENATHIYAJEWELERYSHOP
➡ சிறிநதியா நகை மாளிகை

அன்றையதினம் தங்கம் வாங்கும் அனைவருக்கும் பெறுமதிமிக்க அன்பளிப்பு பொருள்கள் வழங்கப்படும்

குறிப்பு: இரண்டு பவுணுக்கு மேல் தங்க நகைகளை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு மகாலக்ஷ்மி திருவுருவம் பொறிக்கப்பட்ட தங்க நாணயம் அல்லது தங்க மோதிரம் அன்பளிப்பாக வழங்கப்படும்.



வாடிக்கையாளர்களின் நலன்கருதி 2012 ஆம் ஆண்டிலிருந்து கரட்மெசினை அறிமுகப்படுத்தி தரச்சான்றிதழ் வழங்கி வருகின்றோம்

சிறிநதியா நகைமாளிகை
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2709

சிறிநதியா நகைமாளிகை
இல.56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6744

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 23.03.2017 வியாழக்கிழமை
இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவர்

### அமரர் ஆறுமுகம் நடராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.04.2017) சனிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (23.04.2017) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள் ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

9A , விதானையார் வீதி,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

மனைவி,
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி அழைப்பு

கடந்த 10.03.2017 வெள்ளிக்கிழமை
சிவ்பதம் எய்திய எமது குடும்பத்தலைவி

அமரர்
### சர்மிளா விஜயரூபன்



அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (21.04.2017) வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரை யில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய கிரியைகள் 23.04.2017 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடை பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.

வே.கந்தலிங்கம்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கதிர்காமர் மண்டலேஸ்வரன்

தோற்றம்
20.11.1962

மறைவு
03.05.2016

திதி: 22.04.2017

எங்கள் இனிய தெய்வமே! இப் பாரினில் இருந்து
நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து - சென்றாலும்
எங்கள் உயிர் இருக்கும் - வரை என்றும்
எங்களுடன் இருப்பீர்கள்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்
மணியாவத்தை,
புலோலி வட கிழக்கு பருத்தித்துறை.

## 31 ஆம் நாள் நினைவுகளுடன்....



### அமரர் ஐயாத்துரை அருளானந்தசிவம்

தோற்றம்
19.07.1951

மறைவு
23.03.2017

தேடியும் கிடைக்காத - எங்கள்
தெய்வம் மறைந்து - முப்பத்தொரு நாள்கள்
ஓடி மறைந்ததா? நினைத்து பார்க்கையில்
இரு விழிக்குள்ளே இரு விழியும் கசிகிறதே...
அருளினி. அமுதா என்று - நீங்கள்
அழைத்த குரல் இன்னும் காற்றில்
கலந்து எங்கள் காதில் கேட்கிறது....
வேதனை எல்லாம் நீங்கள் சுமந்து - எங்களை
சோதனை தீண்டி விடமால் காத்தீர்கள்...
நீண்ட வானமும் நீலக்கடலும் உள்ள வரை
- அப்பா
உங்கள் நினைவுகள் எம்மோடு கலந்திருக்கும்..

என்றும் நினைவில்
குடும்பத்தினர்
8 ஆம் வட்டாரம், நயினாதீவு.

## பண்பாட்டுப் பேரவையால் விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 22

வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவு பண்பாட்டுப் பேரவைக்கான உறுப்பினர்களை இணைத்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களை கிராம அலுவலர்கள் மற்றும் வலி.கிழக்குப் பிரதேச செயலக கலாசார அலுவலர்களிடம் பெற்று முழுமைப்படுத்தி கிராம அலுவலரின் பரிந்துரையுடன் முன்வைக்குமாறு அறிவிக்கப்பட்டது.

(வ-11)

## கண்ணீர் அஞ்சலி



### நடராசா கனகராசா

(இலங்கை போக்குவரத்துச்சபை ஓய்வுநிலை சாரதி, ஓய்வு பெற்ற கணக்காளர் - சின்னத்துரை அன்ட் பிறதேர்ஸ், யாழ்ப்பாணம்.)

தோற்றம்
28.04.1950

மறைவு
19.04.2017

அன்னார் நயினாதீவைப் பிறப்பிடமாகவும் பொதுக் கிணறு வீதி. தோணிக்கல் வவுனியாவை வசிப்பிட மாகவும் கொண்டவர்.

அன்னாரது திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு அனுதாபங்களையும் துயரத்தினையும் தெரிவித்து அதில் நாங்களும் பங்கு பற்றி அன்னார் நயினை நாகபூசணி அம்மனுடைய பாதாரவிந்தங்களை சேர வேண்டும் என பிரார்த்தித்து வணங்கி அமைகின்றோம்.

2BIA Dy Fonsoka Road,
Bambalapitiya,
Colombo - 04

வேணி களஞ்சியம்
யாழ்ப்பாணம்.

## ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 22

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்ரோபர்சோசலிசப்புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படுகின்ற கலை இலக்கிய ஆய்வரங்குத் தொடரின் மூன்றாவது ஆய்வரங்கு இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப 3. 30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக் கப்பட்டது.

'கவிஞர் மாயகோவ்ஸ்கியின் கவிதைகள்' என்ற தலைப்பில் இடம்பெறும் இந்த ஆய்வரங்கில் தலைமை உரையை கவிஞர் ராதையனும், ஆய்வுரையை எழுத்தாளர் க. வேல்தஞ்சனும் வழங்குவர் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-10)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் தக்ஷினி அற்புதராஜா

திதி: தசமி

அருமருந்தான அற்புத பொன் மகளே!
பெருந் தவப் பேறான தக்ஷினியே!
தாய் தந்தைக்கு சிறந்த தாயாய்
நல் ஆசானாய் இருந்தாயே!
அண்ணன் உனக்கு ஆதரவே
எந்நாளும்
அண்ணியவள் உற்ற தோழி நீயன்றோ!
கண்மணியாய் நீ வளர்த்த மருமகள்
எல்லோரையும் அழ வைத்து
தெய்வத் திருமகளாய் சிவலோகம்
சென்றாயோ!
மாமன்மார். மாமிமார்.
சித்தப்பாமார். சித்திமார்
பெரியப்பாமார். பெரியம்மாமார்.
அக்காமார் அண்ணன்மார்.
மச்சாள்மார். மச்சான்மார்
நண்பர்கள் என சகல உறவுகளுக்கும்
உறவுப் பாலமாய் இருந்தாயே!
இன்று எல்லோரும் கண்ணீராய்
வேண்டுகின்றோம்
பரகதி அடைவீரே!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிறப்பு
05.05.1979

இறப்பு
23.03.2017

செல்வி தக்ஷினி அற்புதராஜா அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (22.04.2017) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கரந்தன், நீர்வேலி.

குடும்பத்தினர்

# இருபாலையில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

## கணவன் மனைவி கைது

யாழ்ப்பாணம், ஏப். 22

கோப்பாய், இருபாலைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் நேற்றுச் சுற்றிவளைக்கப்பட்டது. அங்கு கசிப்பு உற்பத்தி செய்த குற்றச்சாட்டில் கணவன், மனைவி இருவரும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் கசிப்பை உற்பத்தி செய்து முல்லைத்தீவுக்குக் கடத்தத் திட்டமிட்டிருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்ததாவது:

"கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலைப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடும் சிலர் அதிகாலை வேளையில் முச்சக்கர வண்டியில் கசிப்பைக் கடத்தி உடையார் கட்டு, விஸ்வமடுப் பகுதியில் விற்பனையில் ஈடுபடுகின்றனர் என்று எமக்குத் தகவல் கிடைத்தது. அது தொடர்பான நீண்ட புலனாய்வில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.

இதனையடுத்து நேற்று அதிகாலை 12.30 மணியளவில் குறித்த பிரதேசத்தை முற்றுகையிட்ட பொலிஸார், கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட கணவன், மனைவி ஆகிய இருவரையும் தடயப் பொருள்களுடன் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 1 லட்சத்து 61 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் 25 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா என்பன கைப்பற்றப்பட்டன. கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பரல்கள் 2, கசிப்பு வடிக்கப் பயன்படுத்தப்படும் வயர்கள் என்பனவும் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட தடயப் பொருள்களுடன், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் - என்றார்.

(ஐ-101.106)

# மகளிர் தின விழா கைதடியில் இன்று

யாழ்ப்பாணம்.ஏப்.22

கைதடிப் பிரதேச மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றியம் நடத்தும் உலக மகளிர் தின விழா இன்று சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு கைதடி விக்கினேஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கைதடிப் பிரதேச மாதர் கிராம அபிவிருத்தி ஒன்றியத் தலைவி திருமதி தனபாலசிங்கம் சுபத்திராதேவி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சோ.சேனாதிராசாவும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனும், மதிப்புறு விருந்தினராக தென்மராட்சிப் பிரதேசசெயலக கணக்காளர் ம.வசந்தமாலாவும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-10)

# ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டிகள் நாளை

யாழ்ப்பாணம், ஏப். 22

மறுமலர்ச்சி மன்றத்தால் வடக்கு மாகாண மட்டத்தில் நடத்தப்படும் ஆங்கில எழுத்துக் கூட்டல் போட்டியின் முதல் மற்றும் இரண்டாம் சுற்றுப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் அமைந்துள்ள தென்மராட்சிக் கலை மன்றத்தின் கலாசார மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கைதடி, சாவகச்சேரி, மீசாலை, மிருசுவில், கொடிகாமம், வறணி, தனங்களப்பு ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் மாணவர்கள் இந்தப் போட்டிக்கு விண்ணப்பித்துள்ளனர்.

மாணவர்களுடைய தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமையால், அதில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்துக்குத் தவறாது சமுகம் தந்து இந்தப் போட்டியில் கலந்துகொள்வதை உறுதிப்படுத்துமாறு மறுமலர்ச்சி மன்றத்தினர் கேட்டுள்ளனர்.

(வ-10)


## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்

### விலைமனுகேள்விக்கான அழைப்பு

### அலுவலகப் பொருள்கள், மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்களுக்கான பெறுகைகள் HSDP – 2017

பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான, தகைமை வாய்ந்தவர்களிடம் கீழ்வரும் பொருள்களிற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

| Reference No | Item | Qty | Bid Security |
|---|---|---|---|
| NP/RDHS/HSDP /2017-01 | Printer | 08 | 10,000.00 |
| | Photocopy Machine | 04 | |
| | Laptop | 02 | |
| | External Hard Disk | 03 | |
| | Multimedia Projector | 05 | |
| | Computer Set | 05 | |
| NP/RDHS/HSDP /2017-02 | Air Conditioner (24000BTU) | 02 | 20,000.00 |
| | Air Conditioner (64000BTU) | 04 | |
| NP/RDHS/HSDP /2017-04 | Water filter | 03 | 5,000.00 |
| | Digital Camera | 01 | |
| | Stand Fan | 10 | |
| | DVD Player | 06 | |
| | Ceiling fan | 50 | |
| | Refrigerator | 01 | |
| | Television 32' Led | 06 | |

| Reference No | Item | Qty | Bid Security |
|---|---|---|---|
| NP/RDHS/HSDP /2017-03 | Filling Cabinet | 06 | 20,000.00 |
| | Front Glass Almerah | 14 | |
| | Almerah Wooden | 08 | |
| | Office Table | 15 | |
| | Revolving Chair | 20 | |
| | Executive Table | 01 | |
| | Executive Chair | 01 | |
| | Plastic Chair | 300 | |
| | Computer Table | 10 | |
| | Computer Chair | 10 | |
| | Aluminium Rack for Record Room | 12 | |
| | Bedside Locker | 50 | |
| | White Board 2'x3' | 30 | |
| | White Board Magnet 4' x 3' | 15 | |

* ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்க முடியாத கேள்விபத்திர பணம் ரூபா 500/=

1. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்ட முள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 2222278/4557. ext 20) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
2. ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
3. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினைப் பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மேலே குறிப்பிட்ட தொகையை காசாக செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 24.04.2017 தொடக்கம் 16.05.2017 வரையான காலப்பகுதியில் 09.00 மணிதொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.30 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக் கேள்விகள் **17.05.2017 திகதி 10.00 மணிக்கு** முன்பதாக பதிவுத் தபாலிலோஅல்லது நேரடியாகவோ மேலதிக பிரதிப் பணிப்பாளர்(நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் 17.05.2017ஆம் திகதி காலை 10.00 மணிக்கு திறக்கப்படும் இதற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சமுகமளிக்கலாம்

**மருத்துவர் க.நந்தகுமாரன்**
**தலைவர்,**
**பிராந்தியபெறுகைகள் குழு, பிராந்தியசுகாதாரசேவைகள் பணிப்பாளர்பணிமனை,யாழ்ப்பாணம்.**

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்

### விலைமனுக் கேள்விக்கான அழைப்பு

### மருத்துவ உபகரணங்கள் - HSDP - 2017

பிராந்திய பெறுகைகள்குழு தகுதியான, தகைமை வாய்ந்தவர்களிடம் கீழ்வரும் பொருள்களுக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது

| Reference No | Item | Qty | Bid Security |
|---|---|---|---|
| NP/RDHS/ ME/2017/01 | Nebulizer | 06 | 10,000.00 |
| | Pulse Oxeymeter | 09 | |
| | Ventilator Portable | 01 | |
| NP/RDHS/ ME/2017/02 | Defibrillator with pacing facilities | 08 | 50,000.00 |
| | Multipara Monitor | 06 | |
| NP/RDHS/ ME/2017/03 | Folding Screen | 04 | 10,000.00 |
| | X-ray illuminator | 01 | |
| | Wheel Chair | 12 | |
| | Examination bed | 06 | |
| | Stretcher | 10 | |
| NP/RDHS/ ME/2017/04 | Spot Lamp | 03 | 10,000.00 |
| | Liquid Nitrojan Pump | 01 | |
| | Venus Cut down | 05 | |
| | ETU Bed | 10 | |
| | Larynsgoscope (Adult &Pae) | 06 | |
| NP/RDHS/ ME/2017/05 | BP Apparatus (LCD) | 38 | 10,000.00 |
| | Glucometer strips | 8000 | |
| | Stethoscope | 21 | |
| | HP testing machine | 10 | |

| Reference No | Item | Qty | Bid Security |
|---|---|---|---|
| NP/RDHS/ ME/2017/06 | Adult weighing scale | 21 | 10,000.00 |
| | Height measuring board | 21 | |
| | Measuring tape | 21 | |
| | Mechanical measuring tape | 21 | |
| | Length measuring board | 10 | |
| | Baby weighing scale | 21 | |
| | Height measuring equipment | 06 | |
| | Peak flow meter | 06 | |
| NP/RDHS/ ME/2017/07 | Autoclave | 05 | 20,000.00 |
| | Suction apparatus | 06 | |
| NP/RDHS/ ME/2017/08 | Micro motor unit | 04 | 5,000.00 |
| | Dental Compressor | 01 | |
| | Dental Chair | 01 | |
| | Dental Scalar | 05 | |

* ஒவ்வொருபெறுகைக்கும் மீளளிக்க முடியாத கேள்விப் பத்திரப் பணம் ரூபா 500/=

1. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் ( 021 2222278/4557. ext 20) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப் பாணத்திலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.
2. ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
3. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினைப் பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மேலே குறிப்பிட்ட தொகையை காசாக செலுத்திப் பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 24.04.2017 தொடக்கம் 16.05.2017 வரையான காலப்பகுதியில் 09.00 மணிதொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.30 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்விகள் 17.05.2017 திகதி 13.00 மணிக்கு முன்பதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ மேலதிக பிரதிப்பணிப்பாளர் (நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் 17.05.2017ஆம் திகதி பிற்பகல் 13.00 மணிக்கு திறக்கப்படும் இதற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சமுகமளிக்கலாம்.

**மருத்துவர்.க.நந்தகுமாரன், தலைவர்,**
**பிராந்தியபெறுகைகள் குழு, பிராந்தியசுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**யாழ்ப்பாணம்.**

## கேரதீவில் உப்பளம் அமைப்பது குறித்த

# யாழ்ப்பாண செயலகத்தில் நடந்த கலந்துரையாடலும் தோல்வியில்

யாழ்ப்பாணம், ஏப்..22
தென்மராட்சி தெற்கு, கேரதீவு கடலோரியில் உப்பளம் அமைக்க யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலும் தோல்வியில் முடிவடைந்தது என்று கடற்றொழிலாளர்கள் சங்கத்தினர் தெரிவித்தனர்.
கேரதீவில் உப்பளம் அமைப்பது தொடர்பாகத் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. தொடர்ந்து பிரதேச செயலர் தலைமையில் அண்மையில் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இவற்றில் அந்தப் பகுதி கமக்கார அமைப்புகள் மற்றும்கடற்றொழிலாளர்சங்கங்கள்போன்றவையின் கடும் எதிர்ப்பால் திட்டம் கைவிடப்பட்டது என்று அறிவிக்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தலைமையில் கேரதீவில் உப்பளம் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பிரதேச கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் போன்றோர் கலந்துகொண்டனர்.
"யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வரும் பல்வேறு தொழிற்றிட்டங்கள் எதிர்ப்புகளால் கைவிடப்படுகின்றன. இதனால் எமது பிரதேசத்தில் தொழில்துறைகளை ஆரம்பிக்க முடியவில்லை. அத்துடன் மாவட்டத்தில் பட்டதாரிகள் பலர் வேலைவாய்ப்பின்றி உள்ளனர்" என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் எடுத்துக்கூறினார்.
இதனையடுத்து கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதியொருவர் மாவட்டச் செயலரின் உரைக்கு பதிலளிக்கையில், "நாட்டில் உற்பத்தி நிறுவனங்கள் உருவாவதை நாம் தடுக்கவில்லை. கேரதீவில் உப்பளம் அமைப்பதால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் நிறைய உள்ளன. கேரதீவில் உப்பளம் உருவாக்கப்படுவதால் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கமுடியும். ஆனால் ஆயிரக்கணக்கான கடற்றொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத்தையே இழக்க நேரிடும். உப்பளம் அமைப்பதால் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதுதான் குறிக்கோளாக இருந்தால் உப்பளம் அமைப்பதால் பாதிக்கப்படவுள்ள கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அவர்களுக்கு நிவாரணமும் இழப்பீடும் வழங்க மாவட்டச்செயலாளர் எழுத்து மூலமான உத்தரவாதம் வழங்க வேண்டும்"- என்றார். இதனையடுத்து கலந்துரையாடல் முடிவின்றி நிறைவடைந் தது எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

மரண அறிவித்தல்

மார்க்கண்டு சிவசோதி



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சிவசோதி நேற்று முன்தினம் 20.04.2017 வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - நவமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அன்னலிங்கம் மற்றும் சிவமணிதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும் அமிர்தகலாவின் அன்புக்கணவரும் சிவறமணன், சிவப்பிரியா, சிவமலர், சிவறோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனுசன், யசேந்திரதாஸ், ஜெயதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ராசதுரை, திருச்செல்வம் காலஞ்சென்ற ராஜபூபதி, மனோகரன், மகேசன், ராஜேஸ்வரி, ராசமலர், மனோகரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் டனிரா, டிவ்யனா, பஹிசனா, பிரணவன், சந்தோஸ், யதுர்சன், கிசான், சுலக்ஷன், லத்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் வேம்பன் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பலாலி வீதி,**
**உரும்பிராய் தெற்கு,**
**உரும்பிராய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 728 3681**

## வெடிகுண்டை செயலிழக்க வைக்க நீதிமன்று கட்டளை

தென்மராட்சி, ஏப். 22
தென்மராட்சி, எழுதுமட்டுவாழ் வடக்குப் பகுதியில் வெடிக்காத நிலையில் காணப்படும் மோட்டார் வெடிகுண்டை செயலிழக்க வைக்குமாறு சிறப்பு அதிரடிப் படையினருக்கு சாவகச்சேரி நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.
எழுதுமட்டுவாழ் வடக்குப் பகுதியில் காணியொன்றில் வெடிக்காதநிலையில் மோட்டார் வெடிகுண்டு காணப்படுவதாக பொதுமக்கள் கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவித்தனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் வெடிகுண்டைப் பார்வையிட்டு அந்தப் பகுதிக்குப் பாதுகாப்பை ஏற்படுத்தினர். அத்துடன், அதனை செயலிழக்க வைப்பதற்கான அனுமதியையும் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுப் பொலிஸார் கோரினர்.
அறிக்கையைப் பார்வையிட்ட நீதிமன்றப் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை வெடிகுண்டை மீட்டு செயலிழக்கச் செய்த பின்னர் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு யாழ்ப்பாண சிறப்பு அதிரடிப் படையினருக்கு உத்தரவிட்டார். (வ-9)

## விபத்தில் படுகாயமடைந்த பெண் ஒரு மாதத்தின் பின் நேற்றுச் சாவு

யாழ்ப்பாணம், ஏப். 22
வேகக்கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கரவண்டி தடம்புரண்டு ஓடியதால் லான்மாஸ்ரருடன் மோதுண்டு காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சுமார் ஒரு மாதமாக கோமா நிலையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பத்தலைவி நேற்று உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
சரவணைச் சந்தியை அண்மித்து கடந்த 22ஆம் திகதி இந்த விபத்து இடம்பெற்றது.
ஊர்காவற்றை தனையைச் சேர்ந்தஜேசுதாசன் சுகிர்தா சிசில்டா வாசுகி (வயது - 55) என்பவரே உயி ரிழந்தார். இவர் 2 பிள்ளைகளின் தாய்.
"முச்சக்கர வண்டியில் கடந்த 22ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்து திரும்பிக்கொண்டிருந்த போது சரவணைச் சந்தியை அண்மித்து முச்சக்கர வண்டி முன்னே சென்றுகொண்டிருந்த லான்மாஸ்ரருடன் ஒரு பக்கம் தட்டுப்பட்டு நிலைகுலைந்து விபத்து இடம்பெற்றது. அதில் பயணித்த குறித்த குடும்பத்தலைவி ஓட்டோவின் உள்ளே விழுந்துகிடந்து அலறுவது அவதானிக்கப்பட்டது.
முச்சக்கர வண்டி நிலைகுலைந்த போது முன்னே ஊமல் ஏற்றிச் சென்ற லான்ஸ் மாஸ்ரரில் இருந்த இரும்புத் தகரங்களில் ஒன்று குறித்த பெண்ணிக் தலையில் வெட்டியுள்ளது. அதனால் அவர் மயங்கிவிட்டார்.
காயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்" என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை நடத்தினர். உடலம் அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4.12)

மரண அறிவித்தல்

தோற்றம்
17
11
1936



மறைவு
17
04
2017

**திருமதி சற்குணம்**
**ஆக்னஸ் யோகராணி ராஜேந்திரா**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சற்குணம் ஆக்னஸ் யோகராணி ராஜேந்திரா (Mrs.Satkunam Agnes Yogaranee Rajendra) அவர்கள் 17.04.2017 திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்தார்.
அன்னார், காலஞ்சென்ற இராமையா-ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும், ஜோர்ஜ் செல்வரட்ணம் ராஜேந்திரா அவர்களின் பாசமிகு மனைவியும், ராஜாராணியின் அன்பு சகோதரியும், ஜெர்மைன் Germaine (மகேஸ்), உபார்ஷியா Euphrashia (குஞ்சா), அன்சலம் Anslem (குக்கூ) காலஞ்சென்ற கொர்னேலியா Cornelia (இந்திரா), காலஞ்சென்றவர்களான எகோணவால்டு Erconwald (மோகன்) ஆகியோரின் பாசமிகு தாயும், கரென் Karen, பற்ரிசியா Patricia ஆகியோரின் அன்பு மாமியும், ஓட்ரி Audrey, ஏஞ்சலோ Angelo பெர்னாடெட் Bernadette ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் 20.04.2017 வியாழக்கிழமை அன்று மாலை 5.00 மணி தொடக்கம் 9.00 மணி வரையும், 22.04.2017 அன்று காலை 9.00 மணி தொடக்கம் 10 மணி வரையும் Chappel Ridge Funeral Home, (8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada) இல் பார்வைக்கு வைக்கப்பட்டு, பின்னர் 11.30 மணிக்கு நல்லடக்க ஆராதனை St. Thomas the Apostle Church, (14 Highgate Dr.Markham) இல் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நல்லடக்கம் Christ the King Cemetery (7770 Steeles Ave East, Markham) இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: அன்சலம் ராஜேந்திரா.**
**(647) 469 4674)**

## பகவத்கீதை விளக்கவுரை

யாழ்ப்பாணம், ஏப். 22
யாழ்ப்பாணம் சின்மயா மிஷனில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7.45 மணி தொடக்கம் 8.45 மணி வரை சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியாரின் ரீமத் பகவத்கீதை வாராந்த விளக்கவுரை நடத்தப்பட்டு வருகிறது.
இதில் நாளை ஞாயிற்றுக்கிழமை ரீமத் பகவத் கீதையின் ஏழாம் அத்தியாயமான "ஞான விக்ஞான யோகம்" பகுதியில் "நான் அவைகளில் இல்லை, அவைகள் என்னிடம் உள்ளன " என்ற தலைப்பில் விரிவுரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
ஆர்வலர்கள் அனைவரும் இதில் கலந்து பயன் பெறுமாறு யாழ்ப்பணாம் சின்மயாமிஷனால் கேட்கப்பட்டுள்ளது. (வ)

**10ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



**அந்திரேசுப்பிள்ளை பாலதாஸன்**

ஆண்டுகள் பத்து ஓடி மறைந்ததே அப்பா
அன்று புரியாத வயதில் திக்கற்று நின்றோம்
இன்று புரியும் வயதில் கலங்கி நிற்கும் எம்மை
நல்வழிப்படுத்த நண்பனாய் நீயில்லையப்பா

**அன்பு**
**மனைவி, பிள்ளைகள்**

## சைவப்புலவர் சங்கத்தின் பரீட்சைகள் ஆரம்பம்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் சைவப்புலவர், இளம் சைவப்புலவர் தேர்வுகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு, பொலநறுவை, லண்டன் ஆகிய இடங்களில் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளன என்று சங்கத்தின் தேர்வுச் செயலர் சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசன் அறிவித்தார். தேர்வுநாடிகளுக்குரிய அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன. இந்த முறை இளம் சைவப்புலவர் தேர்வுக்கு 80 பேரும் சைவப்புலவர் தேர்வுக்கு 60 பேரும் தோற்றவுள்ளனர். (வ-10)

## முதியோருக்கு கருத்தரங்கு

இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழகத்தின் பாரம்பரிய வைத்திய சுகநல பராமரிப்பு வழி காட்டல் கருத்தரங்கு நாளை 9.30 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
நிகழ்வின் விளக்க உரையை 'பிரதிபலிப்புச் சிகிச்சை முறை' என்ற தொனிப்பொருளில் திருமதி இராஜேஸ்வரி ஈஸ்வரஞானம் வழங்கவுள்ளார். ஆர்வமுள்ளவர்களைக் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (வ-12)

# சட்டவிரோத மதுப்பாவனை குறித்து 125 வழக்குகள் பதிவு

## புதுவருட விடுமுறை தினங்களில் மட்டும்

யாழ்ப்பாணம், ஏப். 22
புதுவருட விடுமுறை தினங்களில் சட்டவிரோதமாக மது விற்பனை செய்தமை, மதுப் பாவனையில் ஈடுபட்டமை தொடர்பில் 125 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் வடக்கு மாகாணப் பொறுப்பதிகாரி சோதிநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதுவருடத்தை முன்னிட்டுச் சட்டவிரோத மதுப் பாவனையால் ஏற்படும் குற்றங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சிறப்புச் சுற்றிவளைப்புக்கள் இடம்பெற்றன.

இதற்காக மதுவரி திணைக்கள அதிகாரிகளின் விடுமுறைகள் அனைத்தும் இம் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் எதிர் வரும் 25 ஆம் திகதி வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட மதுவரித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்கள் மூலம் 125 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் யாழ். அலுவலகத்தினால் 17 வழக்குகளும், சங்கானை அலுவலகத்தினால் 35 வழக்குகளும், சாவகச்சேரி அலுவலகத்தினால் 13 வழக்குகளும்., மல்லாகம் அலுவலகத்தினால் 30 வழக்குகளும், பருத்தித்துறை அலுவலகத்தினால் 30 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையின் காரணமாகப் புதுவருட தினங்களில் குற்றங்கள், விபத்துக்கள் என்பன கணிசமான அளவு குறைந்துள்ளன என்றார்.

(த-ரி1)

# தானியம் பயிரிட்ட 8,826 விவசாயிகள் வடக்கில் பாதிப்பு

## கடுமையான வறட்சியே காரணம்




யாழ்ப்பாணம், ஏப். 22
வடக்கு மாகாணத்தில் தானியப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டவர்களில் 8 ஆயிரத்து 826 விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர் என மாகாண விவசாய திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாணத்தில் சோளம், நிலக்கடலை, கௌப்பி, உழுந்து, பயறு போன்ற தானியப் பயிர்ச் செய்கை 16 ஆயிரத்து 404 கெக்ரேயர் நிலப் பரப்பில் மேற்கொள்ளப்பட்டது. எனினும் அண்மைக் காலமாக காணப்பட்ட வறட்சியான காலநிலை காரணமாகப் பயிர்ச் செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட தானியச் செய்கையில் நிலக்கடலைச் செய்கையாளர்களே அதிகளவில் பாதிப்படைந்துள்ளனர். நிலக்கடலை 3 ஆயிரத்து 372 கெக்ரேயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டபோதிலும் ஆயிரத்து 806 கெக்ரேயர் நிலக்கடலையே முழுமையான விளைச்சலைக் கொடுத்துள்ளது. மிகுதி முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

இதனால் 3 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். இவ்வாறு கௌப்பி, உழுந்து, பயறு, சோளம் போன்ற பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். பாதிப்படைந்துள்ள அனைத்து விவசாயிகளுக்கும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக நட்டஈடு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-8)

# நெல் அறுவடையின் பின் தானியப் பயிர்ச் செய்கை

## விதைகளை வழங்குகிறது விவசாயத் திணைக்களம்

யாழ்ப்பாணம், ஏப். 22
யாழ்ப்பாண மாவட்டத்தில் நெல் அறுவடையின் பின் விவசாயிகள் பயன்பெறக் கூடியவாறு தானிய வகைகளைப் பயிரிடுவதற்கு விதைகள் வழங்கப்படும் என மாகாண விவசாய பிரதிப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.

நெல் வயல்களின் அறுவடைகளின் பின்னர் சிறப்பான மண் ஈரப்பதன் காணப்படும் பட்சத்தில் சிறுதானிய வகையிலான பயறு, உழுந்து, கௌப்பி போன்ற பயிர்கள் பயிரிடுவதற்காக விதைகளை விவசாயிகளுக்கு வழங்கவுள்ளதாகவும், இந்தப் பயிர்ச்செய்கையில் 70 வீதமான விவசாயிகள் ஆர்வம் காட்டியுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-ரி)

# கைவிடப்பட்ட கொள்கலனுக்குள் முறிகண்டியில் குற்றச் செயல்கள்

## மாங்குளம் பொலிஸார் சோதனை



யாழ்ப்பாணம், ஏப். 22
திரு முறிகண்டி பிள்ளையார் ஆலய வளாகத்துக்கு அண்மையில் மூடப்பட்ட நிலையில் கைவிடப்பட்டிருந்த கொள்கலன் பெட்டி ஒன்று நேற்று மாங்குளம் பொலிஸாரால் சோதனையிடப்பட்டது.

இதன்போது அதற்குள் சட்டவிரோதச் செயல்கள் இடம்பெற்றமைக்கான சான்றுகள் காணப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய வளாகத்துக்கு அண்மையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்தக் கொள்கலன் பெட்டி கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. இதற்குள் இரவு வேளைகளில் இனந்தெரியாதோர் நுழைந்து சமூகச் சீர்கேடுகளில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய அறங்காவலர் சபை, கிராம அபிவிருத்திச் சங்கம், வர்த்தகர் சங்கம் ஆகியன இணைந்து இது குறித்து மாங்குளம் பொலிசாரின் கவனத்துக்குக் கொண்டு வந்தன. இதனையடுத்து மாங்குளம் பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான குழுவினர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த பெட்டியில் இருந்து போதைப் பொருள்கள், மதுப் போத்தல்கள் என்பன பொலிசாரால் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை விரைவில் கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மாங்குளம் பொலிசார் தெரிவித்தனர்.

(த-101)

## முறிகண்டி முதல் பரந்தன் வரையான

# குறுந்தூர சிற்றூர்திகளில் பயணிகள் படும் அவலம்

கிளிநொச்சி, ஏப்.22
கிளிநொச்சி ஏ-9 வீதியில் முறிகண்டி முதல் பரந்தன் வரை குறுந்தூர சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகளில் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிற்றூர்திகளில் பயணிகள் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் போதிய கால அவகாசம் வழங்கப்படுவதில்லை என்றும், சாரதிகள் சடுதியாகச் சிற்றூர்திகளை எடுப்பதால் விழுந்து காயமடையவேண்டியுள்ளதாகவும் பயணிகள் விசனம் தெரிவித்தனர்.

போரில் காயமடைந்து அவயவங்களை இழந்தவர்கள் வேறொருவரின் உதவி இல்லாமல் இந்தச் சிற்றூர்திகளில் தனியாக ஏறிப் பயணம் செய்யமுடியாத நிலை உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெரும்பாலும் இந்தச் சிற்றூர்திகளில் வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார், நோயாளர்கள், கைக்குழந்தைகளை ஏந்திய தாய்மார், வைத்தியசாலைக்குச் செல்வோர் ஆகியோரே பயணிக்கின்றனர். அவர்கள் ஏறி இருக்கையில் அமர்வதற்கு முன்னரே சிற்றூர்திகளைக் கடுகதி வேகத்தில் சாரதிகள் செலுத்துவதால் விழுந்து காயமடைந்த சந்தர்ப்பங்களும் பல உண்டு. வயோதிபர்கள் சாரதிகளைத் திட்டித் தீர்ப்பதுமுண்டு.

பயணிகளை ஏற்றி இறக்குவதற்குரிய போதிய நேர அட்டவணையுடனேயே சிற்றூர்திகளில் சேவையில் ஈடுபடவேண்டும். இதற்கு மாறாகச் சாரதிகள் மின்னல் வேகத்தில் அவசரப்படுவது ஏன் எனப் பயணிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது மாத்திரமன்றிக் கட்டணம் அறவிடுவதிலும் குழறுபடி நடப்பதாகக் கூறப்படுகின்றது. மிகுதிப் பணம் வழங்கப்படுவதில்லை எனவும், சில்லறை இல்லை என்று நடத்துநர்கள் கூறுகிறார்கள் எனவும் பயணிகள் தெரிவித்தனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பயணிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கிளிநொச்சி தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது குறித்து முன்னர் முறைப்பாடுகள் கிடைத்தன. பயணிகளுடன் பண்பாக நடந்து கொள்ளுமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மீதிப் பணம் வழங்காத நடத்துநர்கள் தொடர்பில் சிற்றூர்தி இலக்கத்துடன் எங்களிடமோ அல்லது நேரக் கணிப்பாளர்களிடமோ முறைப்பாட்டை கொடுத்தால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (த-6)

# கலைஞர் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

வடக்கு மாகாண முதலமைச்சர் விருது-2017, இளம் கலைஞர் விருது ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. முதலமைச்சர் விருதுக்கு 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களும், இளம் கலைஞர் விருதுக்கு 40வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் விண்ணப்பிக்கலாம் என வடக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

விண்ணப்ப இறுதித் தினம் 01.06.2017 ஆகும். விருது வழங்கும் நிகழ்வு ஜூன் மாதம் 15ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. விருதுக்கான விண்ணப்பங்கள் மற்றும் மேலதிக தகவல்களைப் பிரதேச செயலகப் பிரிவு கலாசார அலுவல்கள் மற்றும் வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம். (த-11)

# இளைஞர் சம்மேளன அலுவலகம் வவுனியாவில் மீண்டும் திறப்பு



வவுனியா, ஏப். 22
வவுனியாவில் கடந்த ஒரு வருடமாக மூடப்பட்டிருந்த இளைஞர் கழக சம்மேளனக் காரியாலயம் நேற்று முற்பகல் மீளவும் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட இளைஞர் சம்மேளனத் தலைவர் சு.காண்டீபன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்த்தான், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், செந்தில்நாதன் மயூரன், தர்மபால செனவிரத்ன, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகேசவன் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் செயற்பட்டு வந்த மாவட்ட இளைஞர் சம்மேளனக் காரியாலயம் கடந்த ஒரு வருடமாக மூடப்பட்ட நிலையில் செயற்பாடுகள் இன்றிக் காணப்பட்டது. தற்போது புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டதையடுத்து நேற்று அது மீளத் திறந்து வைக்கப்பட்டது.

இதில் இளைஞர் வலுவூட்டல்கள், தலைமைத்துவப் பயிற்சிகள், தேசிய சம்மேளனத்தின் நிகழ்வுகளை ஒழுங்கமைத்து நடத்துவது போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4)

# புதிய கட்சிகளுக்கான நேர்காணல் ஆரம்பம்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 22
இலங்கையில் புதிய அரசியல்கட்சிகளைப் பதிவு செய்வதற்கான நேர்காணல் நடவடிக்கைகள் தேர்தல்கள் ஆணைக்குழுவால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது,

"புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கு 95 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. விண்ணப்பித்த அரசியல் கட்சிகளைத் தனித்தனியாக அழைத்து நேர்காணல் நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு முடிவு செய்தது.

நேற்று முன்தினம் தொடக்கம் நேர்காணல் இடம்பெறுகிறது. இன்றுவரை இந்த நடவடிக்கைகள் இடம்பெறும். மீண்டும் எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம், 28ஆம் திகதி வரை நேர்காணல்கள் நடத்தப்படும்.

நேர்காணல்கள் நடத்தி முடிக்கப்பட்ட பின்னர், அரசியல் கட்சிகளின் அனுமதி தொடர்பாக இறுதி முடிவு எடுப்பதற்குக் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்படும்"-என்றார்.

இலங்கையில் தற்போது 64 அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தற்போது 95 புதிய அரசியல் கட்சிகள் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளன. (ஐ-10)


# 32 ஆயிரம் லீற்றர் கிளைபோசேட் களைநாசினி மீட்பு

கொழும்பு, ஏப். 22
இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட 32 ஆயிரம் லீற்றர் கிளைபோசேட் களை நாசினி சுங்கப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள களை நாசினிகளில் கிளைபோசேட்டும் ஒன்றாகும். தடை செய்யப்பட்ட இந்த வகைக் களைநாசினி சீனாவிலிருந்து 20 அடி கொள்கலன்கள் மூலம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அதனை சுங்கப்பிரிவினர் மீட்டுள்ளனர். இதனை இறக்குமதி செய்த வர்த்தகர் கைதாகிப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ஐ-10)

# அடுத்த வாரம் இந்தியா பயணிக்கிறார் ரணில்

## புதுடில்லியில் உயர் மட்ட அதிகாரிகளுடன் சந்திப்பு



கொழும்பு, ஏப். 22
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க 5 நாள்கள் பயணமாக எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இந்தியாவுக்குப் பயணிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் திருமண நிகழ்வு ஒன்றுக்காகவே இந்தியாவுக்குப் பயணிக்கவுள்ளார். எனினும் எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை புதுடில்லியில் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்று இந்திய அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கைத் தலைமை அமைச்சர் இந்தியப் பயணத்தின்போது, இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ், உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், தரைவழிப் போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்கரி ஆகியோரைச் சந்திப்பார். இலங்கை அரசுடன் தொடர்ச்சியான உயர் மட்டத் தொடர்பாடலின் ஓர் அங்கமாக அவரது பயணம் இடம்பெறும்-என்றார்.

அதேவேளை தலைமை அமைச்சரின் இந்தியப் பயணத்தின்போது, திருகோணமலைத் துறைமுக அபிவிருத்தி குறித்த புரிந்துணர்வு உடன்பாடு, எண்ணெய்த் தாங்கிகளைச் செயற்படுத்தல், இயற்கை எரிவாயு மின் திட்டத்தை உருவாக்கல், நெடுஞ்சாலைகள் அமைத்தல், மற்றும் கைத்தொழில் வலயங்களை உருவாக்குதல் உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் பேச்சுக்கள் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி அடுத்த மாதம் இலங்கைக்கு மேற்கொள்ளவுள்ள பயணம் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. இந்தியப் பயணத்தை முடித்துக்கொண்டு தலைமை அமைச்சர் எதிர்வரும் 29 ஆம் திகதி நாடு திரும்புவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

# மீதொட்டமுல்ல இடரைப் போன்று புத்தளத்திலும் ஏற்படுத்த வேண்டாம்

## அமைச்சர் சம்பிக்க வலியுறுத்து

கொலன்னாவ மீதொட்டமுல்லவில் குப்பை மேடு சரிந்து விழுந்த இடர் போன்று மீண்டும் ஓர் இடரைப் புத்தளத்தில் ஏற்படுத்த வேண்டாம். குப்பைப் பிரச்சினைகளுக்கு விஞ்ஞான ரீதியாகத் தீர்வு காண வேண்டும்.

இவ்வாறு மேல் மாகாண மாநகர அபிவிருத்தி அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பு மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

"குப்பை சேகரிப்பை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தி, கொழும்பு அரசின் அதிகார சபையின் கீழ் முகாமை செய்யப்படவேண்டும். நாட்டிலுள்ள குப்பைப் பிரச்சினைகள் தொடர்பில், சகல மக்களும் கரிசனை கொள்ள வேண்டும். குப்பைப் பிரச்சினையால் மீதொட்டமுல்ல வில் இடம்பெற்ற இடர் போன்று மீண்டும் ஓர் இடரைப் புத்தளத்தில் ஏற்படுத்தவதற்கு இடமளிக்க முடியாது-என்றார். (ஐ-10)

50 வருட காலமாக யாழ் குடாநாட்டு மக்களின் நன்மதிப்பைபெற்ற உங்கள் அபிமான

மைதிலி நகைமாடம் இன்

தங்கத்திருநாளாம் அக்ஷய திருதியை கொண்டாட்டம்



இம்மாதம் (29.04.2017) 29 ஆம் திகதி வரை எம்மிடம் நகை வாங்கும் அனைத்து வாடிக்கையாளர்களின் சிட்டைகளும், குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு விசேட பரிசுகள் காத்திருக்கின்றன.

முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகள்
தங்க நாணயங்கள், மேலும் 10 ஆறுதல் பரிசுகள்

அன்றைய தினத்துக்கான (28,29 ஆம் திகதி) விசேட சலுகைகள்

- அதி நவீன டிசைனுக்கேற்ப நம்ப முடியாத விலைக் கழிவுகள் வழங்கப்படும்.
- பழைய நகைகளைக் கொடுத்து நகை வாங்குவோருக்கு அன்றைய பவுண் விலைக்கே எடுக்கப்படும்.
- குறிப்பிட்ட நகைகள் தங்க விலைக்கே சேதாரம் இல்லாமல் வழங்கப்படும்.
- நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் அதி விசேட பரிசு காத்திருக்கின்றது.
- 02 பவுணுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு பவுண் கரசு அன்பளிப்பாக வழங்கப்படும்.

காலை 8.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை
கடை திறந்திருக்கும்

அக்ஷய திருதியை

அர்த்தமுள்ள அக்ஷய திருதியில் பொன், பொருள் வாங்கினால் செல்வம் பெருகும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

செல்வத்துக்கு அதிபதியான குபேரன் நான் இழந்த சங்க நிதி, பதும நிதிகளை பெற்றது அக்ஷய திருதியை நாளில்தான். பாண்டவர்கள் வன வாசத்தின்போது சூரியனிடம் இருந்து அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரம் பெற்றது இந்த நாளில்தான். அதேபோல் மணிமேகலையும் இந்த நாளில்தான் அக்ஷய பாத்திரம் பெற்றுள்ளார். ஆம் உங்கள் சௌபாக்கியம் குறையாத வாழ்வின் அதிர்ஸ்டம் பெருகிட தூய தங்க ஆபரணங்களை உங்கள் ஒவ்வொருவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லத் தவறாதீர்கள்.



89V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 7902

## பாதீனிய கட்டுப்பாட்டு அதிகாரிகளின் விவரம் திரட்டும் பணிகள்

யாழ்ப்பாணம், ஏப். 22

பாதீனியத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு அடையாள அட்டை கிடைக்கப்பெறாதவர்களின் விவரம் திரட்டப்படுகின்றது. வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் இதற்கான நடவடிக்கைகயை எடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் வேகமாகப் பரவிவரும் பாதீனியத்தைக் கட்டுப்படுத்த விவசாயப் பணிப்பாளர் நாயகம் 72 அதிகாரிகளை நியமித்தார்.

இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு அடையாள அட்டையும், நியமனக் கடிதமும் இதுவரை கிடைக்கவில்லை.

இவ்வாறு அடையாள அட்டை, நியமனக் கடிதம் கிடைக்காத அரச அதிகாரிகளின் விவரங்களை வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திரட்டி வருவதாகத் தொரிவிக்கப்பட்டது.

(த -50)

## வெடிபொருள்கள் அகற்றும் பணியில் தொடரும் தாமதம்

### மீளக்குடியமர முடியாமல் அந்தரிப்பதாக பச்சிலைப்பள்ளி மேற்கு மக்கள் குற்றச்சாட்டு

பளை ஏப். 22

வெடிபொருள்கள் அகற்றும்போது குடியிருப்புப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் எனப் பச்சிலைப்பள்ளி மேற்குப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த 200 இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்னமும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரவில்லை. அவர்கள் தமது உறவினர், நண்பர்கள் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி மேற்குப் பகுதியில் படையினரும் விடுதலைப் புலிகளும் முகாமிட்டிருந்தமையால் பெருமளவு வெடிபொருள்கள் புதைக்கப்படடிருக்கலாமெனக் கருதி அங்கு சில பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

இந்தப் பகுதிகளில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் ஹலோ ட்ரஸ்ற் மற்றும் டாஷ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் வெடிபொருள்கள் அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஏ-9 சாலை புனரமைப்பு மற்றும் தொடருந்துப் பாதை அமைப்பு ஆகியவற்றுக்காக இந்தப் பகுதியில் சுமார் 500 மீற்றர் அகலத்தில் இரண்டு கிலோமீற்றர் தூரம் வரை வெடிபொருள்கள் அகற்றப்பட்டுப் பிரதான சாலை மற்றும் தொடருந்துப் பாதை அமைக்கும் வேலைகள் நடைபெற்றன.

அந்த நேரத்தில் முகமாலை தெற்கில் படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளில் இராணுவத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் வெடிபொருள்களை அகற்றினர்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் முகமாலை தெற்கு மற்றும் இந்திராபுரம் கிராமங்களில் வெடிபொருள்கள் அகற்றப்பட்ட பகுதிகளில் சுமார் 150 மீற்றர் தூரம் வரை மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு பச்சிலைப்பள்ளி மேற்கில் குடியிருப்புப் பகுதிகள் அடையாளம் காட்டப்பட்டு அவற்றில் காணப்படும் வெடிபொருள்களை அகற்றி அங்கு தம்மை மீளக்குடியமர்த்துமாறு அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அண்மையில் அந்தப் பகுதியில் வெடிபொருள்கள் அகற்றப்பட்ட பகுதிகளின் விவரங்களைக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் வெளியிட்டிருந்தனர். ஆயினும் அந்தப் பகுதிகள் அனைத்தும் முன்னர் தென்னந் தோப்புக்களாகக் காணப்பட்ட இடங்களே எனவும், அதில் மக்கள் குடியிருப்புப் பகுதிகள் இல்லையெனவும் அந்தப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

காணி விடுவிப்புப் போராட்டங்களில் அக்கறை காட்டி வரும் அரசியல்வாதிகள் 17 வருடங்களாக மீளக்குடியமர முடியாமல் தவிக்கும் எமது பிரச்சினையிலும் அக்கறை காட்டவேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

குறித்த பிரதேசங்களில் உடனடியாக வெடிபொருள்கள் அகற்றும் பணிகளை மேற்கொண்டு தாம் விரைவில் மீளக்குடியமர உதவுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(த -9)

## சிறுநீரகநோய் ஆய்வுக்கு 4 நிலையங்கள் வடக்கில்

### சம்பத்நுவர, மாமடு நிலையங்கள் செயற்பட ஆரம்பித்துள்ளன

யாழ்ப்பாணம், ஏப். 22

முல்லைத்தீவு சம்பத்நுவரவிலும், வவுனியா மாமடுவிலும் அமைக்கப்பட்ட சிறுநீரக நோய் ஆய்வு நிலையங்கள் இயங்க ஆரம்பித்துள்ளன. மல்லாவி, செட்டிகுளம் பகுதிகளில் அமைக்கப்பட்ட நிலையங்கள் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி தொடக்கம் இயங்கும்.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கின் இரு மாவட்டங்களான வவுனியா மற்றும் முல்லைத்தீவில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த 5 ஆண்டுகளாக அதிகரித்துள்ளமையால் இங்கு தலா ஒரு ஆய்வு நிலையம் வீதம் அமைப்பதற்கு மத்திய அரசு முடிவெடுத்து அதனை முல்லைத்தீவு சம்பத்நுவரவிலும், வவுனியா மாமடுவிலும் அமைக்கத் தீர்மானித்து எமது ஒப்புதலைக் கோரியிருந்தது.

இரு ஆய்வு நிலையங்களுமே மாவட்டத்தின் ஒரு பகுதியில் அமைவதால் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களிலும் இவற்றை அமைக்க நிதி ஒதுக்கீடு வழங்கப்படுமானால் எமது ஒப்புதல் கிடைக்கும் என்பதை மத்திய அரசுக்குத் தெளிவாக தெரிவித்திருந்தோம். இதனால் இந்தத் திட்டம் மாவட்டத்துக்கு இரு ஆய்வுநிலையங்களாக மாற்றப்பட்டு 4 மத்திய நிலையங்கள் அமைக்க மத்திய சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியது.

இதன்படி ஒவ்வொரு மத்திய நிலையமும் 30 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படுகின்றன. வவுனியா மாவட்டத்தில் மாமடு மற்றும் செட்டிகுளம் வைத்தியசாலைகளிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் சம்பத்நுவர, மல்லாவி ஆகிய வைத்தியசாலைகளிலும் இவற்றை அமைப்பதற்கான நிதி அனுமதிகள் கிடைத்தன. மாம, சம்பத்நுவர ஆய்வு நிலையங்களின் பணிகள் முடிவடைந்துள்ளன. மாமடு நிலையம் கடந்த வாரம் இயங்கத் தொடங்கியது சம்பத்நுவர நிலையம் இன்று (நேற்று) ஆரம்பித்து வைக்கப்பட்டது. மல்லாவி, செட்டிகுளம் நிலையங்களின் பணிகளும் பூர்த்தியடைகின்றன. அவை இரண்டும் ஜூன் முதலாம் திகதி முதல் பணிகளை ஆரம்பிக்கும்.

இதேபோன்று மல்லாவி வைத்தியசாலைக்கு 25 மில்லியன் ரூபா செலவில் ஒரு சத்திர சிகிச்சைக் கூடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சத்திர சிகிச்சைக் கூடமானது வடக்கில் 3 வைத்தியசாலைகளை தள வைத்தியசாலைகளாகத் தரம் உயர்த்தும் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. ஏனைய இரு சத்திர சிகிச்சைக் கூடங்களையும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையிலும், முருங்கன் வைத்தியசாலையிலும் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன - என்றார். (த - 101)

## தொழில்நுட்ப அலுவலர்களுக்கு இடமாற்றங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 22

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 73 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (சிவில்) இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

வடக்கு மாகாணப் பொது நிர்வாகப் பிரதிப் பிரதம செயலாளர் திருமதி ச.மோகநாதன் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப அலுவலர்கள் ஒரே சேவை நிலையத்தில் ஐந்து வருடங்களுக்கு மேல் பணியாற்றினால் அவர்களை இடமாற்றம் செய்யுமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் உரிய அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இதன் அடிப்படையில் ஒரே சேவைநிலையத்தில் ஐந்து வருடங்களுக்கு மேல் பணியாற்றிய 73 தொழிநுட்ப அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(த - 50)

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

கிளிநொச்சி, ஏப்.22

திருநாவுக்கரசு நாயனார் குருபூசைநிகழ்வுகள் இன்று காலை 8.30 மணிக்கு உருத்திரபுரம் சிவாலயத்தில் நடைபெறும்.

திருநெறிக்கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக் குருபூசை நிகழ்வில் சிறப்பு பட்டிமன்றம் உட்பட பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுவதுடன் அறநெறி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.

(ய)

## மன்னாரில் தொடரும் மக்கள் போராட்டங்கள்

மன்னார், ஏப். 22

தமது பூர்வீக நிலங்களில் நிலைகொண்டுள்ள கடற்படையினரை வெளியேற்றக் கோரி முள்ளிக்குளம் மக்கள் நேற்று 30 ஆவது நாளாகவும் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இதேவேளை, முசலிப் பிரதேச மக்களின் வாழ்விடங்களையும், நிலங்களையும் அபகரிப்புச் செய்யும் புதிய வர்த்தமானிப் பிரகடனத்தை உடனடியாக இரத்துச் செய்யக் கோரி மறிச்சிக்கட்டி பள்ளிவாசலுக்கு முன்பாக முஸ்லிம் மக்கள் நேற்று 26 ஆவது நாளாகப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டங்களில் ஈடுபட்டுள்ள முள்ளிக்குளம் மற்றும் மறிச்சிக்கட்டி கிராம மக்களுக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவுகளை வழங்கி வருகின்றனர்.



கடற்படையினரால் அபகரிக்கப்பட்டுத் தற்போது கடற்படை முகாமாக மாறியுள்ள தமது நிலத்தை விடுவித்துத் தம்மை மீள்குடியமர்த்துமாறு கோரி முள்ளிக்குளம் மக்கள் கடந்த மாதம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பித்த கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 30 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.



நிலம் மீட்கப்பட்டுச் சொந்த மண்ணில் குடியேற்றம் செய்யப்படும் வரை போராட்டம் தொடரும் என அந்த மக்கள் கூறினர்.

முசலிப் பிரதேச மக்களின் வாழ்விடங்களை அபகரிப்புச் செய்யும் புதிய வர்த்தமானிப் பிரகடனத்தை உடனடியாக இரத்துச் செய்யக் கோரி மறிச்சிக்கட்டி பள்ளிவாசலுக்கு முன்பாக முஸ்லிம் மக்கள் முன்னெடுக்கும் போராட்டமும் தொடர்கிறது.

நல்லாட்சியை உருவாக்கிய சிறுபான்மையின மக்களின் நிலை இன்று கேள்விக்குறியாக் இருப்பதாகவும், தமது பூர்வீக மண்ணை மீட்டெடுக்கும் வரை எத்தனை துன்பங்கள் வந்தாலும், போராட்டம் தொடரும் எனவும் அந்த மக்கள் கூறினர்.

(த - 56)

## கடத்திய ஆடுகளை இறைச்சியாக்கி விற்பனை செய்த ஐந்து பேர் கைது

கிளிநொச்சி ஏப் 22

கிளிநொச்சி, பளை நகர்ப் பகுதியில் உள்ள பண்ணையில் ஆடுகளைக் கடத்தி இறைச்சியாக்கிப் புதுக்குடியிருப்புக்குக் கடத்திய 5 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாகப் பளைப் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த புதன்கிழமை இரவு பளை நகர் பகுதியில் அமைந்துள்ள பண்ணை ஒன்றில் 2 ஆட்டுக்கடாக்கள் கடத்தப்பட்டு இறைச்சியாக்கிப் புதுக்குடியிருப்புக்குக் கொண்டு செல்லப்பட்டன. புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியில் வீடு ஒன்றில் ஆட்டிறச்சி விற்பனை செய்யப்படுவதாகப் பளைப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. அங்கு விரைந்த பொலிஸார் இருவரை கைது செய்தனர். கிளிநொச்சியில் உள்ள இருவரே ஆட்டிறைச்சியைத் தமக்குத் தந்ததாக அவர்கள் விசாரணைகளின்போது கூறியுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள இருவரைக் கைது செய்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பளை வண்ணாங்கேணிப் பகுதியில் உள்ள ஒருவரே இறைச்சியைத் தந்ததாகத் தெரிவித்துள்ளனர். பின்னர் அவரையும் கைது செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது ஆடுகள் கடத்தப்பட்டு இத்தாவில் பகுதியில் உள்ள ஒரு காட்டுக்குள் வைத்து இறைச்சியாக்கப்பட்டு விற்பனைக்காகப் புதுக்குடியிருப்புக்கு அனுப்பப்பட்டமை தெரியவந்தது.

ஆடுகள் அழிக்கப்பட்ட பகுதிக்குச் சென்ற பொலிஸார் தடயப் பொருள்களை மீட்டதுடன் கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த - 6)

# மகிந்த செய்த பாவங்களையே இன்று நாம் போக்குகின்றோம்

## இப்படிக்கூறுகிறார் அர்ஜுன ரணதுங்க



கொழும்பு, ஏப். 22
மகிந்த செய்த பாவங்களையே நாம் இன்று போக்கிக் கொண்டிருக்கிறோம். மகிந்த சீன நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுத் துறைமுகங்களைக் கொடுப்பதற்கு முயற்சித்தார். நாமும் ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டு, அதற்கான நிதியை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றிருக்கலாம். கடந்த காலத்தில் அமைச்சர்கள் இதனையே செய்தார்கள். அன்று அவர்கள் கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களின் பிரதி பலனையே நாம் இன்று செலுத்துகின்றோம்.

இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார் என்று துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது,

துறைமுக அதிகார சபையை இலாப மீட்டும் நிறுவனமாக மாற்றியமைத்துள்ளோம். இன்னுமொரு துறைமுக அதிகார சபையை ஏற்படுத்த இடமளிக்கப் போவதில்லை. அதுவே எமது கொள்கையாகும். அமைச்சர்கள் என்ற வகையில் அரசு தவறிழைக்கும் பொழுது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அதிகாரம் எமக்குள்ளது. இன்று எமக்கு நிலையான அரசொன்று உள்ளது. நாம் நாட்டை முன்னேற்றுகின்றோம். இதன் பொருட்டு அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சருக்கு தேவையொன்றுள்ளது. ஒவ்வொருவருக்கும் விற்பனைச் செய்வதற்காக நாம் இந்த அரசைப் பொறுப்பேற்கவில்லை. முதலீட்டாளர்களை வரவழைத்து எமக்கு நன்மை பயக்கும் வகையில் முதலீடுகளை மேற்கொள்வதே எமது குறிக்கோளாகும்.

இன்று வரை எனக்கெதிராகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றை எண்ணி நான் கவலைக் கொள்கின்றேன். எம்முடைய அமைச்சரவையிலுள்ள அமைச்சரொருவர் திருட்டுச் செயலில் ஈடுப்படுவாராயின், அவரை அரச தலைவர் கண்டிப்பாகத் தண்டிப்பார் என்பதை நான் நன்கறிவேன். தண்டிக்கவேண்டுமென்றே நாங்களும் கேட்கின்றோம். கடந்த காலத்தில் திருட்டுச் செயல்களில் ஈடுப்பட்ட ஒருவரேனும் இன்னும் தண்டிக்கப்படவில்லை. நான் இதனை முழுமையாக எதிர்க்கின்றேன். கடந்த காலத்தில் துறைமுக அதிகார சபையில் திருட்டுச் செயல்களில் ஈடுபட்ட அனைவரும் சீன நிறுவனத்தில் அங்கம் வகிக்கின்றார்கள். அரச அமைச்சர்களும் இந்தச் செயன்முறையுடன் தொடர்புபட்டிருந்தார்கள். இவற்றைச் சரி செய்யும் பொருட்டே நாம் இங்கு வந்துள்ளோம். கடந்த காலத்தில் திருட்டுச் செயல்களில் ஈடுப்பட்ட அனைவரும் தப்பித்து விட்டார்கள். நாம் அரசை முன்னோக்கிக் கொண்டுச் செல்வோம். அரசதலைவருடனும், தலைமைஅமைச்சருடனும் ஒன்றிணைந்து இந்த அரசை முன்னோக்கி கொண்டுச் செல்வோம். ஒவ்வொருவர் கூறுவதைப் போன்று என்னை வீழ்த்த இயலாது.

அரச தலைவர் என்னை வெளியே போகச் சொன்னால் நான் வெளியே செல்வேன். அவ்வாறின்றி ஒவ்வொருவரும் கூறுவதைப் போன்று பதவி விலகுவதற்கு நான் ஒன்றும் கைப்பாவையல்ல. நான் இங்கு செய்துள்ளவற்றை ஒருவரேனும் செய்யவில்லை. அவர்கள் இருந்திருந்தால் தற்சமயம் ஒப்பந்தங்களைச் கைச்சாத்திட்டிருப்பார்கள். நாம் இந்த நிலையில் மாற்றம் ஏற்படுத்தியுள்ளோம் என்று அமைச்சர் தெரிவித்தார்-என்றுள்ளது. (ஐ-10)

---

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி தர்மலிங்கம்



பிறப்பு 13.03.1941 இறப்பு 19.04.2017

நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கல்மடுநகர், இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும்தற்போது கிளிநொச்சி, உதயநகரில்வசித்து வந்தவருமான திருமதி மகேஸ்வரி தர்மலிங்கம் 19.04.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - சௌந்தரம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிற்றம்பலம் - இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், திரிலோகநாயகி (உதயநகர்-கிளிநொச்சி), கௌரி(செட்டிகுளம், வவுனியா), கணேசகுமாரி (இராமநாதபுரம் , கல்மடுநகர்), தவயோகராசா (கனடா), வள்ளிநாயகி (கிளிநொச்சி பொதுவைத்திய சாலை) ஆகியோரின் அன்புத்தாயாரும், துரைலிங்கம் (கிளிநொச்சி, உதயநகர், நாயகி ஸ்ரோர்ஸ்), ஞானப்பிரகாசம் (செட்டிகுளம்), நந்தகுமார் (கல்மடுநகர்), பாமினி (கனடா), அரவிந்தன் (கிளிநொச்சி கோல்டன் ஈகிள் நிறுவனத்தின் ஊழியர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற மகாலிங்கம் (கனடா), மகாலட்சுமி (கனடா), பரமேஸ்வரி (கொழும்பு), மங்கையற்கரசி (கனடா), பாலசிங்கம் (கனடா), காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், சாந்தலிங்கம், மனோன்மணி மற்றும் மருதலிங்கம் (கனடா), சூரியநாதன் (கனடா), ஆறுமுகநாதன் (கனடா), கமலாம்பிகை (நயினாதீவு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தில்லைவனம், நாகராசா, குணசிங்கம் (நயினாதீவு), மற்றும் இராசலிங்கம் (கனடா), பராசக்தி (கனடா), நாகேஸ்வரி (கனடா), கிருபாலினி (கனடா), பரமேஸ்வரி (கனடா), ரவிக்குமார் (நயினாதீவு) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, பூபதி, செல்லம்மா, தில்லைநாதன், திருநாவுக்கரசு, நித்தியலட்சுமி மற்றும் திருநீலகண்டன் (கிளிநொச்சி), காலஞ்சென்ற யோகநாதன், ஞானதேவி (D8 உருத்திரபுரம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான குணரத்தினம் (நயினாதீவு), கணேசு (நயினாதீவு), துரைசிங்கம் (நயினாதீவு) மற்றும் இராசம்மா (வவுனியா), தில்லைநாயகி (நயினாதீவு), காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் (D8 உருத்திரபுரம்), பாக்கியம் (D8 உருத்திரபுரம்) மற்றும் சிவராணி (வவுனியா), ஐயா துரை (D8 உருத்திரபுரம்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், தர்சினி-நரேஸ்குமார்(அம்பாள் ஸ்ரோர்ஸ்-கிளிநொச்சி), தினேஸ்(அயர்லாந்து), விஸ்ணுவர்த்தன் (கிளிநொச்சி), சேந்தன் (கிளிநொச்சி), கோகுலன் (கிளிநொச்சி), சுரேந்தன் (செட்டிகுளம்), பிரதீபா இன்சாத் (செட்டிகுளம்), டிலக்சனா (கல்மடுநகர்), லக்சனா (கல்மடுநகர்), டிலக்சன் (கல்மடுநகர்), காலஞ்சென்ற மஜீவன், தனுசன் (கனடா), தர்சிகன் (கனடா), அபிநயா(கிளிநொச்சி), ருசானி (கிளிநொச்சி) ஆகியோரின் பேர்த்தியும், பரணிதரனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சி, உதயநகர் கிழக்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனந்தநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 321 1302 தகவல்: குடும்பத்தினர்.

---

## ஹெரோயினுடன் இருவர் கைது



கொழும்பு, ஏப். 22
ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த இருவர் வெல்லம்பிட்டியப் பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் சிறப்பு அதிரடிப்படைப் பிரிவு தெரிவித்தது.

பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையின் தலைமையக முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

ஒருவரிடமிருந்து 790 மில்லி கிராம் ஹெரோயினும், மற்றவரிடமிருந்து 680 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும் மேலதிக விசாரணைகளுக்காக வெல்லம்பிட்டியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்ற பொலிஸ் சிறப்பு அதிரடிப்படை மேலும் தெரிவித்தது. (ஐ-10)

---

## சிலர் பதவி விலகுவதால் கட்சிக்குப் பாதிப்பில்லை

### ஜோன் அமரதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 22
ஐக்கிய தேசியக் கட்சியில் ஒரு தொகுதி அமைப்பாளர் பதவி விலகினால் இன்னும் பலர் அந்தப் பதவிக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

இதனால், கட்சிக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. இவ்வாறு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கந்தான தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து மேல் மாகாண சபை உறுப்பினர் ரோஸ் பெர்ணான்டோ பதவி விலகுவதாக அறிவித்திருந்தார். இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

"நான் வகிக்கும் அனைத்துக் கட்சிப் பதவிகளிலிருந்தும் நீங்கிக் கொள்கிறேன். இது தொடர்பான கடிதம் தலைமை அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது" என்று கந்தான ஐ.தே.க. காரியாலயத்தில் இடம்பெற்ற சிறப்பு ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு ரோஸ் பெர்ணான்டோ நேற்று முன்தினம் அறிவித்திருந்தார். அமைச்சர் ஜோன் அமரதுங்கவுடன் இடம்பெற்ற கருத்து மோதலே இந்தப் பதவி விலகலுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

---

## நீர்மின் உற்பத்தி நிலையங்களுக்கான அனுமதிப் பத்திரங்களில் மாற்றம் தேவை

கொழும்பு, ஏப். 22
சிறு அளவிலான நீர்மின் உற்பத்தி நிலையங்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கும்போது புதிய தொழில்நுட்ப முறைகளை உபயோகிக்கவேண்டும் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சிறு அளவிலான நீர்மின் உற்பத்தி நிலையங்களுக்கு அருகில் மேற்கொள்ளப்படும் புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் அரச தலைவர் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று அரச தலைவரின் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிரச்சினைகள் காணப்படும் செயற்திட்டங்களை இனங்கண்டு, உரிய அரச நிறுவனங்களில் தனியான குழுக்கள் நியமிக்க வேண்டும். தற்போது தேசிய சிறு அளவிலான நீர்மின் உற்பத்தி நிலையங்களின் மூலமாக 340 மெகாவாட்ஸ் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்புக்கு வழங்கப்படுகின்றது. இதனை 550 மெகாவாட்ஸ்களாக அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை இனங்காணல், தேசிய நீர்மின் உற்பத்தி நிலைய அபிவிருத்தியாளர்கள் அந்தத் துறையில் எதிர்நோக்கும் சவால்கள், புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்திக்கான தேசிய இலக்கை எட்டுவதற்கான புதிய செயன்முறைகளை இனங்காணல், சூழல் சமநிலை பேணப்படும் வகையில் அபிவிருத்திச்செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான புதிய முறைகளை இனங்காணல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது- என்றுள்ளது. (ஐ-10)

---

## சீனாவைப் போன்று கூட்டுறவு கிராமங்களை இலங்கையிலும் உருவாக்குவது குறித்து ஆராய்வு

கொழும்பு, ஏப். 21
சீனாவில் உள்ளதைப் போன்று கூட்டுறவுக் கிராமங்களை இலங்கையிலும் உருவாக்குவது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

சீனக் கூட்டுறவு தலைமைச் சங்கத்தின் தலைவரும், பன்னாட்டுக் கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவருமான லீ சுங் செங்குக்கும், கைத்தொழில், வணிகத் துறை அமைச்சருமான றிசாத் பதியுதீனுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம் பெற்றது. அதன்போதே இது தொடர்பில் ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வியட்நாமில் நடைபெறும் ஆசிய பசுபிக் நாடுகளின் அமைச்சர்களின் மாநாட்டு நிகழ்வை அடுத்து இந்தச் சந்திப்பு, ஹனோயில் அமைந்துள்ள ஹோட்டல் மிலீயாவில் இடம் பெற்றது. சீன அரசு இலங்கையுடன் மிக நெருக்கமாகச் செயற்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்குப் பல்வேறு வகையிலும் உதவிகளை வழங்கும்.

2004 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட சுனாமி சீற்றத்தையடுத்து, அந்த மக்களது வாழ்வாதார மற்றும் அவசர தேவைகளுக்காக சீனக் கூட்டுறவுச் சங்கம் உதவியது என்று பன்னாட்டு கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவர் சுட்டிக்காட்டினார். இலங்கைக் கூட்டுறவு ஆணையாளர் சுலைமான் லெப்பை நசீர், தேசிய கூட்டுறவுச் சபையின் செயலாளர் அசன்க ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (ஐ-4)

## பாதுகாப்பு அமைச்சில் சிறப்புச் செயலமர்வு

கொழும்பு,ஏப். 22
தகவல் அறியும் சட்டம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் முக்கியஸ்தர்கள் மற்றும் மூத்த அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தும் சிறப்புச் செயலமர்வு பாதுகாப்பு அமைச்சில் நேற்றுக் காலை இடம்பெற்றது.
இதில் 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தகவல்களை அறியும் சட்டம் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.
அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரங்க கலன்சூரிய, தேசிய ஊடக கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி ஜெயகத் லியன ஆராய்ச்சி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.
இந்த நிகழ்வில் அமைச்சின் மூத்த அதிகாரிகள் முப்படையைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
(ஐ - 10)

# அரச தலைவரின் தீர்மானத்துக்கு உடன்பட முடியாது

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 22
மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் அரச தலைவர் முன்வைத்துள்ள தீர்மானத்துக்கு உடன்பட முடியாது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலர் மருத்துவர் நவீன் டி சொய்ஷா தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது,
அரச தலைவரின் தீர்மானம் தொடர்பில் சைட்டத்துக்கு எதிராக 100 தொழிற்சங்கங்கள் ஒன்று கூடிக் கலந்துரையாடின. அரச தலைவரின் தீர்மானத்துக்கு உடன்பட முடியாது என்றே சகல தொழிற்சங்கங்களும் தெரிவித்தன.
சைட்டத்துக்கு வேறு ஒரு நிர்வாக சபை நியமிக்கப்பட வேண்டும் என்று அரச தலைவர் முன்வைத்துள்ள யோசனையின் மூலம், தற்போது அந்த நிறுவனத்திலுள்ள நிர்வாக சபை தவறானது என்பதை அரச தலைவர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதைக் காட்டுகின்றது - என்றார்.
சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரியைக் கொழும்பு பங்குச்சந்தையின் கீழ் பட்டியல்படுத்தவுள்ளதாகவும், சைட்டம் நிறுவனத்தைத் தனியார் நிறுவனம் என்ற நிலையிலிருந்து மாற்றி, அதனை அரச கட்டுப்பாட்டுச் சபையாக மாற்றுவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் அரச தலைவர் சைட்டத்துக்கான அரசின் தீர்வாக நேற்று முன்தினம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
(ஐ - 10)

# எந்த பிரச்சினைக்கும் பேச்சு மூலமே தீர்வு இல்லையெனில் இழப்புக்களே மிஞ்சும்

### என்கிறார் கல்வி இராஜாங்க அமைச்சர்



நுவரெலியா, ஏப். 22
நாட்டில் சிறு பான்மையினராக இருக்கும் நாம் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். இல்லையெனில் அது எமது சமூகத்தைப் பாதிக்கும். எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும், அதனைப் பேச்சின் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதனை விடுத்து வேறு வழிகளைக் கையாள நினைத்தால் அதன் இழப்புகளை நாமே சந்திக்க வேண்டி வரும்.
இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.
இறக்கவானைப் பகுதியில் இரண்டு சிறு பான்மை குழுவினருக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது,
கிரிக்கட் சுற்றுப் போட்டியின் போது இரண்டு குழுக்களுக்கு இடையில் அண்மையில் மோதல் ஏற்பட்டது. இந்த மோதல் தொடர்ச்சியாக நடைபெற்றது. நேற்று முன்தினம் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இரண்டு குழுக்களிலும் 6 பேர் கைது செய்யப்பட்டனர். இன்னும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய நபர்கள் கைது செய்யப்படவில்லை.
இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் அழைத்து மதத் தலைவர்களையும் தொடர்புபடுத்தி, இனிமேல் எதிர்காலத்தில் இவ்வாறான ஒரு நிகழ்வு நடைபெறாமல் இருக்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டேன் - என்றார்.
இறக்குவானைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பமுனுசிங்ஹவிடம் தெரிவித்ததாவது:
தற்பொழுது நிலைமை சுமுகமான நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இரண்டு குழுக்களில் இருந்தும் 6 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர்களை நாளை மறுதினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். சம்பவம் தொடர்பாக ஒருவர் தலைமறைவாகியுள்ளார். இன்னுமொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர்களையும் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொலிஸார் நிலைமைகளைக் கண்காணித்து வருகின்றனர். சம்பவம் தொடர்பாக பொலிஸார் பக்கச் சார்பின்றி நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் - என்றார்.
(ஐ)

# மீதொட்டமுல்லவில் இடர் ஏற்படுமென முன்னரே மக்களுக்குத் தெரிவித்தோம்

### அங்கிருந்து வெளியேறுவதற்கு மக்கள் மறுத்தனர் என்கிறார் மேல்மாகாண முதலமைச்சர்



கொழும்பு, எப். 21
மீதொட்டமுல்ல இடர் இடம்பெறுவதற்கு முன்னர், இடர் குறித்து மக்களுக்கு முன்னரே அறிவித்தோம். அந்த மக்கள் வெளியில் தங்குவதற்கான வாடகைப் பணத்தை வழங்குவதற்கும் கொழும்பு மாநகர சபையூடாக நடவடிக்கை எடுத்தோம். ஆனால், சில அரச சார்பற்ற நிறுவனங்களின் பேச்சை நம்பி, மக்கள் அந்த இடத்திலிருந்து வெளியேறவில்லை. அதனாலேயே அவர்களது உயிர்கள் பறிபோயின.
இவ்வாறு மேல்மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்தார்.
கொழும்பு டார்லி வீதியில் அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
மீதொட்டமுல்ல இடர் தொடர்பில் பல்வேறு தரப்பினர் பலவிதமானக் கருத்துகளை முன்வைக்கின்றனர். நாங்கள் இந்தப் பிரச்சினைக்கு முழுமையாகப் பொறுப்பேற்கிறோம். எவர் மீதும் பழி சுமத்திவிட்டுத் தப்பிக்க முயற்சிக்கவில்லை.
இந்தக் குப்பைமேடு சரிந்து விழுந்ததிலிருந்து, மீண்டும் இவ்வாறானதொரு இடர் ஏற்படாத வண்ணம் முறையான கழிவு நிர்வாகத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதை நாங்கள் விளங்கிக்கொண்டோம்.
கடந்த மாதம் 31ஆம் திகதி இடர் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுப்படுத்தினோம். மக்களைக் குறித்த பிரதேசத்தில் இருந்து வெளியேற்றுவதற்குக் கொழும்பு மாநகர சபையின் ஊடாக நடவடிக்கை எடுத்தோம். ஆனால், அந்த மக்களில் பெரும்பான்மையானவர் வெளியேற மறுத்து விட்டனர். 40 பேர் வரை வெளியேறினர். அவர்களது வீட்டு வாடகைக்கான பணத்தை அரசு முழுமையாக பொறுப்பேற்றது.
இடர் ஏற்படும் என்று எச்சரிக்கை விடுத்து, மேலும் பல குடும்பங்களைச் சேர்ந்த 40 பேரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தோம். அவர்கள் கேட்கும் அளவு பணத்தைக் கொடுக்கவும் நாங்கள் தயாராக இருந்தோம். ஆனால், சில அரசார்பற்ற நிறுவனங்களின் பேச்சைக் கேட்டு அவர்கள் வெளியேற மறுத்து விட்டனர். அதன் காரணமாகவே அவர்களின் உயிர்கள் பறிபோயின.
தற்போது குறித்த நிறுவனங்கள் பொறுப்பேற்குமா? அப்பாவி உயிர்கள் பறிபோய் விட்டன. எனவே, இதனை அரசு முழுமையாகப் பொறுப்பேற்கும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவில் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.
கொழும்பில் இருந்தும் மீதொட்டமுல்லவில் இருந்தும் அகற்றப்படும் குப்பைகளை கரதியான மற்றும் முத்துராஜாவெளியவில் சேகரிப்பதற்கு மாற்றுத் தீர்வு காணவுள்ளோம்.
குப்பைகளை வகைப்படுத்தி மின்சார உற்பத்திக்கான அடித்தளத்தை அரசு இட்டுள்ளது. அதற்கான உடன்பாடுகள் விரைவில் கைச்சாத்திடப்படும். எதிர்வரும் மூன்று வருடங்களில் மேல் மாகாணம் குப்பைகள் அற்ற மாகாணமாக மாற்றிமையுக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். அதற்கான பன்னாட்டு முதலீடுகளையும், தொழில்நுட்ப உதவிகளையும் அரசு பெற்றுக்கொள்ளும் - என்றார்.
(ஐ - 4)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 04.04.2017 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்
அமரர் சின்னத்தம்பி முரளிதரன்
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.04.2017) சனிக்கிழமை காலை 9 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (24.04.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
தனிப்பட்ட அழைப்புக்கள் கிடைக்கப் பெறாதவர்கள் தயவுசெய்து இதனை அவ் அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.
அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு.
குடும்பத்தினர்.
076 583 0174



உக்ரைனின் தலைநகர் கீவில் உள்ள அதிபரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு முன்னால் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தை அடுத்து அங்கு கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர். அவர்களின் கேடயங்களில் பூவைத்துச் செல்கிறார் ஒரு இளம் பெண். (ம)

# ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் மூ

## நாளுக்குநாள் வலுப்பெறுகிறது



கரஸ்கஸ், ஏப். 22

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிராக நேற்றுக் காலை (இலங்கை நேரப்படி) நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதில் மூவர் உயிரிழந்தனர். பொலிஸாரே துப்பாக்கிச் சூட்டை நடத்தினர் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

தென்னமரிக்க நாடுகளில் ஒன்றான வெனிசுலா தற்போது பெரும் பொருளாதாரப் பின்னடைவை எதிர்கொண்டுள்ளது. இதனால் அந்த நாட்டு அதிபர் நிக்கோலஸ் மதுரோவைப் பதவி விலக வேண்டும் என்று எதிர்கட்சிகள் வலியுறுத்தின. இது தொடர்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முக்கியத் தலைவர்கள் பலர் சிறையிடப்பட்டுள்ளனர். அவர்கள் அரசியலில் ஈடுபட சில வருடங்கள் தடையும் விதிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த எதிர்ப்பலை தற்போது மக்கள் போராட்டமாக உருப்பெற்றுள்ளது. நாளுக்கு நாள் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் நடைபெறுகின்றன. சில இடங்களில் நடைபெறும் போராட்டங்களுக்கு லட்சக்கணக்கில் மக்கள் பங்குபற்றுகின்றனர் என்றும் பன்

# வடகொரியாவை மேலும் இறுக்க ஐ.நா. வியூகம்



வொஷிங்டன், ஏப். 22

வடகொரியா தனது அணுவாயுதச் சோதனையைத் தொடர்ந்தால் அந்த நாட்டின் மீது மேலும் பல தடைகள் விதிக்கப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபை நேற்று அறிவித்தது.

ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்தியுள்ள பன்னாட்டு சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறி வடகொரியா தொடர்ந்து பல தடவைகள் அணுவாயுத சோதனைகளை நடத்தி வந்தது. அந்த நாட்டின் முக்கிய ஏற்றுமதியான நிலக்கரியை முடக்கிய பின்னரும் வடகொரியாவின் அணுவாயுதத் திட்டங்கள் தொடர்ந்துகொண்டே இருந்தன.

அணுவாயுதத்தால் அமெரிக்காவையும் தாக்குவோம் என்றும் அந்த நாடு எச்சரித்திருந்த நிலையில் தற்போது கொரியத் தீபகற்பத்தில் அமெரிக்கா, வின்சன் என்ற விமானம் தாங்கி போர்க் கப்பலையும் சில போர் விமானங்களையும் நிறுத்தியுள்ளது. இதனால் வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் தற்போது முறுகல் நிலை உச்சம் தொட்டுள்ளது.

இனிவரும் காலங்களில், வாரத்தில் ஒரு அணுவாயுத்சோதனை நடத்த வடகொரியா திட்ட மிட்டுள்ளது. இதனையடுத்து ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டமொன்று நேற்றுக் காலை (இலங்கை நேரப்படி) கூடியது. இதில் வடகொரியாவுக்கு கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

"வடகொரியா தனது அணுவாயுதக் கொள்கைகளையும், திட்டங்களையும் கைவிட வேண்டும். உலக நாடுகளிடையேயும் கொரியத் தீபகற்பத்திலும் பதற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தால் அந்த நாட்டின் மீது இன்னும் பல பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும்" என்று ஐக்கிய நாடுகள் சபை மேலும் அறிவித்தது. (ம)



# பேருந்து விபத்தில் 6 பேர் உயிரிழப்பு

## இந்தியாவில் துயரம்

புதுடெல்லி, ஏப். 22

இந்தியாவின் மகாராஸ்டிரா மாநிலத்தில் பேருந்தும் லொறியும் நேற்றுக் காலை நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் 6 பேர் உயிரிழந்தனர்.

சங்கிலி மாவட்டம் அகல்கான் பத்ரா என்ற இடத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றது. உயிரிழந்த 6 பேரைத் தவிர 13 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

# பாரிஸில் துப்பாக்கிச் சூ



பாரிஸ், ஏப். 22

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) மர்மநபரொருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

தாக்குதல் நடத்தப்பட்ட சில நிமிடங்களிலேயே தாக்குதல்தாரி தன்னைத்தானே சுட்டுக் கொண்டுதற்கொலை செய்தகொண்டார். தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் அ படையில் இருவரைப் பிரான்ஸ் பொ ஸார் கைதுசெய்தனர்.

# 150 அடி உயர திடீர் பனிப்பாறை



கனடாவின் கிழக்குக் கடற்கரையில் உள்ள நியூபவுண்ட்லாந்து - லேப்ரா டோர் பகுதிகளுக்கிடையில் 150 அடி உயரமுடைய பெரிய பனிப்பாறையொன்று திடீரென தோன்றியமை உலகின் கவனத்தை ஈர்க்கும் விடயமாக அமைந்தது.

கனடாவில் இவ்வாறான திடீர் பனிப்பாறைகள் வழக்கமாக நடைபெறும் சம்பவம்தான். ஆனால் அவை அளவில் சிறியதாகவும், நகர்ந்து செல்லக்கூடிய வகையிலுமே இருக்கும். ஆனால் 150 அடியுடைய பனிப்பாறை நகர்ந்த வந்துள்ளமை ஆச்சரியப்படவைக்கும் வகையில் அமைந்துள்ளது. கடந் வருடம் 387 பனிப்பாறைகள் இ போன்று கனடாவுக்கு நகர்ந்து வந்து ளன.

இந்த வருடத்தில் இதுவரை 616 பன பாறைகள் நகர்ந்து வந்துள்ளன என்ப குறிப்பிடத்தக்கது.

# ...ல் துப்பாக்கிச் சூடு ...மூவர் உயிரிழப்பு

...வெனிசுலாவில் எதிர்ப்புக் குரல்




...னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இவ்வாறு தலைநகர் கரஸ்கஸில் நடத்தப்பட்ட போராட்டத்தில் இரு இளைஞர்களும், கொலம்பிய எல்லையில் உள்ள செயின்ட் கிறிஸ்தோபலில் நடத்தப்பட்ட போராட்டத்தில் ஒரு இளம் பெண்ணும் என மூவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலை பொலிஸாரே மேற்கொண்டனர் என்று ஆர்ப்பாட்டக் காரர்கள் குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் மதுரோ இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்தார். (ம)




## காந்தியின் படம்பொறித்த தபால் தலைகள் 10 கோடி ரூபாவுக்கு பிரிட்டனில் ஏலம்

லண்டன், ஏப். 22

மகாத்மா காந்தி உருவப்படம் பொறிக்கப்பட்ட மிக அரிய நான்கு தபால் தலைகள் இங்கிலாந்தில், இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 10 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டது.

அரிய தபால் தலைகளை ஏலம் விடும்போது, அதிக விலை கொடுத்து வாங்குவதற்குத் தபால் தலை சேகரிப்பாளர்கள் பலரும் ஆர்வம் காட்டுகின்றனர். கடந்த 1948 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி உருவப் படத்துடன் வெளியிடப்பட்ட 4 தபால் தலைகள் இங்கிலாந்தில் அண்மையில் ஏலம் விடப்பட்டன.

வழக்கமாக ஒற்றை தபால் தலையே ஏலத்துக்கு வந்துள்ளது. அரிய பொருள்கள் சேகரிப்பாளர்களிடமும் ஒற்றைத் தபால் தலைகளே உள்ளன.

ஆனால், இந்த 4 தபால் தலைகளும் ஒன்றாக இணைந்த நிலையில் வரிசையாக உள்ளன. இதுபோல் ஒன்றாக இருக்கும் 4 தபால் தலைகள் ஏலம் விடப்படுவது இதுவே முதல் முறை. எனவே, இந்தத் தபால் தலைகள் தனிச் சிறப்புவாய்ந்ததாகக்கருதப்படுகிறன. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவரே அவற்றை ஏலத்தில் வாங்கிச் சென்றார். (ம)

## யோகா தினத்துக்காக சிறப்புத் தபால் தலை வெளியிடுகிறது ஐ.நா.

பன்னாட்டு யோகா தினத்தை முன்னிட்டு, ஐக்கிய நாடுகள் சபை ஜூன் 21ஆம் திகதிசிறப்பு தபால் தலை வெளியிடவுள்ளது.

இந்தியப் பிரதமர் மோடியின் வேண்டுகோளை ஏற்று ஜூன் 21 ஆம் திகதியை பன்னாட்டு யோகா தினமாக 2015 ஆம் ஆண்டு அறிவித்தது ஐக்கிய நாடுகள் சபை. ஐக்கிய நாடுகள் சபையால் கடந்த இரு ஆண்டுகளிலும் யோகா தினம் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த நிலையில் இந்த வருடத்துக்கான யோகா தினத்தை முன்னிட்டு சிறப்புதபால் தலை வெளியிட ஐ.நா. திட்டமிட்டுள்ளது.

ஐ.நா.வின் இந்தியாவுக்கான நிரந்தர பிரதிநிதி சயத் அக்பருதீன் தனது ருவிற்றர் பக்கத்தில், 'பன்னாட்டு யோகா தினத்தை முன்னிட்டு ஐ.நா. விரைவில் சிறப்புதபால் த... வெளியிடுகிறது என்று குறிப்...டுள்ளார்.

## மற்றொரு வடகொரியாவாக உருவெடுக்கும் ஈரா...

### அமெரிக்கா குற்றச்சாட்டு

வொஷிங்டன், ஏப். 22

ஈரானின் அணுவாயுதத் திட்டங்களை முறையாகக் கண்காணித்து கட்டுப்படுத்தாவிடில் அந்த நாடு மற்றொரு வடகொரியாவைப் போன்று உருவெடுக்கும் என்று அமெரிக்காவின் அயலுறவுத்துறை அமைச்சர் டில்லர்சன் தெரிவித்தார்.

அமெரிக்காவின் துல்லிய கண்காணிப்பால் அணுசக்தி நாடாக உருவெடுக்க வேண்டும் என்ற அந்த நாட்டின் இலக்குத் தாமதப்படுத்தப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் ஈரான் கண்காணிக்கப்பட வேண்டி ஒன்று. அந்த நாட்டின் அணுசக்தி திட்டங்களைக் கண்காணிக்காவிட்டால் மற்றொரு வடகொரியாவாக அது உருவெடுக்கும். ஈரானுடன் அணுசக்தித் திட்டங்களுக்கு ஒபாமா கையெழுத்திட்டிருந்தார். எதிர்வரும் காலங்களில் அது தொடர்பில் மறுபரிசீலனை செ...யப்படும் என டில்லர்ச... மேலும் தெரிவித்தார். (ம)





...ன் அடிப்... பொலி... (ம)

...ற



...கடந்த ...ர் இது ...வந்துள் ... பனிப் ...என்பது (ம)

# மரண அறிவித்தல்

## இராமலிங்கம் பாலசுப்பிரமணியம்

### (சிறாப்பர் - அளவெட்டி)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் பாலசுப்பிரமணியம் கடந்த (18.04.2017) செவ்வாய்க்கிழமை கனடா மொன்றியலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசலட்சுமியின் (சீமாப்பிள்ளை) அன்புக் கணவரும், பாலச்சந்திரன் (கனடா), பாலறாயினி (கனடா), பாலரஞ்சினி (கனடா), பாஸ்கரன் (கனடா), பாலகௌரி (அளவெட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், லைலா, ஸ்ரீரஞ்சன், சுரேஸ்குமார் (தெல்லிப்பளை.ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், குலசிங்கம், நித்தியானந்தன், மகாலிங்கம், சறோயினிதேவி, சாந்தாதேவி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், குலசிங்கத்தின் மைத்துனரும், விதுர், சகிர், அபிராமி, துவி, பிரதீப், றதீஸ், றஜித், றதீப், ஆகாஷ், வசுதா, விஜிதா, சோபிதா, சுகப்பிரதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2017) ஞாயிற்றுக்கிழமை கனடாமொன்றியலில் நடைபெறும். அன்றையதினம் எமது இல்லத்திலும் அஞ்சலி நிகழ்வு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கும்பழாவளை வீதி,**
**அளவெட்டி மத்தி.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**0777040767**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21.08.1934 | 18.04.2017 |




"கொழும்பு புளூமெண்டலில் அமையப் பெற்றுள்ளதான ஜய கண்டேனர் டெர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பிரதான வியாபார நடவடிக்கையாக அமைவது கப்பல்களுக்கு வழங்குகின்ற எண்ணெயை களஞ்சியப்படுத்தல் மற்றும் கடலில் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்குகின்ற நிறுவனங்களுக்கு எண்ணெய் வழங்குதலாகும். இதன் மொத்த கொள்ளளவு என்பது 35 ஆயிரம் மெட்ரிக் தொன்களாக அமைந்துள்ளது."

# கொழும்பு எண்ணெய் களஞ்சியத்தின் இலாப ஈட்டம் 13 சதவீதத்தால் அதிகரிப்பு

## ஆண்டு ரீதியான ஒப்பீட்டில் கடந்த ஆண்டில் இந்த அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக தகவல்

இலங்கை துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான கொழும்பு எண்ணெய் களஞ்சிய நிறுவனத்தின் (ஜய கண்டேனர் டெர்மினல்ஸ் லிமிடெட் - JCT Oil Bank) இலாப ஈட்டமானது ஆண்டு ரீதியான ஒப்பீட்டின் அடிப்படையிலே கடந்த 2016 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 13 சதவீதத்தினால் வளர்ச்சிக் கண்டுள்ளதான தகவல் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு எண்ணெய் களஞ்சிய நிறுவனத்தில் அண்மையில் இடம்பெற்றிருந்ததான கணக்கு அறிக்கைகளை வெளிப்படுத்தும் நிகழ்வில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கும் போதே அவரால் இந்தவிடயங்கள்தெரியப்படுத்தப்பட்டுள்ளது.



இதன்படிநிறுவமானது 2015 ஆம் ஆண்டில் ஈட்டிக்கொண்டதான இலாபம் என்பது 36 மில்லியன்களாகவும் 2016 ஆம் ஆண்டில் ஈட்டிக்கொண்டதான இலாபம் 77 மில்லியன்களாகவும்பதிவாகியுள்ளது. தவிர 2015 ஆம் ஆண்டுடன்ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் விற்பனைச் செலவுகளின் மதிப்பீடுகள் 96 மில்லியன்ரூபாவில்இருந்து 92 மில்லியன் ரூபா வரையிலும், நிர்வாகச் செலவுகள் 64 மில்லியன்களிலிருந்து 55 மில்லியன் ரூபா வரையிலும் குறைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இது குறித்துக் கருத்துரைத்துள்ள அமைச்சர் அர்ஜுனரணதுங்க,

'ஒருநிறுவனத்தைதனியார்மயப்படுத்துவது ஊழியர்களே. நிறுவனத்தை பாதுகாத்து அரசுஎன்றவகையில்இலாபமீட்டும்நிறுவனமாக முன்னோக்கி கொண்டுச் செல்வதும் ஊழியர்களே. இங்கே நிறுவன ஊழியர்கள் என்ற வகையில் நீங்கள் பெற்றுக்கொடுத்த வெற்றி குறித்து மகிழ்வடைகிறேன். நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஏனெனில் இவ்வாறானதோர் இலாபத்தை ஈட்டிக்கொள்கையில்எந்தவொருநபருக்கும்இந்த நிறுவனத்தை விற்க வேண்டிய தேவை யேற்படாது. நாம் இந்நாட்டிலுள்ள பிரதான நிறுவனங்களைபாதுகாக்கவில்லையாயின் எம்முடைய எதிர்கால சந்ததியினரிடம் வெறுமைத்தன்மையுடையதான நாடொன்றினையே கையளிக்க முடியும். நாம் இலாபத்தை ஈட்டிக்கொள்ளும் பொழுது பணம் அரசிடம் செல்கின்றது. இவ்வாறான நிறுவனங்கள் மூலமாகவே அரசு பாதுகாக்கப்படுகின்றது. அதேப்போலவேநீங்களும்என்னிடம் கடினமானவை எவற்றையும் கேட்கவில்லை. மிகவும் சாதாரண கோரிக்கைகளையே முன்வைத்தீர்கள். அந்தக் கோரிக்கைகளை நாம் நிறைவேற்றியுள்ளோம்." - என்றார்.

# 'தவளைகளின் பிசுபிசுப்பான திரவம்'

## வைரஸ்களுக்கு எதிரான மருந்து தயாரிப்பில் பயனுறுதியாகிறது

தென்னிந்தியாவில் உள்ள தவளைகளிடமிருந்துஎடுக்கப்படுவதான பிசுபிசுப்பான திரவம் பல்வேறுவைரஸ்களுக்குஎதிரான மருந்து தயாரிப்பில் பயனுறுதியாவதான தகவல் ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக சளிப்படலம் போன்ற ஒரு வண்ணமயமான திரவத்தினை சுரக்கும் இந்தத்தவளையானதுகேளராவில்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கேரளாவை பூர்வீகமாகக் கொண்டுள்ள மேற்படிதவளை இனங்களை (ஹைட்ரோபிளாஸ் பேஹீவிஸ்தாரா) கொண்டு மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கும் வைரஸ்களை அழிக்கவும், வைரஸ் பாதிப்பில்இருந்துமனிதர்களை காப்பாற்றவும் முடிவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் புதிய நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துக்கு சாத்தியமான ஆதாரங்கள் தொடர்பாக ஆய்வாளர்கள் தங்களுடைய பரிசோதனைகளை தொடர்ந்தும் முன்னிலைப்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

தவிர அமெரிக்காவின் அட்லாண்டாவில் உள்ள எமோரி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள்இந்தத்தவளையின் தோலிலிருந்து வெளிப்படும் பிசுப்பிசுப்பான திரவத்தினை கொண்டு ஆய்வு நடத்தி மனிதர்களுக்கு ஏற்படும் எச்1 வைரஸ் காய்ச்சல் உட்பட பல்வேறு வைரஸ் பாதிப்புகளுக்கு எதிராக செயலாற்றக் கூடியதான உருமின் என்றழைக்கப்படும் கூட்டுப்பொருளை கண்டறிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதன் செயலுறுதி குறித்து தீர்மானிக்க மேலும்பலஆராய்ச்சிகள்நடத்தப்பட வேண்டும் என்பதான கருத்தும் கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஆய்வு செய்துவரும் சர்வதேச ஆராய்ச்சிக் குழுவில் கேரளா ராஜீவ் காந்தி பயோடெக்னாலஜிமையத்தைசேர்ந்த ஆராய்ச்சியாளர்களும் இடம்பெற்றுள்ளனர்.






# மீனவர் சமூகத்தின் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை

## மீன் வளங்களை கண்டறியும் செயற்றிட்டம் நடைமுறைக்கு

மீனவர் சமூகத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் நாட்டின் கடல் எல்லைக்குள் மீன் வளம்அதிகமாகக்காணப்படும்இடங்களைஅடையாளம் கண்டுகொள்வதற்கான புதிய வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதான தகவல் நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் தம்மிக இத்தமல்கொடவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாகஇலங்கைகடல்எல்லைக்குள்காணப்படும் மீன் வளங்களை அடையாளங்கண்டு அதுதொடர்பிலான தகவல்களை மீனவர்களுக்கு அறியத்தருவ



தான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கைகள் குறித்து கருத்துரைத்துள்ள நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம்,

"கடலில்மீன்வளம்உள்ளஇடங்களைமுன்கூட்டியே அறிந்துகொள்வதன் ஊடாக அதிகளவு மீன்களைப் பிடிப்பதற்கும், அதன் மூலம் அதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்குமான சந்தர்ப்பங்கள் அதிகப்படுத்தப்படும். கரைப் பகுதியிலிருந்து அகலாங்கு மற்றும் நெட்டாங்கு ரீதியாக கடலில் மீன்கள் இருக்கும் இடம்தொடர்பில்துல்லியமானதகவல்களைமீனவர்களுக்குவழங்கும்நடவடிக்கையைநாராநிறுவனம் ஆரம்பித்துள்ளது.

எதிர்வரும்மேமாதம்முதலாம்திகதிதொடக்கம்இந்த செயற்பாடுகளைநான்குவீதமானஇலங்கைமீனவர்களுக்காகவினைத்தறனாகமுழுஅளவில்முன்னெடுக்கவுள்ளோம்" - என்றார்.

# சமூகப்பொறுப்புணர்வு செயற்பாடுகளின் அர்ப்பணிப்புக்கான வெள்ளி விருது

## பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி பெற்றுக்கொண்டது

இலங்கையின் வங்கி சாராத நிதித்துறையின் முன்னோடியாக திகழும் பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி தனது சமூகப்பொறுப்புணர்வு செயற்பாடுகளின் அர்ப்பணிப்புக்காக 2016 ஆம் ஆண்டுக்கான இயன் டயஸ் அபேசிங்க ஞாபகார்த்த பேண்தகு நிலைக்கான வெள்ளி விருதைப் பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு, கலதாரி ஹோட்டலில் இடம்பெற்றிருந்த 21ஆவது வருடாந்த யஸ்ரிக்கா விருதுகள் வழங்கும் நிகழ்வின் போது பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் நிறுவனத்தின் மூன்று பிரதான கொள்கைகளான மக்கள், புவி மற்றும் இலாபம் ஆகியவற்றுக்கு நிறுவனம் காண்பித்ததான அர்ப்பணிப்பை கௌரவித்தே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக 21 வருட காலமாக நிலைபேணியலுமை மற்றும்வினைத்திறனான செயற்பாடுகளைப்பேணி வரும்நிறுவனங்களை இனங்கண்டுகௌரவிக்கும் நடவடிக்கைகளையஸ்ரிக்கா(JASTECA)முன்னெடுத்து வருகிறது. அத்துடன் விருதுகளுக்கான 2016 இன் மூலமாக மூன்று பிரதான பிரிவுகள் இலக்கு வைக்கப்பட்டிருந்தமை நோக்கத்தக்கது.





# பூமியைப் பாதுகாப்போம்

## நீண்ட நாள் நீடூழி வாழ்வோம்

அ.ரோஸலின்

பூமியானது இயற்கை வளங்களின் பசுமைக் களமாக எமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அன்னையின் பரிசுத்தமான அன்புக்கு ஈடானது நாம் வாழும் பூமி. நிலமென்னும் நல்லாளை அதன் முக்கியத்துவத்தை, பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணரவேண்டியது அதில் வசிக்கும் மக்களாகிய நமது கடமை.

சூரியனிலிருந்து மூன்றாவதாக உள்ள கோள் பூமி. அண்டத்தில் உயிர்கள் இருப்பதாக அறியப்படும் ஒரே நிலப்பரப்பு. உயிரினங்களும், உயிரற்ற காரணிகளும் வளர்ந்து பெருக இடமளித்த இப்பூமி ஒரே உயிர்க்கோளமாக எமக்கு அளிக்கப்பட்ட கொடையாகும். புவியின் தன்மையும், அதன் இயல்பும் கெடாமல் எமக்கு வழங்கப்பட்ட புவியின் தற்போதைய நிலை, எமது நிலையினையே பிரதிபலிக்கிறது. புவியை அழிப்பதன் வாயிலாக எம்மை இழந்து கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை.

### பூமியைப் பாதுகாப்போம்

பூமியைப் பாதுகாக்க வேண்டிய தன் அவசியத்தை அதற்கான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தவும் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 22 ஆம் திகதியை உலக பூமி தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பற்றிய முக்கியத்துவத்தை மக்களிடம் கொண்டு செல்வதும், அது தொடர்பான செயல்பாடுகளை ஏற்படுத்துவதும் இந்நாளின் முக்கிய நோக்கமாகும். 1970 ஆம் ஆண்டிலிருந்து 192 நாடுகளில் உலகபூமிதினம்கடைபிடிக்கப்படுகிறது.

### முன்னோர்களின் பரிவு

புவி தோன்றியது முதல், உயிரினங்கள் அனைத்தையும் அரவணைத்து வாழ்விக்கும் பண்பை ஏற்று இயங்குகிறது. இயற்கையின் அரவணைப்பில் உண்டு களித்து, உறங்கிக் கிடந்த மனிதன், பிற்காலங்களில் மேற்கொண்ட அறிவியல் கண்டுபிடிப்பின் விளைவும், அறிவுப்பெருக்கமும் இயற்கையைச் சிறிது சிறிதாகச் சிதைக்கத் துவங்கியது. இதன் அடிப்படையில் பொதிந்திருக்கும் உண்மை, சுயநலமின்றி வேறில்லை என்பது மனதைப் பத பதைக்க வைக்கிறது.

நிலத்தை ஐந்திணைகளாகத் தொல்காப்பியர் பிரித்துக் கூறியிருக்கிறார். நிலத்தின் அடிப்படையில் நான்காக, முதற் பொருளின் சிறப்பையும் கூறியிருக்கிறார்.

உயிரின வாழ்க்கைச் சூழலுக்கு அடிப்படையான மூன்று பொருள்களில் முதற்பொருள் பற்றி தொல்காப்பியர், "முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின் இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே" என்று தொல்காப்பியத்தின் அகத்திணையியலின் நான்காம் நூற்பாவில் கூறியுள்ளார்.

உயிரினங்கள் வாழ்வதற்கு அடிப்படையானது நிலமே ஆகும். நிலமானது புவியே. ஒரு நாட்டின் வளத்தைத் தீர்மானிப்பது நிலம். எனவே தான் தொல்காப்பியர் நிலத்தை முதற்பொருளாக்கியிருக்கின்றார், என்பதும் நம் முன்னோரின் பாங்கும் வியக்கத்தக்கது.

## உலக புவி தினம் இன்று

நம் முன்னோர் ஐவகை நிலப்பாகுபாட்டில் அமைதியான வாழ்க்கை முறையை இயற்கையோடு இயைந்து மேற்கொண்டனர் என்பதும் அவர்களின் நிலத்தின் மேல் கொண்ட பற்றும், பரிவும் இன்றும் போற்றத்தக்கது.

சங்க கால மக்கள் தங்கள் வாழ்க்கையோடு நிலத்தை இணைத்துக் கொண்டிருந்தனர், அவர்களின் வீரமும், காதலும் அவர்கள் மிக விரும்பும் நிலத்திலேயே நிகழ்த்த இன்புற்றிருக்க விரும்பினர் என்பது எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் வழி அறிய முடிகின்றது.

### பூமிக்கு மரியாதை

இன்று புவியானது நமது அக்கறையின்மையாலும், சுயநலத்தாலும் எண்ணவியலாத விதத்தில் சீர்கேடு அடைந்துள்ளது. காடுகள் அழிப்பு, தொழிற்சாலைப்பெருக்கம், வாகனங்கள் அதிகரிப்பு போன்றவையும், பூச்சி கொல்லி பயன்பாடும் நாம் வாழும் புவியை நஞ்சாக்கிக் கொண்டிருக்கின்றன. அதிகப்படியான அறிவியல் முன்னேற்றம், விரைவான வாழ்வு வசதிகளைப் பெற வேண்டும் என்பதற்காக நம் கண்களை அடகுவைத்து சித்திரம் வாங்குவது போன்றதுதான், இத்தகைய செயல்பாடும்.

பெருகும் கார்பன் மோனாக்சைடு புவியின் கழுத்தை சுருக்கிவிடுகிறது என்பதும், வேதியியல் கழிவும், பூச்சி கொல்லிகளும் நிலத்தின் ரத்த ஓட்டத்தில் விஷத்தைக் கலக்கிற தென்பதும், நம்மை வாழவைக்கும் புவிக்கு எவ்வித மரியாதையை நாம் தந்திருக்கிறோம் எனும் வலி மிகுந்த கேள்வியை நம் முன் வைக்கிறது.

### நிலம் மீட்கும் முயற்சி

குளம் தொட்டு வளம் பெருக்கிய அறவோரான நம் முன்னோரின் இயற்கைப்பாதுகாப்பும், தாவர இனங்களைக் காத்து வளர்த்ததும் நாலடியாரில் குறிப்பிடப்பட்டிருப்பது இயற்கையுடன் அவர்கள் கொண்டிருந்த மனித நேயத்தை வெளிப்படுத்துகிறது. "துறைஇருந்து ஆடை கழுவுதல் இன்னா" என்று நீர் அருந்தும் துறையில் ஆடை துவைத்தல் கூடாது என்னும் ஒழுகலாறினைக் கூறிய, பின்பற்றிய நம் சமூகம் புவியைக் காக்க வேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்து செயல்பட வேண்டிய தருணமாக இன்றைய பூமி தினம் அமைய வேண்டும். நிலத்தினுள் விஷம் பாய்ச்சும் சீமைக் கருவேலங் காடுகளை அகற்றி, நாட்டு மரங்கள் கொண்ட காடுகள் உருவாக்குதல், மழை நீர் பெருக்கத்திற்கு ஏற்ற மரங்கள் நடுதல் அவசியம். மழைநீர் சேமிப்புத் திட்டங்களும் அவற்றைச் செயல் படுத்தும் மக்கள் கரங்களிலேயே புவியின் தலைவிதியோடு மனிதனின் நிலையும் தீர்மா னிக்கப் படு கிறது.

ஆற்றினை, அதன் நீரினை, மணலினைச் சுரண்டும் சுயநலப்பதர்களிடம் இருந்து, புவியை விடுவிப்பது தற்போதைய வறட்சியினின்று வளத்தை மீட்டெடுப்பது, பூமிக்கு நாம் செய்யும் ஆக்கம் மட்டும் அல்ல; நஞ்சாகிப்போன நீர், நிலம், காற்றிடம் இருந்தும் நம்மைப்பாதுகாக்கும் முயற்சியாகும்.

> “ உயிரினங்களும், உயிரற்ற காரணிகளும் வளர்ந்து பெருக இடமளித்த இப்பூமி ஒரே உயிர்க்கோளமாக எமக்கு அளிக்கப்பட்ட கொடையாகும். புவியின் தன்மையும், அதன் இயல்பும் கெடாமல் எமக்கு வழங்கப்பட்ட புவியின் தற்போதைய நிலை, நமது நிலையினையே பிரதிபலிக்கிறது.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## பிளாஸ்ரிக் ஒழிப்புக்கு ஒத்துழைக்கவேண்டும்

இன்று உலகப் புவித் தினம். இன்றைய தினத்தில் பூமித் தாய்க்கு மகிழ்வூட்டக்கூடிய வகையில் யாழ்ப்பாணம் மாநகரசபை ஓர் அறிவிப்பை விடுத்திருக்கிறது. இன்று முதல் அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும் என்று அறிவித்துள்ளது. வடக்கு மாகாணத்தில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பயன்பாட்டை ஒழிக்கும் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக மாநகர சபை இந்த நடவடிக்கையை அறிவித்துள்ளது.

உலக புவித் தினம் 1970ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்காவின் விஸ்கான்ஸின் மாகாணத்தைச் சேர்ந்த மேல்சபை உறுப்பினரான கேலோட் நெல்சன் ஏப்ரல் 22ஆம் திகதியை சுற்றுச்சூழல் தொடர்பான கல்விக்கான நாளாக அறிவித்தார். அன்றைய தினத்தில் அமெரிக்காவில் 2 கோடி மக்கள், குறிப்பாக மாணவர்கள், சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வலியுறுத்தி வீதிகளில் திரண்டனர்.

கட்டுப்பாடற்ற வகையில் பெருகி, நாசம் விளைவித்து வந்த தொழில்மயமாதலின் பக்கவிளைவுகளைக் கண்டித்துத்தான் இந்த இயக்கம் எழுந்தது. ஆரோக்கியமான, நிலையான சுற்றுச் சூழலின் தேவை அங்கு வலியுறுத்தப்பட்டது. இந்த மக்கள் இயக்க நடவடிக்கைதான் உலகின் முதல் புவித் தினம் எனக் குறிக்கப்படுகிறது.

1990இல் மீண்டும் உலகளவில் இந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அந்த முயற்சி பெரு வெற்றியளித்தது. 141 நாடுகளைச் சேர்ந்த 20 கோடி மக்கள் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்த அந்த நடவடிக்கையில் இணைந்து கொண்டனர். இந்த நடவடிக்கை பொருள்களின் மீள்சுழற்சி குறித்த விழிப்புணர்வை உலகெங்கும் பெருமளவில் ஏற்படுத்தியது.

இது ஐக்கிய நாடுகள் சபை றியோ டி ஜெனிரோ நகரில் புவி மாநாடு ஒன்றை 1992 நடத்துவதற்கு முதற் படியானது. அதன் பின்னர் படிப்படியாக வளர்ந்து வந்த புவித் தினம் சுற்றுச்சூழல் விடயத்தில் குறிப்பாக சூழல் வெப்பமாதல் குறித்து அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது.

எமக்குப் பின்னரான அடுத்தடுத்த சந்ததிகளும் இந்தப் புவியில் வாழ வேண்டும் எனில், நாம் பூமியை அந்தச் சந்ததிகளுக்காகப் பாதுகாப்பது அவசியம்.

இலங்கை, தொழிற் புரட்சியின் விளைவாக ஏற்பட்ட சூழல் தன் விளைவுகளை அனுபவிக்கவே செய்கிறது. ஆனால் தொழில்மயமாக்கலின் விளைவாக ஏனைய நாடுகள் உற்பத்தி செய்து பிதுக்குபவற்றை வாங்கி வாரி இறைத்துக் கொள்வதன் மூலம் மிகப் பெரும் விளைவுகளை அனுபவிக்கிறது. பெருகியிருக்கும் உலகமயமாக்கலின் விளைவான நுகர்வுக் கலாசாரத்துக்குள் நாமும் சிக்கிக் கொண்டதால் பூமியை நாசம் செய்வதில் நாமும் குறைந்தவர்கள் அல்லர் என்று ஆகியிருக்கிறோம்.

இந்த ஆரம்ப நிலையிலேயே அதனைச் சீர்ப்படுத்தி கட்டுக்குள் கொண்டுவரத் தவறிவிட்டோமானால் பின்னர் அதனைச் சீர்ப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுவிடும். நகரக் கழிவகற்றலில் மிகப் பெரும் சவாலாக உருவெடுத்திருக்கும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக்கின் பாவனையைத் தடுத்து நிறுத்துவது உடனடித் தேவையாகும்.

இதனை அரச நிறுவனங்களில் மட்டுமல்லாது அனைத்து இடங்களிலுமே செயற்படுத்த வேண்டும். இந்த விடயத்தில் முழுமையான வெற்றியை அடைவதற்கு மாநகரசபையால் மட்டும் முடியாது. அதற்கு நாம், மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். பொலித்தீன், பிளாஸ்ரிக் பயன்பாட்டை மெல்ல மெல்லக் குறைத்து அதனை அடியோடு நிறுத்த அனைவருமே திடசங்கற்பம் பூணவேண்டும்.

மக்களின் ஆதரவின்றி இந்த விடயத்தில் காத்திரமான வெற்றி கிடைக்காது. அதற்கு முதலில் மக்கள் அது பற்றிய விழிப்புணர்வை அடைய வேண்டும். அவர்களை விழிப்புணர்வடைய வைப்பதற்கான நடவடிக்கைகளை மாகாண அரசும், அரசு சார் நிறுவனங்களும் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். இந்த ஆண்டு புவித் தினத்துக்கான மகுட வாக்கியம் கூட, "சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை குறித்த அறிவு" என்பதே!

# சினிமாப்படம் போன்று ஆகிவிட்ட ஈழத்தமிழர்களது உரிமைப் பிரச்சினை

க. கிருஸ்ணர்


இலங்கை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தென்னிலங்கை மக்களுக்கும் நான் சுட்டிக்காட்ட விரும்புவது, தமிழ் மக்களுடைய உரிமைப் பிரச்சினை இந்த நல்லாட்சி அரசாலேயே தீர்க்கப்பட வேண்டும். இந்த நல்லாட்சி அரசில் தமிழர்களுக்கு உரிமைகள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் தமிழர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க ஒத்துழைக்க வேண்டும் என்பதுதான். தமிழர்களுடைய உரிமைப் பிரச்சினை ஒரு சினிமாப் படம்போல் ஆகிவிட்டது. எங்களுடைய தமிழ்த் தலைவர்கள் அரசை நம்பினாலும் அந்த நம்பிக்கைக்கு ஏற்ற மாதிரி ஆரம்பகால சிங்கள அரசுகளோ இன்றைய அரசோ நடந்து கொள்ளவில்லை.



### சிங்கள அரசுகளால் தொடர்ந்து ஏமாற்றப்பட்ட தமிழர்கள்

தமிழர்கள் தொடர்ச்சியாக சிங்கள அரசுகளால் ஏமாற்றப்பட்டனர். இந்த ஏமாற்றங்கள் எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளக் கூடிய தைரியம் தமிழ் மக்களிடம் தற்போது இல்லை. அரசிடம் எங்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி உரிமையைக் கோர முடியாத நிலை. ஒவ்வொரு அரசும் மாறும்போது எங்களுடைய பிரச்சினைகள் அனைத்தும் நாங்கள் அவற்றிடம் கூறிவிட்டோம். தமிழர்களுடைய பிரச்சினைகள் குறித்துத் தெரியாதவர்கள் இந்த நாட்டில் ஒருவர் கூட இருக்க வாய்ப்பே இல்லை. அத்தகைய நிலையில் எங்களுடைய உரிமைகளை வழங்குமாறு மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்க தமிழர்கள் அந்த அளவுக்கு ஏமாளிகள் அல்ல. இனியாவது தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை அரசு தீர்த்துவைக்க வேண்டும். நல்லாட்சி அரசு தமிழ் மக்களுடைய மனதில் இடம் பிடிக்க வேண்டும். நல்லாட்சி அரசும் தமிழ் மக்களை ஏமாற்றுமாக இருந்தால் தமிழர்களால் எதுவும் செய்ய இயலாத நிலை ஏற்படும். இந்த நாட்டில் இருக்கும் ஒவ் வொருவரும் இலங்கையர்களே. தமிழர்கள் தங்களுடைய உரிமை இலக்கை அடைய வேண்டும். இந்த நல்லாட்சி அரசும் தென்னிலங்கை பெரும்பான்மை சிங்கள மக்களும் தமிழர்களுடைய பிரச்சினைகள் குறித்துத் தெரிந்து கொள்ளாதவர்களல்ல. இனி மீண்டும் மீண்டும் சொல்வதற்கு எதுவும் இல்லை.

> அரசு நாளுக்கு நாளுக்கு நாள் வெவ்வேறு கருத்துக்களைக் கூறுவதனால் அரசு மீதான தமிழ் மக்களுடைய நம்பிக்கை தளர்ந்து போகும் அபாயம் உள்ளது.



### தமிழ் மக்களது காணிகள் அவர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்

தமிழனுடைய கண்களில் இருந்து கொட்டிய கண்ணீரின் ஈரம் இன்னமும் காயவில்லை. தமது பாரம்பரிய வாழ்விடங்களை விட்டு வெளி யேறிய மக்களுக்கு அவர்களது பழைய வாழ்விடங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய சொந்த இடங்களில் வீடு அமைத்து சந்தோசமாக வாழ வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்து கொடுக்க வேண்டும். நல்லாட்சி அரசில் கொண்ட நம்பிக்கை வீண் போகாமல் தமிழ் மக்களுடைய சின்னச் சின்னப் பிரச்சினைகளை அரசு துரிதமாகத் தீர்த்து வைத்தல் வேண்டும்.

நல்லாட்சி அரசில் உள்ள அமைச்சர்கள் ஆளுக்கொரு கருத்துக்களைச் சொல்வதனால், தமிழ் மக்கள் நல்லாட்சி அரசு மீது கொண்டுள்ள நம்பிக்கையை அரசு காப்பாற்ற வேண்டும். இலங்கையில் வாழும் சகல மக்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்குத்தான் இருக்க வேண்டும். அரசு நாளுக்கு நாள் வெவ்வேறு கருத்துக்களைக் கூறுவதனால் அரசு மீதான தமிழ் மக்களுடைய நம்பிக்கை தளர்ந்து போகும் அபாயம் உள்ளது.

தமிழ் மக்களுடைய நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டுமாயின், தமிழ் மக்களை அவரவர்களது காணிகளில் குடியமர்த்தி அவர்களுடைய நம்பிக்கையைக் கட்டிக் காக்க வேண்டும். தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை ஜனநாயக வழியில் அரசுடன் பேசி உரிய தீர்வுகளை, உரிமைகளை, பெற்றுத் தருவதற்காகவே எமது பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்து அனுப்பியுள்ளோம். இதை எமது தமிழ்த் தலைமைகள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

எமது பிரதிநிதிகளாகவே இவர்களை நாடாளுமன்றம் அனுப்பியுள்ளோம். இதைக் கருத்தில் கொண்டு நாம், செயற்பட வேண்டும். இந்த விடயத்தில் தமிழ் மக்களும் பொறுமையாகவும் நிதானமாகவும் இருக்க வேண்டும்.

நல்லாட்சி அரசோடு சுமுகமாக நடந்து கொண்டுதான் நாங்கள் எங்களுடைய உரிமைகளைப் பெற்றிட இயலும். தமிழ்த் தலைமைகள் எமது உரிமைகளைப் பெற்றுத் தருவீர்கள் என்று தமிழ் மக்கள் பெரும் எதிர்பார்ப்போடு உள்ளார்கள். இந்த எதிர்பார்ப்புகள் வீண் போகாமல் காக்கப் பட வேண்டும். சாதகமான முடிவை அரசிடமிருந்து கூட்டமைப்பினர் பெற்றுக்கொள்ளும் வரை தமிழ் மக்கள் பொறுமை காத்திருக்க வேண்டும்.

# அ.தி.மு.கவின் வரலாற்றில் சசிகலா என்ற கறைபடிந்த அத்தியாயம்

சேரலாதன்



தமிழ்நாட்டு மக்களின் அமோக ஆதரவைப் பெற்ற மறைந்தஎம்.ஜி.இராமச்சந்திரனால் உருவாக்கப்பட்ட அ.தி.மு.க என்ற அரசியல் கட்சி, அவரது காலத்திலும், அதற்குப்பின்னரும் தமிழ் நாட்டில் ஆழமாகவே வேரூன்றி நிலைத்து நின்றது. அந்தக் கட்சி பல தடவைகள்தமிழகத்தின்ஆட்சிப்பொறுப்பிலும் அமர்ந்து கொண்டது. அத்தகைய சிறப்புக்களைக் கொண்டதொரு கட்சி, இன்று தனது சின்னத்தை மட்டுமல்லாது பெருமைகளையும் இழந்து நிற்கின்றது.

எம்.ஜி.ஆர் என்ற அந்த மகத்தான மனிதரால் 1972ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அ.தி.மு.க, 1977ஆம் ஆண்டிலிருந்து 1987ஆம் ஆண்டு வரை 10 ஆண்டுகள் தொடர்ந்து தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து சாதனை



படைத்தது. எம்.ஜி.ஆரின்மறைவுக்குப் பின்னர் ஜெயலலிதா கட்சியை நன்கு வழிநடத்திச்சென்றார். ஆனால்அவரது மறைவுக்குப் பின்னர்தான் பிரச்சினையே ஆரம்பித்தது. கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் ஐந்தாம் திகதி ஜெயலலிதா காலமானார்.

**ஜெயலலிதாவின் சாவு அ.தி.மு.கவை ஆட்டிப் படைத்தது**

அவரது சாவில் மர்மம் இருப்பதாகப் பலரும் பேசிக் கொண்டனர். ஜெயலலிதா வசித்து வந்த போயஸ் கார்டன், சசிகலா குடும்பத்தின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்ததால் ஜெயலலிதா தொடர்பானஉண்மையான விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. எல்லாமேமூடு மந்திரமாகவே இருந்தது.

ஜெயலலிதாவின் மறைவைத் தொடர்ந்துஅதுவரைபதில்முதலமைச்சராக இருந்த ஓ.பன்னீர் செல்வம் தலைமையில் அமைச்சரவை பதவியேற்றுக்கொண்டது.அதற்குப்பின்னர் கட்சியின் பொதுச் செயலாளராகத் திருமதி சசிகலா நடராஜன் அதிரடியாகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவரது தெரிவு முறையற்றதென முணுமுணுத்தவர்களும்இல்லாமலில்லை. ஆனால் சசிகலாவைச் 'சின்னம்மா' என அழைத்தவாறுஒருகூட்டம்அவருக்குத் துதிபாடிக் கொண்டிருந்தது. எந்தவித அரசியல் முன்னனுபவமும் இல்லாது ஜெயலலிதாவின் உதவியாளராக அவருக்குப்பின்னால்சுற்றித்திரிந்தசசிகலா, தமிழ் நாட்டின் முதலமைச்சராவதற்கு ஆசைப்பட்டதுதான்அ.தி.மு.கவின்பிளவுக்கு வழி கோலியது. முதலமைச்சர் பதவியிலிருந்தபன்னீர்ச்செல்வத்தைப் பதவிவிலகுமாறுநிர்ப்பந்தித்ததும், சட்டமன்ற உறுப்பினர்களை வலுக்கட்டாயமாகமறைவானதொருஇடத்தில்தடுத்து வைத்திருந்து ஆதரவுக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டதும் சசிகலாவின் இரண்டாம்தர அரசியல்செயற்பாட்டை வெளிச்சம்போட்டுக்காட்டின.சட்டமன்ற ஆளும் கட்சி உறுப்பினர்களின் தலைவராகத் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதால்தம்மை ஆட்சியமைப்பதற்குஅனுமதிக்குமாறு சசிகலா ஆளுநரைக் கேட்டுக் கொண்ட போதிலும், ஆளுநர் அதற்கு இலகுவில் இணங்கவில்லை. சொத்துக் குவிப்பு வழக்கின் இறுதித் தீர்ப்பு அந்த வேளையில் வெளியாகவி



ருந்ததும், இதற்கான பிரதான காரணமாகும். அந்தத் தீர்ப்பின் பிரகாரம் சசிகலா தற்போது பெங்களூர் சிறையில் அடைத்துவைக்கப்பட்டுள்ளார். அவரது தவறான அரசியல் நடவடிக்கைகளால் அ.தி.மு.க இரண்டாகப் பிளவடைந்து காணப்படுகின்றது. அந்தக் கட்சியின் சின்னமும் தேர்தல் ஆணையத்தால் முடக்கிவைக்கப்பட்டுள்ளது.

**சசிகலாவின் தரம் தாழ்ந்த அரசியல் தில்லுமுல்லுகள்**

சசிகலாதான் தற்போதும் அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராக உள்ளார். அந்த வகையில் தமது நெருங்கிய உறவினரான தினகரனைக் கட்சியின் துணைப்பொதுச்செயலாளராகநியமித்தார் சசிகலா. இவர் ஜெயலலிதாவால் முன்னர் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதுடன் போயஸ் கார்டன் வீட்டினுள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்த ஒருவராவார். ஆனால் ஜெயலலிதாவின் மறைவு சகலதையும் தலைகீழாக மாற்றிவிட்டது.ஜெயலலிதாவின்மறைவால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதியில் ஏப்ரல் 12ஆம் திகதி இடைத்தேர்தல் இடம்பெறுவதாக இருந்தது. அ.தி.மு.க சார்பில்வேட்பாளராகதினகரன்நிறுத்தப்பட்டார். அவரை முதலமைச்சராக்குவதற்காகவே சசிகலாவின் திட்டத்தின் பிரகாரம் இவ்வாறு செய்யப்பட்டதாகத்தெரிவிக்கப்பட்டது. தமது குடும்ப ஆட்சியை நிறுவுகின்ற சசிகலாவின் பேராசை இதன் மூலமாக வெளிப்பட்டது. ஆனால் தினகரன் சார்பில் வாக்காளர்களுக்குப் பணம் வழங்கிய விவகாரம் வெளிவந்ததால், தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் பிரகாரம் இடைத்தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் தேர்தல் ஆணையகத்துக்கு லஞ்சம் வழங்குவதற்குத் தினகரன் முயன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்படக்கூடிய சாத்தியங்கள் தற்போது உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் சசிகலா குடும்பத்தை ஒதுக்கி வைத்து விட்டு பிளவுபட்டிருக்கும் அ.தி.மு.கவின் இரண்டு அணிகளும் இணைந்து கொள்வதற்கான சாத்தியமுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன்மூலமாகவே அ.தி.மு.கவை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும். அந்தக் கட்சி தொடர்ந்தும் பலவீனப்படுவதைத் தொண்டர்கள் தொடர்ந்தும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். அ.தி.மு.கவின் வரலாற்றில் சசிகலா என்ற கறைபடிந்த அத்தியாயம் என்றுமேஒரு கரும் புள்ளியாக நிலைத்திருக்கும்.



## வாசகர் திருமுகம்

### நிழலிலிருந்து விலகி அசலுக்கு வாருங்கள்

புரிந்துணர்வும் விட்டுக் கொடுப்பும்
கனவாகிவிட்ட இன்றைய
நிலையில் கூட்டுக் குடும்பமாய்
வாழ்ந்த அன்றைய
வாழ்க்கையின் இனிமையான
நினைவுகள் நெஞ்சை வருடிச்
செல்கின்றன.
குடும்பத்து அத்தனை
உறவுகளாலும் அன்பான
அரவணைப்போடு
வளர்க்கப்பட்டார்கள். மாதா, பிதா,
குரு, தெய்வம் என்று கற்றுக்
கொடுத்த மேன்மையான
படிப்பினை அவர்களை பண்போடு
ஒழுக்கசீலராய் வாழ வகை
செய்தது. பெற்றோர் தங்கள்
குழந்தைகளையும்
மூத்தோரையும் அக்கறையுடன்
பேணிக்காத்ததுடன்,
வருமானத்துக்கு ஏற்ற
செலவுகளுடன் சிக்கனமாய்
மகிழ்ச்சியாய் ஆரோக்கியமாய்
வாழ்ந்த வசந்தகாலம் இன்று
கனவாகிப் போனது.
தற்போது நாகரீக மாற்றத்தால்
உணவு, உடை, சூழல் எல்லாமே
திசை மாறி, கேள்விக் குறியாகி
யுள்ளன.
ஆடம்பரச் செலவுகளை ஈடு செய்ய
முடியாத நிலையில் கணவன்,
மனைவி இருவரும் அலுவலகம்
செல்வதால், குழந்தைகளது
தேவை அறிந்து அன்புடன்
அரவணைத்துப் பழகும்
நெருக்கம், நேரமின்மை
காரணமாய் விலகிச் செல்கிறது.
உறவுகள் நண்பர்கள்
அயலவர்களை நேசிக்க, பழக
தயக்கம் காட்டும் குழந்தை
கையில் சிற்றுண்டி பையுடன்,
கணினி முன் அமர்ந்து அதில்
வரும் பொய்யான காட்சிகளை
மெய்யாய்க் கற்பனை செய்து
மகிழ்கிறது.
கதை சொல்லித் தாலாட்டி
அரவணைத்து தூங்க வைக்கும்
பாட்டியும் அயல் நாட்டு
தொலைக்காட்சித் தொடரின்
லயிப்பில், பாசத்துக்கு ஏங்கும்
குழந்தை, கரடிப் பொம்மையின்
அணைப்புடன் துயிலும் நிலை
இன்றைய கலியுகத்தின் வேதனை
தரும் கோலங்கள், நிழலான
இத்தகு நிலையின் பாதிப்புணர்ந்து
எம்மவர்கள் உண்மையின் மீது
நம்பிக்கை வைத்து
கட்டுக்கோப்பான வாழ்க்கையை
வாழத் தயாராவது எப்போதோ?

*எஸ். சுப்பிரமணியம்*
*கல்வயல்*

# வரலெட்சுமி வெளியே... இனியா உள்ளே...

அப்பா திரைப்படத்தின் மலையாள ரீமோக்கான "ஆகாச மிட்டாய்" திரைப் படத்தில், வரலட்சுமிக்குப் பதிலாக நடிகை இனியா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். சமுத்திர கனி இயக்கத்தில் வெளிவந்த 'அப்பா' திரைப்படம் விமர்சனரீதியாகவும்,வசூல்ரீதியாகவும் நல்ல வரவேற்பைப் பெற்றது. இதனைத் தொடர்ந்து இந்த படத்தின் ரீமோக்கை, மலையாளத்தில் இயக்கும் வாய்ப்பு சமுத்திரகனியைத் தேடி வந்தது. இந்தப் படத்துக்கு 'ஆகாச மிட்டாய்' என பெயரிடப்பட்டது. நடிகர் ஜெயராம் மற்றும் நடிகைவரலட்சுமிசரத்குமார்ஆகியோர்






இந்தப் படத்தில் முக்கியமான கதாபாத்திரங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டனர். இந்நிலையில் ஆகாச மிட்டாய் படத்தின் தயாரிப்பாளர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, அந்தப் படத்திலிருந்து நடிகை வரலெட்சுமி விலகினார். இந்நிலையில் தற்போது வரலெட்சுமி கதாபாத்திரத்தில் நடிப்பதற்கு நடிகை இனியா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். "ஏன் இந்த படத்திலிருந்து வரலெட்சுமி விலகினார் என எனக்குத் தெரியவில்லை. ஆனால் படக்குழுவினர் எனக்கு நல்ல ஒத்துழைப்பு அளிக்கின்றனர். இந்தப்படத்தில் ஒரு குழந்தைக்குத் தாயாக நடிக்கிறேன். என்னுடைய கதாபாத்திரத்துக்கு இந்தப் படத்தில் நல்லபெயர்கிடைக்கும் என்று நடிகை இனியா மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

nazi @nazi0091
ஏமாந்ததை நினைத்து வருந்தாதே,
அதுவே உன்னை எச்சரிக்கையாகவும்,
பிறரைப் பற்றி அறிந்து கொள்ளவும் உதவி செய்கிறது...
15 11

காதலன்: நீ இதுக்கு முன்னாடி யாரையாச்சும் லவ் பண்ணிருக்கியா?
காதலி: (பேச வில்லை)
காதலன் : சொல்லு நான் தப்பா நினைக்க மாட்டேன்.
WhatsApp
காதலி: (பேச வில்லை)
காதலன்: இப்ப நீ சொல்லப் போறியா இல்லையா?
காதலி: பேசாம இரு! எண்ணிக்கொண்டு இருக்கிறன். அப்புறம் மறந்துடப் போறேன்.
காதலன்: ?????



தப்பை மன்னிக்கிறவன் மனுசன்...



செய்யாத தப்புக்கு மன்னிப்பு கேட்குறவன் புருசன்...

## மீன ராசி அன்பர்களே....

குரு 8 இல் சஞ்சரிக்க இருப்பதால் நீங்க எதிர் நீச்சல் போட்டுத் தான் முன்னேற வேண்டி இருக்கும் .




எக்ஸ்க்யூஸ் மீ
எங்க போனாலும் விடமாட்டேங்கிறா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உறவினரின் செயல்களைக் குறை சொல்லவேண்டாம். தொழில்வியாபாரத்தில் மந்த நிலை உருவாகும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம்.

**இடபம்**: சாமர்த்தியமாகச் செயற்பட்டு பிறரின் பாராட்டைப் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மிதுனம்:** மனதில் புத்துணர்ச்சி மேலோங்கும். பலரும் அன்பு பாராட்டும் சூழ்நிலை உருவாகும். தொழில் வியாபார வளர்ச்சியால் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும்.

**கடகம்:** எவரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில் வியாபாரத்தில் பணவரவு சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு நிர்வாகத்தினருடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

**சிங்கம்:** குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் உருவாகும் இடையூறைச் சரி செய்வீர்கள். அளவான பணவரவு கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**கன்னி:** நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். உறவினர், நண்பர்களால் உதவி உண்டு. தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சுதந்திர உணர்வுடன் பணியாற்றுவர்.

**துலாம்:** லட்சிய மனதுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பரின் செயலில் குறை சொல்லவேண்டாம். உடல்நலனில் அக்கறை தேவை. தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சுமாராக இருக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**தனுசு:** எதிர்பார்த்த செயல் எளிதாக நிறைவேறும். எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். தாயின் அன்பும் ஆசியும் கிடைக்கும்.

**மகரம்:** எதிர்பார்த்த செயல் எளிதாக நிறைவேறும். எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கும்பம்:** திட்டமிட்டுச் செயற்பட்டு வருவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் லாபம் உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பிள்ளைகளின் வழியில் திடீர் செலவு ஏற்படலாம்.

**மீனம்:** செயல்களில் நிதானம் நிறைந்திருக்கும். தொழில் வியாபார நடைமுறையில் இருந்த குறுக்கீடு விலகும். லாபம் மிதமாக இருக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 3 | | 7 | | | 8 | |
| 7 | 9 | 4 | | | | | | |
| 5 | 8 | 6 | | | 4 | 1 | | 7 |
| 1 | | 2 | | 6 | | | | |
| | | | | | | | | |
| | | | 2 | | | | 7 | |
| 3 | | | | | 8 | 7 | | |
| | | | 5 | | | 8 | | 3 |
| 9 | | 8 | 4 | | | 2 | | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 4 | 6 | 8 | 7 | 2 | 3 | 1 |
| 1 | 6 | 8 | 3 | 2 | 5 | 9 | 7 | 4 |
| 3 | 2 | 7 | 9 | 4 | 1 | 5 | 6 | 8 |
| 6 | 4 | 3 | 8 | 7 | 9 | 1 | 5 | 2 |
| 7 | 9 | 2 | 1 | 5 | 4 | 3 | 8 | 6 |
| 5 | 8 | 1 | 2 | 6 | 3 | 7 | 4 | 9 |
| 2 | 7 | 9 | 4 | 3 | 8 | 6 | 1 | 5 |
| 4 | 1 | 5 | 7 | 9 | 6 | 8 | 2 | 3 |
| 8 | 3 | 6 | 5 | 1 | 2 | 4 | 9 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# சித்திரை மாத பலன்

## மேடம்

எடுத்த முடிவில் பின்வாங்காத அதே வேளையில் கருத்தும் கண்ணுமாக இருக்கும் மேட ராசி அன்பர்களே, இந்தக் காலகட்டத்தில் மற்றவர்களுடன் பகை ஏற்படலாம். பஞ்சமாதிபதி சூரியன் ராசியில் உச்சமாக இருப்பதால் முடங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்குக் கைகொடுப்பார்கள். மனதில் இருந்துவந்த சஞ்சலநிலை மாறும். தருமசிந்தனை உண்டாகும். பணநெருக்கடி குறையும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில், வியாபாரம் சீராக நடக்கும். பழைய மிகுதிகள் வசூல் செய்வதில் வேகம் இருக்கும். ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கலாம்.

சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகளை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் தீரும். கணவன் மனைவிக்கிடையே இருந்த குழப்பங்கள் நீங்கும். பிள்ளைகள் கல்வியில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்கள் உறவினர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். பெண்களின் பணத்தேவை பூர்த்தியாகும். நெருக்கடியான நேரத்தில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். கலைத்துறையினருக்கு மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

வாகனங்களில் செல்லும்போதும் வெளியூர்களுக்குச் செல்லும் போதும் கூடுதல் கவனம் தேவை. முன்கோபம் ஏற்பட்டு அதனால் வீண்தகராறு ஏற்படலாம். நிதானமாகச் செயற்படுவது நல்லது. அரசியல்துறையினர் வளர்ச்சி பெற மிகவும் கவனமாக இருப்பது நல்லது. செலவைக் குறைப்பதன் மூலம் பணத் தட்டுப்பாடு குறையலாம். பேச்சில் கடுமையைக் காட்டாமல் இருப்பது நன்மை தரும். மேலிடத்தின் மூலம் மனம் மகிழும்படியான சூழ்நிலை உருவாகும். நண்பர்கள் உறவினர்களுடன் கவனமாகப் பேசிப் பழகுவது நல்லது. மாணவர்கள் பாடங்களை படிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். சக மாணவர்களின் ஒத்துழைப்பு மனதிருப்தியை தரும்.

**பரிகாரம்:**

செவ்வாய்க்கிழமைகளில் துர்க்கை அம்மனைத் தரிசனம் செய்து தீபம் ஏற்றிவர, காரியத்தடைகள் நீங்கும். தொழில், வியாபாரம் சிறக்கும்.

## இடபம்

நேரத்தை உயிருக்குச் சமமாக மதிக்கும் இடப ராசி அன்பர்களே, நீங்கள் தனியாக இருக்கவிரும்பாதவர்கள். எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் இருந்தீர்கள், அந்தத் தடுமாற்றம் இந்தக் காலகட்டத்தில் நீங்கும். அதே வேளையில் மற்றவர்களின் கருத்துகளை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை உண்டாகி அவர்களுடன் பகை ஏற்படலாம். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். பணவரத்து திருப்தி தரும். எதிர்ப்புக்கள் குறையும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். எந்த வேலையை முதலில் கவனிப்பது என்று குழப்பம் வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அமைதியின்றிக் காணப்படுவார்கள்.

நீண்ட நாள்களாக இருந்து வந்த மனக்கிலேசங்களில் தெளிவான நிலை ஏற்படும். குடும்பாதிபதி புதன் விரயஸ்தானத்தில் இருக்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களின் செய்கைகள் உங்களது கோபத்தைத் தூண்டுவதாக இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படும். சிற்றின்ப சுகம் குறையும். பிள்ளைகளுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும்போதும் பயணங்களின் போதும் கூடுதல் கவனம் தேவை. நண்பர்கள் உறவினர்களிடம் சிறுமனத்தாங்கல்கள் வரலாம். பெண்கள் இக்கட்டான விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேரிடும். சாதுர்யமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். அரசியல் துறையினரின் வளர்ச்சியில் இருந்த முட்டுக்கட்டைகள் நீங்கும். பயணங்கள் செல்ல நேரலாம். பணவரத்து திருப்தி தரும். கடினமாக உழைக்க வேண்டியிருக்கும்; அதன் மூலம் நல்ல பலன்கள் அடைவீர்கள். மேலிடத்தின் கனிவான பார்வை உங்கள் மீது விழும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை ஏற்படும். பாடங்களில் கவனம் செலுத்தி படிப்பது நல்லது.

**பரிகாரம்:**

ஶ்ரீரங்கநாதரைத் தரிசித்து வர பாவங்கள் நீங்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் காணப்படும்.



## வீட்டுக் குறிப்புகள்

மிக்ஸியில் சம்பல் தூள் போன்ற வற்றை அரைத்து வழித்து எடுத்ததும் மீண்டும் ஜாரில் தண்ணீர் விட்டு மிக்ஸியை ஓட விடவும். அதனுள்ளே கெட்டியாக ஒட்டிக்கொண்டிருக்கும் சட்னி மசாலா போன்றவை தண்ணீரோடு கரைந்து வந்து விடுவதால் ஜாரை சுத்தம் செய்வது மிகவும் சுலபம்.

எலுமிச்சைப்பழ சர்பத் தயாரிக்கும்போது கொஞ்சம் இஞ்சிச்சாறைக் கலந்தால் சுவையாகவும், மணமாகவும் இருக்கும்.

1. ரவை, மா உள்ள பாத்திரத்தில் கொஞ்சம் வசம்பை தட்டிப் போட்டால் பூச்சி, புழுக்கள் வராது.

பெண்களுக்கான மேற்சட்டைகள் நவீன வடிவில் தற்போது சந் தைக்கு வந்துள்ளன. இவை 800ரூபாவில் இருந்து விற் பனை செய்யப்படுகின்றன. இந்த மேற்சட்டைகள் பெரிய அளவிலும் சிறிய அளவிலும் ஒரே மாதிரி வரு கின்றன. குடும்பத்தில் இருவர் ஒரே மாதிரி போட்டுக் கொள்ள விரும்பம் உடையவர்களா யின் அவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.



## வரலாற்றில் இன்றைய தினம்

2004-வடகொரியாவின் றயங்சோனில் இரண்டு எண்ணெய் தாங்கிப் தொடருந்துகள் மோதிக்கொண்டதில் 150 பேர் வரை உயிரிழந்தனர்.

2005 -ஜப்பானிய தலைமை அமைச்சர் யுனிச்சிரோ கொய்சுமி ஜப்பானின் போர்ப் பதிவுகளுக்காக மன்னிப்புக்கோரினார்.

1993- ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிப் பொதுச் செயலர் முன்னாள்-அமைச்சர் ஜி.எம்.பிரேமச்சந்திரா கைதாகி விடுதலை.

1995-கிளாலி நீரேரியில் போக்குவரத்துத் தடை குறித்து அரசு அறிவிப்பு.

1995-காயமடைந்த படையினர் குருதியின்றி அவதியென ரூபவாகினி தெரிவிப்பு.

1997-வாழைச் சேனையில் 2 ஆம் நாளாகவும் படையினர் புலிகள் இடையே மோதல் 23 படையினர் உயிரிழந்ததாக அரசு அறிவிப்பு.

1997-காணாமற்போனோர் பற்றிய விசாரணை ஆரம்பம் எனவும் பலாலியில் பதியுமாறும் கோரிக்கை.

1997 -இனவாதக் கட்சிகளை ஓரங்கட்டவே சந்திரிகா - ரணில் உடன்பாடு என ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாரத்னா தெரிவிப்பு. தொண்டமான், அஷ்ரப் ஆகியோரை ஓரங்கட்டவே எனவும் தெரிவிப்பு.

2002- யாழ்.சிறைச்சாலையில் இராணுவக் கைதிகள் 4பேர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்டனர்.

2016 - வடக்கு அரசின் தீர்வு வரைவுக்கு வடமாகாண சபையால் அங்கீகாரம் அடுத்தவாரம் எதிர்க்கட்சித் தலைவரிடம் கையளிப்பு எனத் தெரிவிப்பு.

### நாளை

**சித்திரை-10**
ஞாயிற்றுக்கிழமை -23.04.2017
திதி: துவாதசி மு.இ.11.34
நட்சத்திரம்: பூரட்டாதி மு.இ.10.54
சுபநேரம்:09.00-10.30 வரை
ராகுகாலம்:04.30-06.00 வரை

## பெயர்மாற்றம்

குமாரசுவாமி வீதி, புத்தூர் கிழக்கைச் சேர்ந்த **மகேஸ்வரன் சசீகலா** ஆகிய நான் (22.04.2017) இன்றிலிருந்து எனது பெயரை **மகேஸ்வரன் சசிகலா** என்று மாற்றம் செய்வதோடு, சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்று அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மகேஸ்வரன் சசிகலா**

## விற்பனைக்கு

மின்பிறப்பாக்கி விற்பனைக்குண்டு.
இங்கிலாந்து லிஸ்ரன் இஞ்சின் 33 H.P
15 KV டையினமோ இங்கிலாந்து
1000 RPM டிரைக் கப்பின் பெட்டியுடன்
விற்பனைக்குண்டு.

**தொடர்பு -**
**077 940 2550, 021 2050 306** (C/29441)

## காணி விற்பனைக்கு

கொடிகாமத்தில் HNB வங்கிக்கு
கிழக்கு பக்கமாக 3 பரப்புக்காணி
விற்பனைக்குண்டு.

தொடர்பு -
077 940 2550, 021 2050 306 (C/29442)

## விற்பனைக்கு

பாவித்த பழைய தளபாடங்களும் ஏனையபொருள்களும்விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு.0771728141 (J 8494)

## பதவி வெற்றிடம்

கிளிநொச்சி நகரில் இயங்கிவரும் மொத்த விற்பனை நிலையத்துக்கு கீழ்காணும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை. விரும்புபவர்கள் எதிர்வரும் 30.04.2017 இற்கு முன்பாக தங்கள் சுயவிவரக்கோவையை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

1. கணினி இயக்குநர் (இருபாலாரும்)
2. எழுதுவினைஞர் (பெண்கள் மட்டும்)
3. விநியோக பையன்கள். (Delivary boys)

**விளம்பரஇல.5532,**
**361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்** (CS 8493)

## வேலையாள்கள் தேவை

கணக்கெழுத தெரிந்தவர்கள் (நிர்வாகம் செய்யக்கூடியவர்கள்), சமையல் உதவியாளர். பார்சல் கட்டுபவர். கொத்துரொட்டி, பிறைட்றைஸ் போட தெரிந்தவர்கள்.

Rolex Hotel, 340, HospitalRoad, Jaffna.077 907 9888 (AJACS 3405)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றிவாரம் | வர்ணம் |
|---|---|---|
| 21.04.2017 | 2122 | சிவப்பு |

இடபம்
03 20 42 49

ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 3, 246, 224/=

2017.04.23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

## வேலைவாய்ப்பு

உணவு, தங்குமிடம் தரப்படும். அத்துடன் நாள் சம்பளம் ரூ.1600 நாள் சம்பளம், கிழமைச் சம்பளம், மாத சம்பளம் பெற்றுக்கொள்ளலாம். ஐஸ்கிறீம், பிஸ்கட், யோகட், சோசேஜஸ், பவர் சப்ளை, வர்ணபூச்சு தயாரிக்கும் நிறுவனங்களுக்கு லேபல் பிரிவுகளுக்கு ஆண், பெண் (18-60) வயது உட்பட்டவர்கள் தொடர்பு கொள்ளலாம். **வன்னி.075 562 9961**

**யாழ் . 076 571 5235, 077 401 7543**

2000 - 3000 ரூபா கொடுத்து Agency ஐ நம்பி ஏமாறாதீர்கள். இதோ எங்களிடம் மட்டும் தான் சரியான நிறுவனம் உண்டு. மாதச் சம்பளம் கிடைக்கும் வரை பார்த்துக் கொண்டு இருக்கத் தேவையில்லை. நாள் சம்பளம் 1600/= ஆண், பெண் வயது (18-60) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். லேபல், பொதியிடல் பிரிவுகளுக்கு.

**வன்னி.077 434 3753**
**யாழ் .077 818 1513 , 071 147 5324**

## வேலைவாய்ப்பு

வைத்திய சேவையுடன் இணைந்த வேலைவாய்ப்பு



- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கமுடியும்.
- வயதெல்லை 20 தொடக்கம் 30 வயதுவரை
- கணினி அறிவு அவசியம்
- ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.
- கல்வித்தகைமைகளிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தங்களது சுயவிவரக்கோவையினை 05.05.2017 இற்கு முன் கீழுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும். தொலைபேசி இலக்கம் அவசியம்.

ESTD 1838 நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலை
"சானியா கேபல் கெயர்"
இல. 262, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, நல்லூர், யாழ்ப்பாணம். (8351)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தின்
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி
உத்தியோகத்தர்
**திருமதி ஜெ.ஜெயலட்சுமி**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி**
**நாராயணசாமி மகாலட்சுமி**
அவர்களின் மறைவையொட்டி
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும்**
**ஊழியர் நலன்புரி சங்கம்**
**பிரதேச செயலகம் பருத்தித்துறை** (00143)

## QUEEN'S COLLEGE OF BUSINESS, TECHNOLOGY & PUBLIC SAFTY

(Authorized License of Lambton College Programs)
121, Brunel Road, Mississauga, Ontario, Canada, L4Z3E9. www.queenscollege.ca

**Study & Graduate in Canada will give you an opportunity to settle in Canada with family.**

Start with our One year Diploma Courses
- Business Analyst
- Computer Networking & Security
- Web Development

Minimum Qualification :
A/L pass & IELTS - 5.5 ( academic)

Meet the college Representative at Treatooo Hotel, Chundikuli, Jaffna.

**On 29th & 30th April From 10:00am to 5:00pm**

For Career Information Session Free of Charge

Contact : Kumaresan : 011 744 5557 / 077 735 7529
Canada Contact: Shan Muralee: +1-905-8907833 ext225
e-mail : info@queenscollege.ca & srilanka@queenscollege.ca

max adz

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Renovation of Ward 30 | 500.00 | 50,000.00 | 91 | 2.3 | C 8 |
| 2. | Repair of Corridor, Curtin Partition in NTS Lecture Hall at NTS & Male Students Toilets at NTS | 500.00 | 45,000.00 | 91 | 2.0 | C 8 |
| 3. | Construction of Covered way from NTS Office to Lecture Hall and Fixing Air Conditioning system for Lecture Halls | 500.00 | 35,000.00 | 91 | 1.5 | C 9 |
| 4. | Renovation of STD Clinic Complex | 500.00 | 25,000.00 | 91 | 1.2 | C 9 |
| 5. | Renovation of Principal Quarters | 500.00 | 25,000.00 | 91 | 1.1 | C 9 |
| 6. | Toilets Renovation of Ward 01 | 500.00 | 20,000.00 | 91 | 0.8 | C 9 |

02. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

04. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

05. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 24.04.2017 up to 08.05.2017 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

06. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 09.05.2017, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
22.04.2017.

## மரண அறிவித்தல்

**திருமதி மகேஸ்வரி (பாக்கியம்) பாலசிங்கம்**



நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி பாலசிங்கம் (19.04.2017) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் (மெக்கானிக் பாலா) அன்புமனைவியும் காலஞ்சென்ற நடராசா மற்றும் சிவபாலன், விஸ்வராசா (குட்டி) ஆகியோரின் சகோதரியும் நிர்மலா (நிம்மி), ரவீந்திரன் (ரவி - ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும் ஸ்ரீபவன் (குஞ்சன், சுன்னாகம் சந்தை), பத்மராகினி, (வேவி -ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற சிந்துஜா மற்றும் லோஷனா, கிஷோர்குமார் (ஜேர்மனி), பவித்திரா (ஜேர்மனி), பிரவீண்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் சிவானி (ஜேர்மனி), அனீஷா (ஜேர்மனி) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாயகம்,**
**1022, கே.கே.எஸ், வீதி,**
**யாழ்ப்பாணம்**

**தகவல்: குடும்பத்தினர்**
**நிம்மி - 077 6693 557**
**ரவி - 021 221 7184**
(cs8500)

# அதிமுக அணிகள் இணைப்புத் தொடர்பில் பேச தனிக் குழு

சென்னை, ஏப். 22

அ.தி.மு. கழகத்தின் இணைப்புத் தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச் சாமியின் தரப்பிலும், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தரப்பிலும் தனிக்குழுக்கள் அமைக்கப் பட்டன.

சொத்துக்குவிப்பு வழக்கில் சசிகலா சிறைக்குச் செல்வதற்கு முன்னர் தனது அண்ணன் மகன் டி.டி.வி. தினகரனை துணைப் பொதுச்செயலாளராக நியமித்தார். அவரது நியமனத்தை பலரும் ஏற்கவில்லை. ஜெயலலிதா போட்டியிட்டு வெற்றி பெற்ற ஆர்.கே. நகரில் வேட்பாளராகவும் தினகரன் நிறுத்தப்பட்டார். இடைத்தேர்தலில் வாக்குகளுக்கு பணம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டு தினகரனின் மீது உள்ளது. இரட்டை இலைச் சின்னத்தை மீட்பதற்காக அவர் இந்தியத் தேர்தல் ஆணையத்தக்கு லஞ்சம் கொடுத்தார் என்று டெல்லி பொலிஸார் ஆதாரத்துடன் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இதனையடுத்து எடப்பாடி பழனிச்சாமி, அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சசிகலா குடும்பத்தை அடியோடு நீக்கிவிட்டுக் கட்சியை நடத்துவது என்று முடிவெடுத்தனர். பன்னிர்செல்வம் அணியுடன் பேச்சு நடத்த தனிக் குழு அமைக்கப்படும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். இந்த நிலையில் அ.தி.மு. கழகத்தின் தலைமைச் செயலகத்தில் நேற்றுக் காலை எடப்பாடி பழனிச்சாமி தரப்பினர் கலந்தாலோசித்து தமது தரப்பிலிருந்து பேச்சுக்குச் செல்லப்போகும் எழுவர் கொண்ட குழுவை அறிவித்தனர். சட்டமன்ற உறுப்பினர் வைத்திலிங்கம் தலைமையில் குழு அமைக்கப் பட்டது. குழுவில் அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், டி.ஜெயக்குமார், சி.வி.சண்முகம், செங்கோட்டையன், வீரமணி, தங்கமணி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஓ.பி.எஸ். அணிக்கு முனுசாமி தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் நத்தம் விஸ்வநாதன், மாபா. பாண்டியராஜன், ஜே.சி.டி.பிரபாகர், பொன்னையன், மனோஜ் பாண்டியன், மைத்ரேயன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் இன்று அல்லது நாளை சந்தித்து இருதரப்பு இணைப்புத் தொடர்பில் பேச்சு நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## புத்தளத்துக்கு...

மேடு சரிந்து வீழ்ந்து 32 பேர் உயிரிழந்த சம்பவத்தைத் தொடந்து கொழும்பு குப்பைப் பிரச்சினைக்கு அரசு முன்வைக்கப் போகும் நிரந்தரத் தீர்வு பற்றி வினவியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

கொழுப்பு புளுமெண்டல் பகுதியில் குப்பை கொட்டப்பட்டு வந்தபோது அங்கு பிரச்சினை கிளம்பியதால் மீதொட்டமுல்ல பகுதியில் குப்பைகளைக் கொட்டுவதென்று அப்போதைய மகிந்த அரசு தீர்மானித்தது. அதன் அடிப்படையில் 2009 இல் இருந்து குப்பைகள் கொட்டப்பட்டு வந்தன.

இருந்தும், இரண்டு வருடங்களுக்குள் இதற்கு நிரந்தரத் தீர்வைக் காண வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டதால் புத்தளத்தில் அதற்கான இடம் அடையாளம் காணப்பட்டது. தொடர்ச்சியாக 50 வருடங்களுக்கு குப்பைகளைக் கொட்டக்கூடியவாறே அந்த இடம் அடையாளம் காணப்பட்டது.

கொழும்பில் இருந்து ரயிலில் குப்பைகளைக் கொண்டுபோய் போடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. 2014 வரவுசெலவுத் திட்டத்தில் அதற்காக நிதியும் ஒதுக்கப்பட்டது. ரயில் பாதைகளை அமைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. இந்த நிலையில்தான் மகிந்தவின் ஆட்சி 2015 இல் கவிழ்க் கப்பட்டது.

அடுத்து வந்த மைத்திரி ரணில் அரசு இதற்கு வேறு தீர்வைக் காண்பதற்கு முற்பட்டது. இந்த நிலையில்தான் மீதொட்டமுல்ல இடர் ஏற்பட்டது.

இதனைத்தொடர்ந்து புத்தளத்துக்குக் கொண்டு செல்லும் மகிந்தவின் அந்தத் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றவுள்ளது – என்றார். (த-3)

## மயிலிட்டித்துறை...

பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. மயிலிட்டித்துறைமுகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகள் பாதுகாப்புத் தரப்பினர் வசம் உள்ளன. அவற்றை விடுவிக்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கைகள் அழுத்தங்கள் கொடுக்கப்பட்ட போதும் அது விடுவிக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், முப்படைத் தளபதிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பில்கூட மயிலிட்டித் துறைமுகத்தின் விடுவிப்புத் தொடர்பில் பேசப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மயிலிட்டித் துறைமுகம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளை, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே நேற்று நேரில் சென்று பார்வையிட்டிருந்தார். இதன்போது, வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் உள்ளிட்ட குழுவினரையும் அவர் அழைத்துச் சென்றிருந்தார்.

மக்கள் வாழ்ந்த பகுதிகள் உள்ளிட்ட மயிலிட்டிப் பிரதேசத்தை, வடக்கு மாகாண ஆளுநருக்கு அவர்கள் அடையாளம் காண்பித்துள்ளனர். இதன்போது மயிலிட்டித்துறைமுகத்தில் மக்கள் பாவனைக்கு விடுவிக்காத பிரதேசத்தில், சிமெந்து இறக்குமதி நடைபெற்றுக் கொண்டிருப்பதையும் ஆளுநருக்கு புனர்வாழ்வுச் சங்கத்தினர் காண்பித்துள்ளனர். 'எங்களிடம் மயிலிட்டித்துறைமுகத்தை ஒப்படைக்கவில்லை. ஆனால் தனியார் வர்த்தகர் ஒருவர் இதனைப் பயன்படுத்த அனுமதித்துள்ளனர்' என்பதை ஆளுநருக்கு அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் பின்பு கருத்துத் தெரிவித்த ஆளுநர், இந்தப் பகுதிகளை விடுவிப்பதற்கு பாதுகாப்புத் தரப்பினர் இணங்கியுள்ளனர். விரைவில் முழுமையாக விடுவிக்கப்படும். ஆகக் கூடிய இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் இங்கு மக்கள் மீள்குடியமர முடியும் என்று ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பலாலி படைத் தலைமையகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், இராணுவத் தளபதிக்கும் இடையேயான சந்திப்பின் போதும் மயிலிட்டி வெகு விரைவில் விடுவிக்கப்படும் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. (வ-5)

## தொழில்...

நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு, பாலிநகரைச் சேர்ந்த விக்கினேஸ்வரன் வினோதன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

சிறுவனின் தந்தை போர் தீவிரமாகியிருந்த காலத்தில் 2007 ஆம் ஆண்டில் வவுனியாவில் தனித்திருந்த நிலையில் மன விரக்தியில் தவறான முடிவு எடுத்து உயிர் துறந்திருந்தார். அவரது மனைவி குடும்ப பாரத்தைச் சுமந்து தமது இரு பிள்ளைகளையும் வளர்த்து கல்வி கற்பித்து வந்தார்.

மூத்தவனான வினோதன் 15 வயதில் பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தி நண்பர்களின் உதவியுடன் ஒரு ஒப்பந்த நிறுவனத்தில் கட்டுமானப் பணியில் இணைந்துள்ளான். குறித்த சிறுவனின் வயதைக் காரணம் காட்டி அவனை முன்னர் வேலைக்கு அமர்த்த குறித்த நிறுவனம் மறுத்துள்ளது. பின்னர் குடும்ப வறுமையின் காரணமாக சிறுவனை வேலைக்கு இணைத்துள்ளது.

கடந்த 9 மாதங்களுக்கு மேலாகக் குறித்த நிறுவனத்தில் அவன் பணிபுரிந்தான். கடந்த மார்ச்மாத ஆரம்பத்தில் திருகோணமலையில் ஒரு கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்தான். அங்கு 3 ஆம் மாடியில் பணியாற்றியபோது சிறுவன் தவறிவிழுந்து படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தான். சிகிச்சை பயனளிக்காது அவன் நேற்றுமுன் தினம் உயிரிழந்தான். சிறுவனின் உடலம் முல்லைத்தீவு பாலிநகருக்குக் கொண்டு செல்லப்பட்டு இறுதிக் கிரியைகள் இடம்பெற்றன. (த-4-101)

## அம்பனில்...

நேற்று நடைபெற்ற பேச்சில் முன்னேற்றம் காணப்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் மணலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதுவரை காலமும் மணல் அகழப்பட்ட பிரதேசம் வனவளத் திணைக்களத்தினரால் முடக்கப்பட்டுள்ளது. புதிய இடத்தை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகள் அதிகாரிகளால் முன்னெடுக்கப் பட்டன. அம்பன் குடத்தனைப் பகுதியில் அந்தப் பகுதி மக்களின் சம்மதத்துடன் மணல் அகழ்வு மேற்கொள்ளவதற்கு ஆராயப்பட்டது.

மக்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது முடிவு எட்டப்பட்டிருக்கவில்லை. நேற்றைய தினமும் சந்திப்புத் தொடர்ந்தது. நேற்று மாலை 4 மணிக்கு ஆரம்பமான பேச்சு சுமார் 2 மணி நேரம் நீடித்தது.

இந்தச் சந்திப்பில் அரச அதிகாரிகள், வீட்டுத் திட்டப் பணிக்குத் தேவையான மணலை பெற்றுக் கொள்வதற்கு மனிதாபிமான அடிப்படையில் இணங்குமாறு அந்தப் பகுதி மக்களிடம் நேற்றும் மீண்டும் கோரிக்கை விடுத்திருந்தனர். தொடர் பேச்சுக்களின் அடிப்படையில் நாளை மறுதினம் திங்கட் கிழமை தமது முடிவை அறிவிப்பதாக அந்தப் பகுதி மக்கள் அதிகாரிகளிடம் குறிப்பிட்டனர். (வ-5)

## 27ஆம் திகதி...

வனங்கள் இதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் உணவு தவிர்ப்புப் போராட்டம் மேற்கொண்டுவரும் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி திருமதி காசிப்பிளை ஜெயவதனா இந்தக் கோரிக்கையை நேற்று முன்வைத் தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் 27ஆம் திகதி கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்வர்களின் வெளிப்படுத்தலைக் கோரிப் போராட்டம் மேற்கொண்டு வருபவர்கள் முழு அடைப்புப் போராட்டம் ஒன்றை அங்கு மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவிலும் கடந்த 57ஆவது நாளாக நாங்கள் காணாமற்போன உறவுகளை வெளிப்படுத்துமாறு கோரிப் போராட்டம் மேற்கொண்டு வருகின்றோம். எமது உறவுகளைக் கண்டுபிடிக்கும் போராட்டத்துக்கு வவுனியா வர்த்தகர் சங்கம், தனியார் நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் ஆகியன முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் – என்றார். (த-4)

## இரு...

ளிலும் படுகாயமடைந்த 7 பேர் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

நெல்லியடி, பருத்தித்துறை மற்றும் வல்வெடித்துறை பொலிஸார் இணைந்து நேற்று இரவு முழுவதும் மோதல் இடம்பெற்ற பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்னாலை, வேம்படிச் சந்திப் பகுதியில் நேற்று இடம்பெற்ற பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்வை அடுத்தே மோதல் உக்கிரமடைந்தது. பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது வடமராட்சி பகுதியைச் சேர்ந்த 2 ரௌடிகளுக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பு, மாலை 5 மணியளவில் உக்கிரமடைந்தது.

இரு கும்பல்களாகப் பிரிந்து அவர்கள் மோதலில் ஈடுபட்டனர். 500க்கும் மேற்பட்ட கண்ணாடியிலான சோடாப் போத்தல்கள், கற்கள் போன்றவற்றால் மாறிமாறித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் வாள்கள் மற்றும் கம்பிகளையும் தாங்கியிருந்தனர்.

இந்தச் சம்பவத்தால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. இந்த மோதல் சில மணி நேரம் நீடித்தது. சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சில மணி நேரங்களில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு செல்வதற்குள் மோதல்கள் நிறைவடைந்தன. பொலிஸார் வருவதை அறிந்த மோதலில் ஈடுபட்ட கும்பல்கள் தப்பித்து ஓடி மறைந்தன. இந்த மோதலால் படுகாயமடைந்த 7 பேர் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவ இடத்திலிருந்து வாள், கம்பிகள் மற்றும் உடையாத சோடாப் போத்தல்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. மோதல் இடம்பெற்ற வீதியில் கண்ணாடியிலான சோடாப் போத்தல்கள் உடைக்கப்பட்டு வீதி முழுவதும் கண்ணாடித் துண்டங்களாக காட்சி அளித்தது. பொலிஸாரின் வாகனம் அந்த வீதியால் பயணித்த போது, சில்லு ஒன்றுக்கு காற்று போனது.

பொலிஸாரின் அறிவுறுத்தலில் நேற்றிரவு அந்த வீதியை துப்புரவு செய்யும் பணிகள் இடம்பெற்றன. அத்தோடு மேலும் பிரச்சினைகள் ஏற்படாதவாறு நெல்லியடி, பருத்தித்துறை மற்றும் வல்வெடித்துறை பொலிஸார் இரவு நேர காவல் கடமைகளில் ஈடுபட்டனர். நேற்று நள்ளிரவு 12 மணிவரை சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸார் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (வ-21-26)

## சிறுநீரைக்...

விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்வது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து தமிழக விவசாயிகள் புதுடில்லியில் கடந்த மாதம் 14ஆம் திகதி முதல் தொடர் போராட்டம் நடத்தி வந்தனர். போராட்டத்தை இந்தியத் தலைமை அமைச்சர் மோடி கண்டு கொள்ளவில்லை. இதனால் அவர்மீது கடும் விமர்சனம் முன்வைக் கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை இந்திய அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் விவசாயிகளைச் சந்தித்து அவர்களின் கோரிக்கை தொடர்பில் பரிசீலிப்பதாக வாய்மொழி வாக்குறுதி வழங்கினார். இரண்டு நாள்களுக்குள் எழுத்துமூலம் வாக்குறுதி தரப்படாவிட்டால் போராட்டம் தொடரும் என்று விவசாயிகள் கெடு விதித்தனர். ஆனால் நேற்றிரவு வரை எழுத்துமூலவாக்குறுதிவழங்கப்படவில்லை. இதனால் இன்று தமிழக விவசாயிகள் சிறுநீரைக் குடித்து போராட்டத்தில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டது

"எமக்கு எந்தவிதமான எழுத்துமூல வாக்குறுதிகளும் தரப்படவில்லை. எனவே ஏற்கனவே அறிவித்தபடி நாளை (இன்று) சிறுநீரைக் குடிக்கும் போராட்டமும், நாளை மறுதினம் (நாளை) மலம் உண்ணும் போராட்டமும் நடத்தப்படும்' என்று போராட்டத்துக்கு தலைமைதாங்கியுள்ள தமிழக விவசாயி அய்யாக் கண்ணு தெரிவித்தார். (வ-ம)

**பிரத்தியேக வகுப்புகள்**

மாணவர்களின் விருப்பத்துக்கேற்ப தரம் 06-O/L கணிதம், வரலாறு வீடுகளுக்கு வந்து தனியாகவோ, குழுவாகவோ அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
O/L Day Class மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள்
T.P : 075 2480 158
(C8498)

**பணியாளர் தேவை**

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் முதற்தர உணவகம் ஒன்றிற்கு உணவு பரிமாறுபவர் (வெயிற்றர்) உடன் தேவை. தகுதியுடையோர் நேரில் வருகை தரவும்.
T.P. 077 649 1027/ 077 940 0963

**காணி தேவை**

யாழ். வலிவடக்கு பிரதேசத்தினுள் வீதிக்கு அருகில் வயற் காணிகள், தோட்டக்காணிகள் தேவை.
விற்க விரும்புபவர்கள் பின்வரும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
T.P : 077 9785 717
(C/8498)






## தனியார்...

போதே மைத்திரிபால சிறிசேன வழங்கியிருந்தார். இதற்கு அமைவாகவே பாதுகாப்புத் தரப்பினருடனான கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள முப்படைகளின் கட்டளை அதிகாரிகள், மாவட்டச் செயலர் நா. வேதநாயகன், பிரதேச செயலாளர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், த.சித்தார்த்தன் ஆகியோருக்கு இடையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை காணி விடுவிப்புக்கள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்துரையாடலின் முடிவில் பத்திரிகையாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் தமது சொந்த நிலங்களுக்குச் செல்ல வேண்டும் என்பது எங்களுடைய அடிப்படைக் கோரிக்கை. அரச தலைவருக்கான தேர்தலுக்கு முன்னர், அரச தலைவர் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன இருந்தபோது எழுத்திலேயே தனியார் காணிகள் அனைத்தும் விடுவிக்கப்படும் என்று வாக்குறுதியைக் கொடுத்திருந்தார்.

அரச தலைவரின் பணிப்புக்கு அமைவாகவும் தான் பாதுகாப்பு தரப்பினருடன் இந்தக் கலந்துரையாடலை நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

படைத் தரப்பினரும் இணங்கித் தனியார் காணிகளை விடுவித்து தங்களுடைய இடங்களை மாற்றி அமைத்து, எவ்வளவுக்குக் குறைக்க முடியும் என்பதை முதலிலே பரர்த்துவிட்டு அதன் பின்னர் கூடுதலான நிலப் பரப்புக்கள், படைத் தரப்பினர் வசம் இருக்குமாக இருந்தால் அடுத்த நடவடிக்கை பற்றிச் சிந்திக்க முடியும். முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகங்களில் நடைபெற்ற மூன்று கூட்டங்களும் பிரயோசனமானது. சில இடங்களை இந்தப் பேச்சிலேயே விடுவிப்பதாக அறிவித்திருக்கின்றனர்.

மாவட்ட மட்டத்திலான இந்தக் கலந்துரையாடலின் பின்னர், உயர்மட்ட அரசியல் சந்திப்பு நடைபெற இருக்கின்றது என்றார். (த-5)

## பாதிக்கப்...

தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும். மேலும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் வீடமைப்பு அதிகார சபையில் பெற்றுக் கொண்ட கடனை மீளச் செலுத்தத் தேவையில்லை"

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று இடம்பெற்ற இடர் முகாமைத்துவக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக அறிவிக்கப்பட்டது.

மீதொட்டமுல்ல பிரதேசத்தில் உள்ள குப்பை மேடு சரிந்து விழுந்து ஏற்பட்ட இடரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடுகள் மற்றும் சலுகைகளை வழங்குவது தொடர்பான முன்னேற்றக் கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடர் முகாமைத்துவ அமைச்சில் நேற்று இடம்பெற்றது. இதில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் பங்கேற்றார்.

"இடரால் முழுமையாக பாதிக்கப்பட்ட 60 குடும்பங்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும். அத்துடன், அவர்கள் வீட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்படும். வீட்டு உபகரணங்களுக்கான போக்குவரத்துச் செலவுக்காக 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் வழங்கப்படும்.

குப்பை மேடு சரிவு ஏற்படும் அபாயமுள்ள வலயங்களிலிருந்து வெளியேறி வேறு இடங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு முழுமையான இழப்பீடு பெற்றுக் கொடுக்கப்படும் வரை மாதாந்தக் கொடுப்பனவாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும். அவர்களுக்கும் பொருள்கள் போக்குவரத்துக்காக 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

இவ்வாறு வெளியேறிய குடும்பங்களுக்கு மூன்று மாத காலத்துக்குள் வீடொன்றோ அல்லது மதிப்பீட்டு தொகையையோ பெற்றுக்கொடுப்பதற்கு அரச தலைவரின் ஆலோசனையின் அடிப்படையில் குறித்த அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு விரும்பாத குடும்பங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவர்களுக்கு மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையில் சாதாரண இழப்பீடு வழங்கப்படும். இந்த இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும் குடும்பங்களுக்கும் வீட்டு உபகரணங்களுக்கான கொடுப்பனவும் போக்குவரத்துச் செலவினமும் வழங்கப்படும்.

முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள 60 வீடுகளுக்கும் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ள 22 வீடுகளுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள வலயத்தில் அமைந்துள்ளது என தற்போது அனுமானிக்கப்பட்டுள்ள 211 வீடுகளுக்கும் இவ்வேலைத்திட்டம் துரித கதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

குப்பை மேடு சரிந்து விழுந்து ஏற்பட்ட இடரால் பாதிக்கப்பட்ட தஹம்புற மற்றும் பன்சல் ஹேன ஆகிய பிரதேசங்களின் வீட்டு உரிமையாளர்களுக்கு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த வீட்டுக் கடன் தொகையை முழுமையாக நீக்குவதற்கு வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில், குறித்த பகுதிகளில் வசிப்பவர்கள் மாத்திரமல்லாமல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள வலயங்களில் வசிப்பவர்கள் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வீட்டுக்கடன் தொகையைப் பெற்றிருப்பின் அதனை மீளச் செலுத்தத் தேவையில்லை" என்று நேற்றைய கலந்துரையாடலில் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, தொடர்ந்தும் இவ்வாறான குடியேற்றங்கள் நிகழாது தடுப்பதற்காக திண்மக் கழிவுகளை பயன்படுத்துவது தொடர்பான தேசிய கொள்கையொன்றைத் தயாரிப்பதற்காக வாராந்தம் அரச தலைவர் தலைமையில் தலைமை அமைச்சர், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## பலாலியை...

பில், பாதுகாப்புத் தரப்பினருடனான நேற்றைய கூட்டத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இந்தக் காணி தொடர்பில் உயர்மட்டப் பேச்சு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் தரப்பினர், அரச அதிகாரிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இடையிலான முத்தரப்புச் சந்திப்பு, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில், பலாலி வானூர்தி நிலையம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 4 ஆயிரம் ஏக்கர் தொடர்பில் பேசப்பட்டது.

பலாலி வானூர்தி நிலையத்தில் ஏயார் பஸ் 320 ரக விமானம் தரையிறங்குவதற்குத் தற்போதுள்ள ஓடுபாதை போதாது. அதனைப் பெரிதாக்கவேண்டிய தேவை உள்ளது. அதற்கு மேலும் காணிகளைச் சுவீகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று பாதுகாப்புத் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

பலாலி வானூர்தித் தளத்துக்காக ஏற்கனவே இரண்டு தடவைகள் மக்களின் தனியார் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. மேலதிக காணிகளைச் சுவீகரிக்காமல் பிராந்திய வானூர்தித் தளமாக மாற்றுவது தொடர்பிலேயே யோசனைகள் முன்வைக்கப்பட்டன என்று கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் உயர் மட்டத்தில் பேசி முடிவெடுக்கலாம் என்றும், பன்னாட்டு வானூர்தி நிலையமாக மாற்றுவதா இல்லையா என்பது தொடர்பில் மக்களுடன் பேசித் தீர்மானிக்கலாம் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதன்போது குறிப்பிட்டுள்ளனர். (த-5)

## புதிய...

லங்கா சமசமாஜக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்ததாவது:

நிறைவேற்று அரச தலைவர் முறைமை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும். இதைச் செய்வதற்குப் புதிய அரசமைப்பு அவசியம். தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு அர்த்தமுள்ள வகையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். தேர்தல் முறையிலும் மாற்றம் அவசியம். இந்த விடயங்களை உள்ளடக்கிய வகையில் புதிய அரசமைப்பொன்றே நாட்டுக்குத் தேவையாகவுள்ளது என்றார்.

அதேவேளை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து, தமது கட்சியின் நிலைப்பாட்டை லங்கா சமசமாஜக் கட்சி விரைவில் எடுத்துரைக்கவுள்ளது. (த-5)

## வட்டுவாகலில்...

வேண் டும். இல்லையேல் தொடர் அமைதி வழிப் போராட்டத்தில் குதிப்போம் எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்தனர். முல்லைத்தீவு, வட்டுவாகலில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணி களையும் சமுத்திரவியல் பல்கலைக்கழகம் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட அரச காணிகளையும் சுவீகரித்துள்ள கடற்படையினர் அதில் பெரிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இந்தக் காணியை நிரந்தரமாகச் சுவீகரிப்பதற்குக் கடற்படையினர் எடுத்த முயற்சிகள் இரண்டு தடவைகள் தடுத்து நிறுத்தப்பட்டன. தமது காணிகள் கிடைக்கும் என எதிர்பார்த்து கடந்த ஆறு வருடங்களுக்கு மேல் பொறுமையாக இருந்த காணி உரிமையாளர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

தொடர்ந்தும் கடற்படை எங்கள் காணிகளுக்குள் இருப்பதை அனுமதிக்க முடியாது. எங்கள் காணிகள் எமக்கு வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த 19 ஆம் திகதி முதல் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் நேற்று முற்பகல் 10 மணியளவில் வட்டுவாகல் கடற்படை முகாமுக்கு முன்னால் இருந்து பேரணியாகப் புறப்பட்டு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தை அடைந்தனர். அங்கு அரச தலைவருக்கான மனுவை மாவட்டச் செயலாளரிடம் கையளித்தனர். (த-7)

## அரச...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது அணியின் சார்பில் பசில் ராஜபக்சதான் அடுத்த அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவார் என்று சொல்லப்படுகின்றது. உண்மையில்,அரசதலைவராகும்கனவில்அவர்இல்லை. இப்போதைய அரசமைப்பின்படி, மகிந்தவால் அடுத்த அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாது. மகிந்தவால் போட்டியிட முடியாத நிலை வரும்போது பசிலால் இந்த நாட்டில் இருக்க முடியாது. அவர் மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அவர் சிறையில் அடைக்கப்படுவார். இதனால் அவர் அப்போது நாட்டை விட்டுச் சென்றுவிடுவார்.

பசில் ஊழல்வாதியல்ல. அவர் எந்தவோர் ஊழலிலும் ஈடுபடவில்லை. அவர் சிறந்த அரசியல் செயற்பாட்டாளர். மகிந்தவுக்குப் பக்கபலமாக இருப்பவர். அதனால்தான் அவர் மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. அவரை அடக்குவதன் மூலம் மகிந்தவின் செயற்பாட்டை முடக்குவதற்கு முற்படுகின்றனர்-என்றார். (த-3)

## காணிகளை...

ஜெனரல் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ. சுமந்திரன், த.சித்தார்த்தன் ஆகியோருக்கும், யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மதியம், பலாலி பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகக் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டது. தனியார் காணிகளை விடுவிப்பதற்குச் சாதகமான பதிலை இராணுவத் தளபதி வெளிப்படுத்தியுள்ளார். நல்லிணக்கம் தேவை என்றால், மக்களுக்கு காணிகள் திருப்பிக் கொடுக்கப்படுவது முக்கியமானது என்றும் இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார். சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பு பயனுள்ளதாக இருந்தது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்தனர். (த-5)

## மயங்கி...

லம் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகக் கிளிநொச்சி வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி குமாரசாமிபுரம் பகுதியில் வசிக்கும் கர்ப்பிணியே நேற்றுமுன்தினம் மாலை 4.15 மணியளவில் இவ்வாறு உயிரிழந்தார். கர்ப்பிணியான அவர் சமுர்த்திக் கூட்டத்துக்குச் சென்றுகொண்டிருந்தபோது மயங்கிச் சரிந்தார். அவரை வைத்தியசாலையில் சேர்த்தனர். அவரைப் பரிசோதித்த மருத்துவர் அவர் உயிரிழந்துவிட்டார் எனக் கூறியுள்ளார். இறப்புக்கான காரணம் கண்டறியப்படவில்லை. அவருக்கு ஏற்கனவே மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

கர்ப்பிணியின் இறப்புக்கான காரணத்தைக் கண்டறியும் நோக்கில் சட்ட மருத்துவ நிபுணரின் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக உடலம் அநுராதபுரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகக் கிளிநொச்சி வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்தனர். (த-4-35)

## மைத்திரியின்...

ளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பு வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குப்பைகளை அகற்றுதல் அத்தியாவசிய சேவையாக அறிவித்து அரச தலைவர் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தார்.

குப்பைகளை அகற்றும் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் நபர்களைப் பிடிவிறாந்து இன்றிக் கைது செய்யும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மக்கள் அமைதியாக ஒன்று கூடுதல் கருத்து வெளியிடுதல் உள்ளிட்ட சுதந்திரத்தைத் தடுப்பதாக இந்த வர்த்தமானி அறிவித்தல் உள்ளது. இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் பொதுமகன் ஒருவரின் கடமை" என்று அதில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கழிவுகளை அகற்றுவதற்கு இடையூறு விளைவிக்கும் நபர்களைக் கைது செய்ய முடியும் என்று அரசதலைவர் வெளியிட்டுள்ள புதிய வர்த்த மானி அறிவித்தல் மூலமாகப் பொதுமக்கள் துன்பங்களை எதிர்கொள்ளவுள்ளனர் என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது.

இந்த வர்த்தமானி அறிவித்தலால் தமது கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார். குறித்த வர்த்தமானி அறிவித்தலைத் திரும் பப் பெறவேண்டுமென மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது. (த-4)

## யாழ்...

காணி அடையாளப்படுத்தப்படாவிட்டால், தற்போதுள்ள முகாமின் விஸ்தீரணத்தைக் குறைப்போம் எனவும் இராணுவத்தினர் இந்தச் சந்திப்பில் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமான சந்திப்பு மதியம் 12.30 மணி வரையில் நீடித்தது. இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், இராணுவம், கடற்படை, வான்படை, பொலிஸ் தரப்பினர் ஆக்கிரமித்துள்ள தனியார் காணிகள் தொடர்பில் தனித் தனியே ஆராயப்பட்டது. தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பலாலி வான்படைத் தளத்துடனான காணி தொடர்பில் மாத்திரம் மேல் மட்டத்தில் பேசுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

ஏனைய இடங்களில் உள்ள தனியார் காணிகளை விடுவிக்கப் படைத் தரப்பு இணங்கியுள்ளது. பாதுகாப்புத் தேவை கருதி முகாம் அந்தப் பகுதியில் இருக்கவேண்டிய தேவை இருந்தால், பாதுகாப்புத் தரப்பினருக்கு அந்தப் பகுதியில் அரச காணி அடையாளப்படுத்தி வழங்கப்படவேண்டும். அரச காணிகள் இருப்பின் அவற்றை ஒரு வாரத்தில் அடையாளப்படுத்திப் பிரதேச செயலாளர்கள் கொடுக்கவேண்டும். அரச காணிகள் இல்லாதிருப்பின், தனியார் காணிகளில் தற்போதுள்ள முகாமின் விஸ்தீரணத்தைக் குறைக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்தது. அதற்குப் பாதுகாப்புத் தரப்பினர் இணங்கியுள்ளனர்.

அரச காணிகள் அடையாளப்படுத்திய பின்னர், பாதுகாப்புத் தரப்பினருடன் மீளவும் கலந்துரையாடல், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெறும். இதன்போதே முகாம்களை இடமாற்றுவதா அல்லது விஸ்தீரணத்தைக் குறைப்பதா என்பது தொடர்பில் முடிவு செய்யப்படும். (த-5)

## இடர்...

தலைவர் ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் முழுமையாகச் சேதமடைந்த 30 வீடுகளின் உரிமையாளர்களுக்கு நேற்று வீடுகள் வழங்கப்பட்டன.

இந்த இடரில் 98 குடும்பங்கள் வீடுகளை இழந்தன. அவர்கள் அனைவருக்கும் வீடுகள் பெற்றுக்கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் முதற்கட்டமாக 30 வீடுகள் நேற்று வழங்கப்பட்டன. 30 வீடுகளுக்கும் 3 ஆயிரத்து 920 லட்சம் ரூபா செலவிடப்பட்டது. தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கென தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது என்றுள்ளது. (த-4)



# பத்திரிகை

சுமலதா 5ஆம் வகுப்பு மாணவி. அதிகாலையில் எழுந்து பல் துலக்குவதில் இருந்து பாடசாலை புறப்படுவது வரை அவளது வேலைகளை அவளே பார்த்துக் கொள்வாள். முதன் நாள் இரவு படிப்பு முடிந்ததும் தனது புத்தகங்கள் அப்பியாசக் கொப்பிகளை எல்லாம் தனது புத்தகப் பையினுள் அடுக்கி விடுவாள். நீலம், மஞ்சள், பச்சை, சிவப்பு என ஒவ்வொரு பாடத்துக்கும் ஒவ்வொரு நிற உறை என்று பிரித்துப் போட்டு வைத்துள்ளதால் இலகுவில் அவற்றை இனம் கண்டு தேடிப் பிடிப்பாள். பென்சில் முனைகள் மழுங்கி விட்டால் அவற்றை தீட்டி வைப்பாள். மறுநாள் அணியும் சீருடை, சப்பாத்து, கழுத்துப்பட்டி என்பவற்றையும் எடுத்து வைப்பாள். இதனால் காலையில் அவளுக்கு வேலைகள் இலகுவாக இருக்க அரைமணி நேரம் முன்னதாகவே பாடசாலை புறப்பட ஆயத்தமாவாள். பெற்றோருக்கு எந்தத் தொல்லையும் கொடுப்பது கிடையாது. அவளுக்கு காலையில் ஒரு பழக்கம். தந்தை வாங்கி வரும் தினசரி பத்திரிகையை ஒரு 10 நிமிடம் ஒதுக்கி வாசிப்பது.

அன்றும் அப்படியே பாடசாலை புறப்பட ஆயத்தம் செய்த பின்னர். தினசரி பத்திரிகையை மேலோட்டமாக வாசிதவள். பரபரப்போடு பாடசாலை அதிபருக்கு நடந்திருக்கும் விபரீதம் பற்றி தொலைபேசியில் அறிவித்தாள். உடனே அதிபர் அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ததோடு பாடசாலை மாணவியர் பலரது வீடுகளுக்கும் விடயத்தைத் தெரிவித்து பெற்றோருடன் பாதுகாப்பாக பாடசாலை வரும்படி கூறி வைத்தார்.

சுமலாதா வழமையாக தனது சிறிய சைக்கிளில் செல்பவள் அன்று தந்தையுடன் பாடசாலைக்கு சென்றாள். பாடசாலைச் சூழல் பரபரப்பாகவும் பதற்றம் சூழ்ந்ததாகவும் காணப்பட்டது. காவல் துறையினர் பலர் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்தனர். அதிபரும் ஆசிரியர்கள் சிலரும் வாசலில் நின்று பெற்றோருடன் வந்த மாணவிகளை பாடசாலையுள் அனுப்பிக் கொண்டிருந்தார். சில பெற்றோர் என்னவோ ஏதோ என பயந்த படி நின்றனர். அவர்களிடம் பேசி அவர்களை வீடுகளுக்கு அனுப்பி வைத்தார் அதிபர். பாடசாலை பிரதான கதவு பூட்டப்பட்டது. சிறிது வேளையில் பாடசாலையில் முன்றிலில் இறைவணக்கத்துடன் காலை ஒன்று கூடல் ஆரம்பமானது. ஆசிரியர் ஒருவரின் நற்சிந்தனை உரைக்குப் பின்னர் அதிபர் உரையாற்றத் தொடங்கினார்.

பிள்ளைகளே! எமது பாடசாலைக்கு அடுத்தடுத்து இருக்கும் வெற்றுக் காணியில் நேற்றிரவு இரட்டைக் கொலைகள் நடந்துள்ளன. ஒரு கொள்ளைக்கும்பல் இதனைச் செய்ததாக பத்திரிகைச் செய்தி கூறுகிறது. கொலையுண்டவர்களின் உடல்கள் இன்னும் அங்கிருந்து அகற்றப்படவில்லை. அது தான் பாடசாலை சூழலில் இத்தனை காவல்துறையினர் நிற்கின்றனர். சிறிது வேளையில் எல்லாம் பழைய அமைதி நிலைக்கு திரும்பி விடும். இதில் நான் கூற வந்த முக்கிய விடயம் என்ன வெனில் தினசரி பத்திரிகையைத் தவறாது வாசிக்கும் பழக்கமுள்ள ஒரு மாணவியே காலை எனக்கு இந்தச் செய்தியை அறிவித்தார். அவர்கூறியதால் தான் நான் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னதாக எடுக்க முடிந்தது. உங்களையும் பெற்றோரின் பாதுகாப்பில் பாடசாலைக்கு அழைக்க முடிந்தது. நான் கூட தினமும் பாடசாலைவந்து இந்த ஒன்றுகூடல் முடிந்த பின்பே பத்திரிகைச் செய்திகளை வாசிக்கிறேன்" என்று கூறி சின்னப் பெண்ணான சுமலதாவை அழைத்து எல்லோருக்கும் அறிமுகம் செய்து பாராட்டினார். மாணவிகள் அனைவரும் கைதட்டி ஆரவாரித்து பாராட்டுக்களைக் கூறினர்.

"நீங்கள் வாசிப்பு பழக்கத்தைத் தினமும் மேற்கொள்ள வேண்டும். பாடப் புத்தங்களோடு மட்டும் நின்று விடாது தினசரி பத்திரிகைச் செய்திகளையும் படித்து அன்றாடம் நாட்டில் நடப்பவைகளையும். தெரிந்து வைத்திருத்தல் அவசியம்" என்று கூறி சுமலதாவுக்கு ஒரு பெறுமதி மிக்க பேனாவென்றைப் பரிசளித்து மகிழ்ந்தார் அதிபர்.

**தினமும் படியுங்கள்**
**தினசரி பத்திரிகை படியுங்கள்**



## காகத்தின் உதவியும் பாட்டியின் கருணையும்

பாட்டி ஒருத்தி வடைகள் சுட்டு
விற்று வாழ்க்கை நடத்தினாள்
பாட்டி வீட்டின் அருகே மரத்தில்
காகம் வாழ்ந்து வந்தது

காகம் அங்கு வந்து பாட்டி
சுட்ட வடையைப் பார்த்ததும்
மோகம் கொண்டு வடையை எடுத்து
தின்ன எண்ணம் கொண்டது

பாட்டி திரும்பிப் பார்க்கும் வேளை
பறந்து வடையைத் திருடலாம்
பாட்டி மனது நோகும் என்றே
எண்ணிப் பறந்து சென்றது

காகம் காட்டை நோக்கிப் பறந்து
விறகைப் பொறுக்கி வந்தது
பாட்டி முன்னே அதனைப் போட்டு
வெளியே பறந்து போனது

மீண்டும் மீண்டும் சுள்ளி விறகை
பாட்டி முன்னே போட்ட பின்
"கா கா" என்று பாட்டி முகத்தைப்
பார்த்துக் காகம் கரைந்தது

"தா தா" என்று காகம் வடையைக்
கேட்பதாக எண்ணியே
இதோ என்று பாட்டி வடையை
எறியக் காகம் தின்றதே

## தேசிய விழாக்கள் நிறைந்த நாடு


தென் கிழக்காசியாவில் ஒரு நாடு தாய்லாந்து. தேசிய கலாசாரப் பற்று மிக்க நாடு. மாதத்தில் பல விழாக்களையும் வைபவங்களையும் நடத்தி மகிழும் நாடு.

சித்திரை மாதத்தில் புதுவருடம் பிறக்கும். இதனை அவர்கள் சந்திர வருசம் எனக் கொண்டாடுவார். அன்றைய தினம் மக்கள் எல்லோரும் ஆளுக்கு ஆள் தண்ணீர் தெளித்து மகிழ்வர். வட இந்தியாவில் 'ஹோலி' பண்டிகை போல் தாய்லாந்தின் தண்ணீர் தெளிப்பு இருக்கும். வைகாசி மாதத்தில் அங்குள்ள சனாம்வாயுல் என்ற திருத்தலத்தில் ஏர் பூட்டு விழா நிகழும். இவ்விழாவுக்கு நாட்டின் அரசர் வருகை தந்து ஏர் பிடித்து நிலம் உழுவார். நாட்டின் பட்டி தொட்டி எல்லாம் விழக்கோலம் பூண்டு விளங்கும். இதே மாத இறுதியில் மழையை வேண்டி ஒரு விழா நடைபெறும். அப்போது வானில் காதிதப்பட்டங்களும் றொக்கட்டுக்களும் செறிந்து பறக்கும். கார்த்திகை மாதத்தில் நீர்நிலைகள் யாவும் தீபங்களால் ஒளிரு... நீர்நிலைகளில் வாழையிலைகள் மிதக்கு... அவற்றில் மெழுகுவர்த்தி, நாணயம், சா... ராணி, ஊதுவர்த்திகள், மலர்கள் என ... தீப அலங்காரம் செய்யப்படும். எருமை ஓ... பந்தயங்கள் நீள் வள்ள ஓட்டப் பந்தயம் இப்... பல பந்தயங்களும் விழாக்கோலம் காணு...






## வர்ணம் தீட்டுவோம் வாருங்கள்



## மிகச் சிறிய எண்ணைச் சுற்றி வட்டமிடுவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | 20 | 35 | 18 | 31 | 36 |
| 2) | 13 | 15 | 24 | 11 | 66 |
| 3) | 52 | 46 | 22 | 17 | 78 |
| 4) | 65 | 82 | 90 | 81 | 10 |
| 5) | 72 | 76 | 66 | 62 | 08 |
| 6) | 15 | 25 | 48 | 55 | 38 |
| 7) | 55 | 23 | 15 | 45 | 59 |
| 8) | 33 | 48 | 66 | 54 | 39 |

## வெற்றுக் கூடுகளுக்குள் பொருத்தமான எண்களை எழுதுவோம்



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 22

**கே.ஸி.ஸி.ஸியின் துடுப்பாட்டத் தொடர்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் பரிஸ்



விளையாட்டுக் கழக அணியைஎதிர்த்துஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில்காலை8.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொனியன்ஸை எதிர்த்து யாழ். சென்றல் அணிமோதவுள்ளது.

**யாழ். மாவட்ட எல்லே இன்று**

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான பெண்கள் பிரிவு எல்லே தொடர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது. இன்று நடைபெறும் ஆட்டங்களில் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும், கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலக அணியும், கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும், வேலணை பிரதேச செயலக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணியும், காரைநகர் பிரதேச செயலக அணியை எதிர்த்து சாவகச்சேரி பிரதேச செயலக அணியும், நெடுந்தீவு பிரதேச செயலக அணியை எதிர்த்து சங்கானை பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன.

**பருத்தித்துறை கால்பந்தாட்டம்**

பருத்தித்துறை சிரேஷ்ட கால்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்படும்7வீரர்கள்பங்குபற்றும் விலகல் முறையிலான தொடரின் ஆட்டங்கள் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23-108-422)



ஸ்பெய்னின் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையே நடைபெற்றுவரும் லா லிகா தொடரில் நாளை இடம்பெறும் ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணியும் அதன் பரம வைரியாகக் கருதப்படும் பார்சிலோனாவும் சந்திக்கவுள்ளன. இந்த ஆட்டத்துக்காக பார்சிலோனா அணி நேற்று கடும் பயிற்சியில் ஈடுபட்டது. தற்போது நடைபெற்றுவரும் ஐரோப்பியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் பார்சிலோனா வெளியேற்றப்பட்டுள்ளது. ரியல் மட்ரிட் அரையிறுதிக்குத் தகுதிபெற்றுள்ளது. எனவே இந்த ஆட்டத்தில் வெல்லவேண்டும் என்ற தர்மசங்கடமான நிலைமை பார்சிலோனாவுக்கு இருக்கவே செய்கிறது. (ம)

# கரவெட்டிப் பிரதேச கபடியில் மாலிசந்தி மைக்கல் மகுடம்

### நீண்ட போராட்டத்தின் பின்

கரணவாய், ஏப். 22

கரவெட்டிப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கபடியில் ஆண்கள் பிரிவில் சம்பியனாகியது மாலிசந்தி மைக்கல் இளைஞர் கழகம்.

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அல்வாய் மாலிசந்தி மைக்கல் இளைஞர் கழகமும் கரவெட்டி ஞானம்ஸ் இளைஞர் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. எந்த அணியினதும் தனித்து ஆதிக்கம் இல்லாமல் ஆட்டம் சென்றுகொண்டிருந்தது. திக்திக் நிலமைக்கு ஏற்ப ஆட்டத்தில் அனல் பறந்தது. விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்கவில்லை. முதல் பாதியின் முடிவில் 13:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் மைக்கல் அணி முன்னிலை பெற்றது.

மைக்கல் அணி முன்னிலை பெற்றிருந்தபோதிலும் வெறும் இரண்டு புள்ளிகள் மட்டுமே வித்தியாசம் இருந்தது. இதனால் இரண்டாம் பாதியில் என்னவென்றாலும் நடக்கலாம் என்ற நிலமை. தனது ஆதிக்கத்தை வலுவாகப் பற்றிப்பிடித்துக் கொண்டது மைக்கல். எனினும் ஞானம்ஸ் இளைஞர் கழகமும் இலகுவாக சரணடைவதாக இல்லை. முடிவில் 29:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மைக்கல் அணி வெற்றிபெற்றது.

(ம-108)

## வென்றது கண்ணகி

யாழ்ப்பாணம், ஏப். 22

பருத்தித்துறை சிரேஷ்ட கால்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கண்ணகி அணி வெற்றிபெற்றது.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், அல்வாய் நண்பர்கள் அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:1 என்ற கோல் கணக்கில் கண்ணகி அணி வெற்றிபெற்றது.

(ம-23-26)



## மாகாணமட்ட கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 22

வடமாகாண ரீதியிலான இருபாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கிளிநொச்சி 55ஆம் கட்டை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. (ம-23)



## சைக்கிளோட்டம்

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு இலங்கை ரெலிக்கொம் நிறுவனம் தேசிய ரீதியில் சைக்கிளோட்டப் போட்டியை நடத்தி வருகிறது. கிளிநொச்சி மாவட்டத்துக்கான போட்டி 100 கிலோ மீற்றர் தூரமுடையதாக இன்று இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு இலங்கை ரெலிக்கொம் நிறுவனம் தேசிய ரீதியில் சைக்கிளோட்டப் போட்டியை நடத்தி வருகிறது. யாழ்ப்பாண மாவட்டத்துக்குரிய போட்டி100 கிலோ மீற்றர் தூரமுடையதாக நேற்றுக் காலை நடைபெற்றது. பண்ணைத் தபால் நிலையத்துக்கு அண்மையில் போட்டி ஆரம்பிக்கப்பட்டு அந்த இடத்திலேயே முடிவடைந்தது. (ம-23)

## மென்பந்து துடுப்பாட்டம்

யாழ்ப்பர்ணம், ஏப். 22

வடக்கு மாகாண ரீதியிலான மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்னள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. (ம-23)

## மன்னார் பிரதேச செயலகம் மகுடம்

யாழ்ப்பாணம், ஏப். 22

மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் மன்னார் பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது. மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து மாந்தை பிரதேச செயலக அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் போராடி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது மன்னார் பிரதேச செயலக அணி. (ம-23)

# கரவெட்டி பிரதேச இளைஞர் கழக துடுப்பாட்டம்

கரணவாய், ஏப். 22
கரவெட்டிப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடர் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்திலும் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்திலும் இன்று இடம்பெறவுள்ளன. இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் காலை 8 மணிக்கு அட்டவணை தயாரிக்கப்பட்டு தொடர்ந்து தொடரின் ஆட்டங்கள் இடம்பெறும். (ம-108)

# முர்ரே தோல்வி

மொனாக்கோ ரென்னிஸ் தொடரில் தோல்வியடைந்து மூன்றாம் சுற்றுடன் வெளியேற்றப்பட்டார் இங்கிலாந்து வீரர் அண்டி முர்ரே. ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டத்தில் நேற்றுக் காலை (இலங்கை நேரப்படி) முர்ரேயை எதிர்த்து ஸ்பெய்ன் வீரர் ராமோஸ் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் முர்ரே. ஆனால் சரிவில் இருந்து மீண்ட ராமோஸ் அடுத்த இரு செற்களையும் முறையே 6:2, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம)






# 'பெரிய ஒப்பந்தங்களின் கடவுள்' வழக்கை நிராகரித்தது நீதிமன்று

பத்திரிகை அட்டைப்படம் ஒன்றில் கிரிக்கெட் வீரர் டோனி, விஷ்ணு போல் காட்டப்பட்டதால் இந்து மத உணர்வுகளைப் புண்படுத்தி விட்டார் என்று அவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை உச்ச நீதிமன்றம் நிராகரித்து உத்தரவிட்டது.
கடந்த 2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளிவந்த வாரப் பத்திரிகை ஒன்றில் டோனி விஷ்ணு போல் சித்திரிக்கப்பட்டிருந்தார். அவர் அந்தக் காலத்தில் எந்தெந்த விளம்பரங்களில் ஒப்பந்தமாகியிருந்தாரோ அந்த நிறுவனங்களின் உற்பத்திப் பொருள்களெல்லாம் ஒவ்வொரு கையிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. ஓர் கையில் பாதணியும் வைக்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையிலேயே டோனி மத அவமதிப்புச் செய்துவிட்டார் என்று தெரிவித்து வழக்குத் தொடரப்பட்டது. கிட்டத்தட்ட கடந்த மூன்று வருடங்களாக நடைபெற்றுவந்த இந்த வழக்கு நேற்றுமுன்தினம் நிராகரிக்கப்பட்டது. பத்திரிகையின் ஆசிரியர் மீது தொடரப்பட்ட வழக்கும் கைவிடப்பட்டது. டோனியும், பத்திரிகையின் ஆசிரியரும் தீய நோக்கத்துடன் மத உணர்வுகளை புண்படுத்தியதாகத் தெரியவில்லை, எனவே இந்தக் குற்றச்சாட்டை ஏற்க முடியாது என்று தெரிவித்தே வழக்கு நிராகரிக்கப்பட்டது. (ம)

# மொனாக்கோ ரென்னிஸ் வாவ்ரிங்கா படுதோல்வி

மொனாக்கோ ரென்னிஸ் தொடரில் அதிர்ச்சித் தோல்வி கண்டு வெளியேறினார் சுவிற்சர்லாந்து வீரர் வாவ்ரிங்கா.
பன்னாட்டுத் தரப்படுத்தலில் மூன்றாவது இடத்தில் இருக்கும் வாவ்ரிங்காவை எதிர்த்து 27 ஆவது இடத்தில் உள்ள உருகுவே வீரர் பாப்லோ கியூவாஸ் மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் முறையே 6:4, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி வாவ்ரிங்காவை வெளியேற்றினார் பாப்லோ. இந்தத் தொடர் அடுத்து நடைபெறவுள்ள பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடரான பிரான்ஸ் தொடருக்கு ஆயத்தத் தொடர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# பலம் வாய்ந்த அணியை அறிவித்தது பங்களாதேஷ்

இங்கிலாந்தில் எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பமாகவுள்ள மினி உலகக்கிண்ணத் தொடருக்காக பலம் வாய்ந்த அணியை அறிவித்தது பங்களாதேஷ்.
ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் தத்தமது அணியை ஏற்கனவே அறிவித்திருந்தன. தற்போது பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தனது அணியை அறிவித்துள்ளது.
அண்மைக்காலத் தொடர்களில் விளையாடிவரும் அணியே அறிவிக்கப்பட்டுள்ளது. மோர்ரசா தலைவராகத் தொடரவுள்ளார்.
பங்களாதேஷ் அணியின் விவரம் - மோர்ரசா (தலைவர்), இக்பால், சர்க்கர், கையிஸ், ரகிம், சகிப் அல் ஹசன், சபிர் ரகுமான், மொகமதுல்லா, மொஸ்டக் கொசைன், ரகுமான், ருபல் கொசைன், அகமட், இஸ்லாம், மெகடி, சபிபுல் இஸ்லாம்.
இந்தத் தொடருக்காக இங்கிலாந்து, வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமான ஆடுகளம் தயாரிக்கும் என்று பொதுவான எதிர்பார்ப்பு நிலவுவதால் ரகுமான், ரூபல் கொசைன், மோர்ரசா கூட்டணி பந்துவீச்சில் பலம் சேர்க்கும் என்றும், கடந்த சில வாரமாக சிறந்த திறனில் உள்ள இக்பால், சர்க்கர், சகிப் அல் ஹசன், சபீர் ரகுமான் கூட்டணி துடுப்பாட்டத்தில் பலம் சேர்க்கும் என்றும் பொதுவான அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. (ம)



# பாரதி, ஐயனார் அணிகள் வெற்றி

தீவகம் கால்பந்தாட்ட லீக்கில் பதிவுசெய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஆட்டங்களில் பாரதி, ஐயனார் அணிகள் வெற்றிபெற்றன.
புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக் கழகமும் நண்பர்கள் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
நேற்றுக் காலை முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் புங்குடுதீவு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு ஐங்கரன் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோலெதனையும் பெறவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:2 என்ற கோல் கணக்கில் பாரதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் ஐயனார் அணி வெற்றிபெற்றது. (ம-23)






## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 31 . 08 . 1964

விண்ணில் 21 . 03 . 2017



### கலாநிதி அருள் கணேசலிங்கம்

(LLB, LLM, PhD,Solicitor -UK)
(முன்னாள் விரிவுரையாளர் சட்டபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்)

எமது சகோதரன் சுகவீனமுற்றவேளை அவருக்குப் பல்வேறு வழிகளில் உதவிகள் நல்கியும், அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து எமக்கு ஆறுதலுமளித்தும், அன்னாரின் இறுதிச்சடங்கில் எமக்குத் தோள்கொடுத்தும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்தி வீட்டுக்கிரியைகள் 20.04.2017 வியாழக்கிழமை Markham, Ontario, Canada விலுள்ள அன்னாரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெற்றது. மேலும் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு நாளை (23.04.2017) ஞாயிற்றுக்கிழமை Baba, Banquet Hall (Main Level), 330, Mc Nicoll Avenue Unit B, Scarborough, Ontario இல் நடைபெறும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

நினைவுகளுடன்...

(சி/3396) குடும்பத்தினர்.


# கொல்கத்தாவை வென்றது குஜராத்

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தாவை வென்றது குஜராத்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி 5 இலக்குகளை இழந்து 187 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக உத்தப்பா 72 ஓட்டங்களையும், நரைன் 42 ஓட்டங்களையும், கம்பீர் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரவீன் குமார், பல்க்நெர், தாம்பே, ரெய்னா நால்வரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய குஜராத், ரெய்னாவின் அதிரடியால் 10 பந்துகள் மீதமிருக்க 6 இலக்குகளை மட்டும் இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக ரெய்னா 84 ஓட்டங்களையும், மக்கலம் 33 ஓட்டங்களையும், பின்ஞ் 31 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)




### வீடு விற்பனைக்கு

வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை காரத்திகேய வித்தியாலய வீதியில் 04 பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. (சி/3403)

075 401 9628, 0045 2167 4882



## இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்



ஆலயத்தில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கடைகளுக்கான இடம் வழங்கும் நிகழ்வு 23.04.2017 (ஞாயிற்றுக்கிழமை) மு.ப 10.00 மணியளவில் ஆலய முன்றிலில் நடைபெறும் என்பதை அறியத்தருவதோடு அன்றைய தினமே பணத்தினை செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளவும்.

AKN 105

ஆலய அறங்காவலர் சபை, கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்.



உ
சிவமயம்

## திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபையால்

# தீர்க்கப்படாத நிதி சம்பந்தமான விடயங்களும் சிவாலயத்தின் கட்டட திருப்பணியும்

### 19.04.2017 உதயன் பத்திரிகை கடைசி பக்கத்தில் எம்மால் கொடுக்கப்பட்ட தகவல்களின் ஆதாரங்களை கேட்கும் அடியார்களுக்கு!









1976 இல் அடியார்களின் நன்கொடையுடன் கட்டப்பட்ட உறுதியான ஸ்திரமான மூன்றடுக்கு அம்பாள் கோபுரத்துடன் சேர்ந்திருந்த பரிவாரக் கோயில்கள், பள்ளியறை, ஆதிகால மகாலிங்கம் ஸ்தாபிக்கப்பட்ட மண்டபங்கள் அனைத்தும் அவசியமின்றி இயந்திரம் கொண்டு உடைக்கப்பட்டுவிட்டன.

உடைக்கப்பட்ட சுற்றுக்கோயில்களை 32 கோடி பணத்திற்கு மீண்டும் கட்டுவதற்கு 17.04.2017 இல் நடைபெற்ற அடிக்கல் நாட்டும் வைபவத்தில் சைவசமய நியமவிதிகளுக்கு ஒவ்வாத ஓர் நிகழ்வு

ஆட்சிக்குழு அங்கத்தவர்கள்.
சிவகுமார் நமசிவாயம் (07127 23045)
த. கணநாதலிங்கம் (077 3762755)

21/04/2017

(AJA IN 1761)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.